# பள்ளிக் கல்வித் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு 2012–13

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| I | கொள்கை | 1 |
| II | நிதி ஒதுக்கீடு | 15 |
| III | தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி விதிகள், 2011 | 20 |
| IV | கொள்கை மற்றும் திட்டங்கள் | |
| | 1. நலத்திட்டங்கள் | 24 |
| | 2. தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப முன்முயற்சிகள் | 33 |
| | 3. தொடக்கக் கல்வி | 42 |
| | 4. அனைவருக்கும் கல்வி திட்டம் | 62 |
| | 5. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி | 75 |
| | 6. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் | 97 |
| | 7. மெட்ரிகுலேசன் பள்ளிகள் | 103 |
| | 8. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் | 107 |
| | 9. பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி | 124 |
| | 10. அரசுத் தேர்வுகள் | 128 |
| | 11. ஆசிரியர் தேர்வு வாரியம் | 140 |
| | 12. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் | 144 |
| | 13. பொது நூலகங்கள் | 150 |

# பள்ளிக் கல்வித் துறை

## I. கொள்கை

பள்ளி வயது குழந்தைகள் அனைவருக்கும் தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி அளித்தலே **தமிழக அரசின் தொலைநோக்கு** ஆகும். இக்கூற்றை செயல்படுத்தும் விதமாக இவ்வாண்டு மாநில நிதிநிலை அறிக்கையில், மாநிலத்தில் உள்ள மற்றத் துறைகளுக்கான ஒதுக்கீட்டினை விட, பள்ளிக் கல்வித்துறைக்கு மட்டும் ரூ.14552.82 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள் தமது **"தமிழகத் தொலைநோக்கு 2023"(Vision Tamil Nadu-2023)** ஆவணத்தில் பின்வரும் இலக்கினை, பத்து இலக்குகளில் ஒன்றாக தெரிவித்துள்ளார்.

***"அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைக்க இந்திய நாட்டிலேயே மிக சிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை தமிழகம் ஏற்படுத்தித் தரும்".***

2012–13 ஆம் ஆண்டு பள்ளிக் கல்வித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழ்நாட்டு குழந்தைகளின் நலனுக்காக **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் தொலைநோக்கினை அடைவதற்கு சில முக்கிய முன்னோடி திட்டங்கள் பற்றி கூறப்பட்டுள்ளன.



நாட்டிலேயே தமிழகத்தை முன்னோடி மாநிலமாகத் திகழச்செய்ய, **பள்ளி வசதிகள், ஆசிரியர்கள் தரமான கல்வி மற்றும் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை** ஏற்படுத்த காலவரையறைக்கு உட்பட்ட செயல் திட்டத்தை பள்ளிக் கல்வித்துறை வடிவமைத்து செயல்படுத்தி வருகிறது.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், **2009–**ஐ நடைமுறைப்படுத்த, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமை விதிகள், **2011**(Tamil Nadu Right of Children to Free and Compulsory Education Rules, 2011)ஐ நவம்பர் **2011–**ல் வெளியிட்டு, தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. இச்சட்டம், நலிவடைந்த பிரிவினரின் குழந்தைகள் அதாவது, பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் இரண்டு இலட்சத்திற்குக் குறைவாக உள்ளோர் மற்றும் வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினரான, தாழ்த்தப்பட்ட வகுப்பினர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் ஆகியோரின் குழந்தைகள், திருநங்கை நிலை குழந்தைகள், துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகள், எச்.ஐ.வி.யால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், ஆதரவற்ற குழந்தைகள், மாற்றுத்திறனுடைய குழந்தைகள் ஆகியோருக்கு சுயநிதித் தனியார் பள்ளிகளில் சேர்க்கையில் 25% இட ஒதுக்கீட்டை அளிக்கிறது. சமூக ஏற்றத்தாழ்வுகளை குறைப்பதற்கும், கல்வியில்

அனைவருக்கும் சமநிலை என்ற சிறந்த நோக்கத்தினை அடைவதற்கும் இது வழிவகை செய்கிறது.

2012–2013 நிதிநிலை அறிக்கையில் கூறப்பட்டுள்ளவாறு 6 முதல் 14வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் பள்ளியில் சேர்ந்து பயிலுவதை உறுதி செய்யும் வகையில், அவர்களது இருப்பிடத்திற்கு அருகாமையில் ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் தொடக்கப் பள்ளியினையும், மூன்று கிலோ மீட்டர் சுற்றளவில் நடுநிலைப் பள்ளியினையும் அமைத்தல், தனியார் பள்ளிகளில் இடமளித்தல் ஆகிய அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

நல்ல உடல்நலம் கொண்ட குழந்தைகள், வசதி உடைய குழந்தைகள் மட்டுமே பள்ளிகளில் படிக்க இயலும் என்னும் எண்ணத்தை மாற்றும் வகையில், மாற்றுத்திறனுடைய குழந்தைகள், பள்ளியை விட்டு இடைநின்ற குழந்தைகள், தொலைதூரக் கிராமங்கள் மற்றும் மக்கள்தொகை குறைவாகவுள்ள குடியிருப்புகளில் உள்ள குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் பாதுகாப்பில்லாக் குழந்தைகள் ஆகியோரும் பள்ளிகளில் படிக்கும் வகையில் பல சிறப்புத் திட்டங்கள் மாநில அரசால் தொடங்கப்பட்டுள்ளன. சமூக, பாலின இடைவெளிகளைப் போக்கும் வகையில், தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினத்தைச் சேர்ந்த பெண்குழந்தைகளும் கல்வி பெற பள்ளிகள் அமைத்தல் மற்றும் பல முன்மாதிரித் திட்டங்களும் தீட்டப்பட்டுள்ளன. முதன்முறையாக ஒன்பது மாவட்டங்களில் காடுகள், மலைப் பிரதேசங்கள், எளிதில் செல்லவியலாத குடியிருப்புகள் என 361 குடியிருப்புகளிலிருந்து மாணவர்கள் பள்ளிக்கு வந்துசெல்ல ஏதுவாகப் போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேற்காண் இனங்களுக்காக ரூ.62.66 கோடி 2012–2013 ஆம் நிதியாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



6 முதல் 14 வயதிற்குட்பட்ட அனைத்து வகை குழந்தைகளையும் பள்ளியில் சேர்க்க ஏதுவாக தீட்டப்படும் இத்திட்டங்களினால் தற்போது தொடக்கப் பள்ளிகளில் உள்ள நிகர மாணவர் சேர்க்கை விகிதமாகிய(Net Enrollment Rate) 99.63% மற்றும் நடுநிலை பள்ளிகளில் உள்ள நிகர மாணவர் சேர்க்கை விகிதமாகிய 98.88% நூறு சதவிகிதமாக 2012–13 ஆம் ஆண்டின் முடிவில் உயரும் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

அனைத்து குழந்தைகளுக்கும் தொடக்கக் கல்வி வழங்குவது மட்டுமல்லாது, அனைவருக்கும் இடைநிலைக் கல்வி வழங்குவதும் இவ்வரசின் நோக்கமாகும். இதை கருத்தில் கொண்டு **மாண்புமிகு முதலமைச்சரின் "தமிழகத் தொலைநோக்கு–2023",** ஆவணத்தில் கூறப்பட்டுள்ள அனைவருக்கும் இடைநிலைக் கல்வி என்ற இலக்கினை நிறைவேற்ற பல புதிய திட்டங்களை மாநில அரசு ஏற்கனவே தொடங்கியுள்ளது. இதுவரை இல்லாத அளவிற்கு, 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாவும், 100 உயர்நிலைப்

பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாகவும் 2011–2012ஆம் கல்வியாண்டில் தரம் உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வழியில், 2012–13ஆம் கல்வியாண்டில் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேனிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படவுள்ளது. இதன் காரணமாக 2011–12 கல்வி ஆண்டின் தொடக்கத்தில் உள்ள உயர்நிலை பள்ளிகளின் எண்ணிக்கை 2234 இருந்து 2744 ஆகவும் மேனிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 2388 இருந்து 2588 ஆகவும் அதிகரிக்கும்.

கல்வியில் பின்தங்கியுள்ள ஊரக பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி பெறுவதற்கான வாய்ப்பினை உறுதி செய்ய 26 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் புதிய மாதிரிப்பள்ளிகள் (Model Schools) தொடங்குவதற்கு 2012–13ஆம் நிதியாண்டில் ரூ.78 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், இடைநிலைக் கல்வியை ஊக்கப்படுத்தவும், மேனிலைக் கல்வியில் இடைநிற்றலைக் குறைக்கவும், 10 மற்றும் 11ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ. 1500/–ம், மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ரூ.2000/–ம் சிறப்பு ஊக்கத் தொகை வழங்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் ஆணை வழங்கியுள்ளார்கள். இதன் காரணமாக 2011–12ஆம் கல்வியாண்டில் ரூ.313.13 கோடி மாணவர்களின் பெயரில் வைப்புத் தொகையாக செலுத்தப்பட்டு, 18,54,686 மாணவர்கள் பயன் பெற்றுள்ளனர். இத்திட்டத்தை 2012–13ஆம் கல்வியாண்டிலும்



தொடர்வதற்காக ரூ.366.70 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனால் 21,36,112 மாணவர்கள் வரும் கல்வியாண்டில் பயன் பெறுவார்கள்.

பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளை ஏற்படுத்தும் நோக்கில் கூடுதல் வகுப்பறைகள், குடிநீர் வசதி, கழிப்பறை வசதி, பெண்கள் மற்றும் மாற்று திறனாளிகளுக்கான தனி கழிவறை வசதிகள், சமையற் கூடங்கள் மற்றும் சுற்றுசுவர் போன்றவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 26.8.2011 அன்று சட்டமன்ற பேரவை விதி 110–ன் கீழ் அறிவித்தவாறு மேற்கூறும் உட்கட்டமைப்பு வசதிகளை அரசு தொடக்க/நடுநிலை மற்றும் உயர்நிலை/மேல் நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்த ரூ.1082.71 கோடி செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2012–13ஆம் கல்வியாண்டில் பள்ளிகளுக்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி கொடுக்கும் பொருட்டு ரூ.1507.66 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி வசதி ஏற்படுத்துதல் மற்றும் அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அனைத்துப் பள்ளிகளிலும் தரமான கல்வி வழங்குவதே அரசின் தலையாய கடமையாகும். இதனைக் கருத்தில் கொண்டு மேனிலைக் கல்வி இரண்டாம் ஆண்டு (+2) பயிலும் மாணவர்களுக்கு தரமான கல்வி அளிக்கும் பொருட்டு இம்மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம் **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால்** ஆணையிடப்பட்டது.

2011–12ஆம் கல்வியாண்டில் பயிலும் 5,30,729 மாணவர்களில் 5,640 மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கப்பட்டது. மீதமுள்ள 5,25,089 மாணவர்களுக்கும், 2012–13ஆம் கல்வியாண்டில் 5,50,947 மாணவர்களுக்கும் ஆக மொத்தம் 10,76,036 மாணவர்களுக்கு மடிக்கணினிகள் 2012–13ஆம் கல்வியாண்டின் இறுதிக்குள் வழங்கப்படும்.

2012–2013ஆம் கல்வியாண்டிலிருந்து ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை (Continuous and Comprehensive Evaluation System) பள்ளி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அறிமுகப்படுத்தப்படவுள்ளது. இதன்மூலம், மாணவர்களின் பகுத்தறியும் திறன், சிக்கலுக்குத் தீர்வுகாணும் திறன், வாழ்க்கைத்திறன்கள் போன்றவற்றை மேம்படுத்தி பள்ளிப் படிப்பின் நிறைவில் எதிர்கொள்ளக்கூடிய வெளியுலக வாழ்க்கைப் பிரச்சினைகளைச் சிறப்பாகத் எதிர்கொள்ளும் திறனை மாணவர்கள் பெறுவர். குழந்தைகள் மனப்பாடம் செய்து கற்றல் என்னும் நிலையிலிருந்து மாறி, கருத்துகளைப் புரிந்துகொண்டு அறிவைப் பெறச் செய்வதே அரசின் நோக்கமாகும். இதனை அடையும் வகையில், தொடக்கக் கல்வியிலேயே படித்தல், எழுதுதல், எண்ணறிவு ஆகிய அடிப்படை திறன்களை அளிக்கக்கூடிய எளிமையாக்கப்பட்ட செயல்வழிக் கற்றல் முறை (Simplified Activity Based Learning) அறிமுகப் படுத்தப்படும். தொடர் மற்றும்



முழுமையான மதிப்பீட்டினை உள்ளடக்கிய இம்முறை ஆசிரியர்களும் பெற்றோர்களும் மாணவர்களின் கற்றல் அடைவுகளை மேம்படுத்திட பெரிதும் உதவி புரிகிறது. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு 2013–2014ஆம் கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பிலும் 2014–2015 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பிலும் அறிமுகம் செய்யப்படும்.

பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ள இன்னும் ஒரு புதுமையான திட்டம் முப்பருவமுறையாகும்(Trimester System). இம்முறையில் மாணவர்கள் ஒவ்வொரு பருவத்திற்குரிய பாடங்களை அதிகமான புரிதலோடும், ஆழ்ந்தும் கற்றுக்கொள்ள உதவுவதால் கல்வியின் தரம் மேம்படும். கற்றல் என்பது, நினைவாற்றலை மட்டும் சோதிக்காமல், கருத்துக்களைப் புரிந்துகொண்டு உட்கிரகித்து அவற்றைத் தக்க வைப்பதேயாகும். முப்பருவமுறையும், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு இக்குறிக்கோளை கருத்திற் கொண்டே அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. முப்பருவ முறையானது, புத்தகச்சுமையை 50 விழுக்காடாகக் குறைத்து குழந்தைகளை, தசை மற்றும் எலும்புசார்ந்த நோய்களிலிருந்து பாதுகாக்கும்.

பள்ளிகளுக்குத் தேவையான ஆசிரியர்களை நியமிப்பதன் மூலமே தரமான கல்வியை மேம்படுத்த முடியும். எனவே, போதுமான ஆசிரியர் இல்லாத பள்ளிகளுக்கு 49,365 ஆசிரியர் பணியிடங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2011–12 ஆம் ஆண்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்கள் அனைவரும் 2012–

**2013**ஆம் கல்வியாண்டில் ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தேர்வு செய்து நியமனம் செய்யப்படுவார்கள்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், **2009–**ன்படி ஆசிரியர்களைத் தேர்வு செய்வதற்கு, கட்டாயமாக்கப்பட்டுள்ள ஆசிரியர் தகுதித் தேர்வு (Teacher Eligibility Test-TET) மற்றும் ஆசிரியர்களை தேர்வு செய்வதற்கு அரசின் கொள்கையான எழுத்துத் தேர்வு (Written Examination) ஆகியவை தமிழக பள்ளிகளில் கற்பித்தல் பணியில் ஆற்றல் மிக்க ஆசிரியர்களை தேர்வு செய்ய வழிவகை செய்யும்.

ஆசிரியர்களின் கற்பிக்கும் திறன்மேம்பாடு (Capacity Building) கல்வியின் தரத்தை உயர்த்தும் முக்கிய காரணியாக விளங்குவதால் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை (Directorate of Teacher Education, Research and Training), மாநிலத் தலைமை பயிற்சி இயக்ககமாக, **மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம்** (State Council for Education, Research and Training) எனத் தரம் உயர்த்தி **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** ஆணையிட்டுள்ளார்கள். இது ஆசிரியர்களுக்கான பயிற்சிகளை முறையாக வடிவமைத்து ஒருங்கிணைத்து வழங்க வழிவகை செய்யும் என்பதால், பள்ளிக் கல்வித்துறையின் வரலாற்றில் இந்நிகழ்வு முக்கியமானதொரு மைல் கல்லாகும். இந்நிறுவனம் ஆசிரியர்களுக்குப் பாடம் தொடர்பாக பயிற்சியளிப்பது மட்டுமன்றி ஊக்கப்படுத்துதல், மனப்பான்மை



மாற்றம், போன்ற பிற மென்திறன்களிலும் பயிற்சி அளிக்கும். இப்பயிற்சிகள், ஆசிரியர்கள்–மாணவர்களின் உளவியல் பிரச்சினைகளைக் (Psychological problems) கையாளும் முறைகளிலும் தனிக்கவனம் செலுத்தும். மேலும், ஆசிரியர்கள் இன்றைய மாணவர்களை கையாளும் முறைகள் குறித்து புரிந்து கொள்ளச் செய்வதும், அவர்கள் குழந்தைகளை மன அளவிலும், உடலளவிலும் துன்புறுத்தாமல் நடத்துவது குறித்தும் தேவையான ஆலோசனைகளை (counseling) வழங்கி ஆசிரியர்கள் பயிற்றுவிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு குழந்தையும் சுமையின்றி மகிழ்ச்சியுடன் கல்வி கற்றுக் கொள்ளவே விரும்பும். **2012–2013**ஆம் கல்வி ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் மகிழ்ச்சியாகக் கற்பதோடு மட்டுமல்லாமல், தங்களுக்கென தனி அடையாளமாக சிறப்பு அடையாள அட்டையும் (Smart Card) மற்றும் நான்கு வண்ணமிகு சீருடைகள், காலணிகள், புத்தகப்பை, கணித உபகரணப்பெட்டி, உலக வரைபடப் புத்தகம் (Atlas), வண்ணப் பென்சில்கள் முதலியவற்றைப் பெற இருக்கிறார்கள். இதற்கென **2012–13**ஆம் ஆண்டில் ரூ.**566.39** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தரமான கல்வி கற்பதற்குத் தேவையான அனைத்தையும் வழங்கியதுடன், **பெருங்குணமுடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் அரசு மற்றும் நிதியுதவிபெறும் பள்ளிகளில்

ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் நோட்டுப் புத்தகங்களும் வழங்க உள்ளார்கள். இதற்காகத் தமிழக அரசின் 2012–2013ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் ரூபாய் 150 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

மாணவர்களுக்கான சிறப்பு ஊக்கத் தொகை, மடிக்கணினி, சீருடை, புத்தகப்பை மற்றும் கல்வி உபகரணங்கள், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை, முப்பருவ முறை மற்றும் ஆசிரியர் திறன் மேம்பாட்டு பயிற்சி ஆகியவை அளிப்பதன் மூலம் தமிழக குழந்தைகள் தேசிய அளவில் மட்டுமின்றி உலகளவிலும் தங்களுக்கென ஒரு தனி இடத்தை தக்க வைத்துக் கொள்வார்கள்.

மார்ச், ஏப்ரல் 2012–ல் நடைபெற்ற 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பள்ளி பொதுத் தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களுக்கும், மாணவர்களின் புகைப்படத்துடன் கூடிய நுழைவுச் சீட்டு அரசு தேர்வுதுறையால் வழங்கப்பட்டுள்ளது. இச்செயல் அனைவராலும் வரவேற்கப்பட்டது. இதன் மூலம் ஆள்மாறாட்டம் நடைபெறுவது முற்றிலும் தடுக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாணவர் புகைப்படம் மற்றும் பாதுகாப்பு குறியீடு கொண்ட மதிப்பெண் சான்றிதழ் வழங்க ஆணையிட்டுள்ளார்கள். இவ்வகை மதிப்பெண் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு ஒரு மதிப்புமிக்க சான்றிதழ்களாக (Valid Document) பயன்படுவதோடு, போலி மதிப்பெண் சான்றிதழ்களை முற்றிலும் ஒழிக்கும் என்பதில் ஐயமில்லை. அதன்படி தற்போது



10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதியுள்ள 19,67,831 மாணவர்களுக்கு இப்புதிய மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

2012–13ஆம் கல்வியாண்டில் தகவல், தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தில் (Information, Communication and Technology) ஒரு சிறந்த முயற்சியாக அரசு கேபிள் தொலைக்காட்சி நிறுவனத்தின் மூலம் கல்விக்காக தனியான அலைவரிசை (Education Channel) ஒன்று அறிமுகப்படுத்தப்படும். இது மாணவர்களுக்கு பள்ளி நேரம் முடிவடைந்த பிறகு வீட்டிலிருந்த படியே தரமான கல்வியை பெறுவதற்கு துணைபுரியும். மேலும், பெரும்பாலான மாணவர்களுக்கு எட்டாக் கனியாக விளங்கும் சிறந்த தனிப்பயிற்சி, கருத்தரங்குகள், விரிவுரைகள் மற்றும் கற்றல் தொடர்பான நிகழ்ச்சிகள் இவை அனைத்தும், இதன் மூலம் பெறுவதற்கு வாய்ப்பு கிடைக்கும்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பள்ளிக் கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர் தலைமையில் வல்லுனர் குழு ஒன்றை அமைத்துள்ளார்கள். இக்குழு, தற்போதைய கல்வி முறை, கலைத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் ஆகியவற்றை ஆய்வு செய்து கல்வியின் தரத்தை உயர்த்துதல், உட்கட்டமைப்பு மற்றும் கண்காணிப்புப் பணிகளை செய்யும். மேலும், தமிழகத்தை கல்வியில் முதன்மை மாநிலமாக மாற்றுவதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கும்.

இந்திய திருநாட்டில் தரமான கல்வி வழங்குவதற்காக தேசிய கலைத்திட்ட வடிவமைப்பு, **2005** (National Curriculum Framework, 2005) அடித்தளமாக உருவாக்கப்பட்டது. மேலும், தரமான கல்வி வழங்குவதற்காக ஒவ்வொரு மாநில அரசும், அந்தந்த மாநிலத்திற்கேற்ப கலைத்திட்ட வடிவமைப்பினை தயார் செய்திட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் **மாண்புமிகு முதலமைச்சர்** அவர்கள், தமிழ்நாடு கலைத்திட்ட வடிவமைப்பு, **2012** (Tamil Nadu Curriculum Framework, 2012) உருவாக்கிட ஆணையிட்டுள்ளார்கள். இதன் மூலம் எதிர்காலத்தில் மாநிலத்தில் உயர்ந்த கல்வித் தரத்தினை வழங்க புதிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிலைக்குச் செல்வதற்கு மேனிலைக் கல்வி ஒரு அடித்தளமாக அமைகிறது. எனவே, உயர்கல்வி பயிலக்கூடிய வகையில் மேனிலைக் கல்வியின் தற்போதுள்ள பாடத்திட்டங்களை மாற்றி அமைக்க வேண்டியுள்ளது. தற்போது பின்பற்றப்படும் மேனிலைக் கல்வி பாடத்திட்டம் **2004–05**ஆம் கல்வியாண்டில் உருவாக்கப்பட்டது. எனவே, மாணவர்கள் உயர்கல்வியினை எளிமையாக பயிலுவதற்கு ஏற்ப தற்போதுள்ள மேனிலைக் கல்வி பாடத்திட்டத்தை மாற்றியமைக்கும் பொருட்டு, உரிய பரிந்துரைகள் வழங்க உயர்மட்ட குழு ஒன்றினை அமைக்க **மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் இசைவு தெரிவித்துள்ளார்கள்.



பள்ளிக் கல்வித் துறை ஏழு இயக்ககங்களையும், தொடக்க கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியினை மேம்படுத்த ஏற்படுத்தப்பட்ட இரு சங்கங்களான அனைவருக்கும் கல்வி திட்டம், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் மற்றும் ஆசிரியர் தேர்வு வாரியம், தமிழ் நாட்டு பாடநூல் நிறுவனம் ஆகியவற்றை உள்ளடக்கி அனைவருக்கும் கல்வி என்ற இலக்கை எட்ட அயராது பாடுபடுகிறது. **2011–12–**ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு ரூ.**13333.66** கோடியில் இருந்து **9.15%** உயர்த்தப்பட்டு **2012–13–**ல் ரூ.**14552.82** கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இது இத்துறையின் தொலைநோக்கினை முன்னெடுத்துச் செல்ல உதவும்.

**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் சிறந்த வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டு குழந்தைகளுக்கு உயர்தரத்தில் கல்வியை வழங்கும் பொருட்டு, பள்ளி வசதிகளை ஏற்படுத்துதல், தரமான கல்வி வழங்குதல், போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி அனைத்து மாணவர்களுக்கும் தொடக்கக் கல்வி மற்றும் இடைநிலைக் கல்வியை வழங்குவதன் மூலம் **“தமிழக தொலைநோக்கினை”** விரைவில் அடைய முடியும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

# II. நிதி ஒதுக்கீடு

மானியக் கோரிக்கை எண்.43, பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் 2012–2013 ஆம் ஆண்டிற்கான மொத்த ஒதுக்கீடு **ரூ.14552.82** கோடியாகும். இதில் திட்டப் பணிகளுக்கு மட்டும் **ரூ.2694.73** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

| 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதி ஒதுக்கீடு | | | | | |
|---|---|---|---|---|---|
| | கணக்குத் தலைப்பு | | திட்டப் பணிகள் | திட்டத்தில் சேராதது | மொத்தம் |
| ***வருவாய் பகுதி*** | | | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 2059 | பொதுப் பணிகள் | | **0.00** | 4042.00 | 4042.00 |
| 2202 | பொதுக் கல்வி | | | | |
| | 01 | தொடக்கக் கல்வி | 119239.88 | 579349.33 | 698589.21 |
| | 02 | இடைநிலைக் கல்வி | 105597.96 | 594769.74 | 700367.70 |
| | 04 | வயது வந்தோர் கல்வி | 500.01 | 121.50 | 621.51 |
| | 05 | மொழி வளர்ச்சி | 2.52 | 1446.45 | 1448.97 |
| | மொத்தம் – பொதுக் கல்வி | | **225340.37** | **1175687.02** | **1401027.39** |
| 2204 | போட்டி விளையாட்டுகளும், இளைஞர் நலப்பணிகளும் | | 494.54 | 232.87 | 727.41 |
| 2205 | கலையும், பண்பாடும் | | 0.01 | 4957.60 | 4957.61 |
| 2225 | ஆதிதிராவிடர் பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன் | | 13465.60 | 44.41 | 13510.01 |
| 2235 | சமூகப் பாதுகாப்பும், நலனும் | | 0.00 | 346.07 | 346.07 |
| 2251 | தலைமைச்செயலகம் – சமூகப் பணிகள் | | 0.00 | 476.72 | 476.72 |
| | நிகர மொத்த வருவாய்ப் பகுதி | | ***239300.52*** | ***1185786.69*** | **1425087.21** |
| ***மூலதனச் செலவு பகுதி*** | | | | | |
| 4202 | மூலதனச் செலவு | | 30172.29 | 0.00 | 30172.29 |
| | மொத்த மூலதனச் செலவு பகுதி | | ***30172.29*** | ***0.00*** | **30172.29** |
| ***கடன்கள் பகுதி*** | | | | | |
| 7610 | அரசுப் பணியாளர் முதலானோருக்குக் கடன்கள் | | 0.00 | 4.91 | 4.91 |
| 7615 | பல்வகைக் கடன்கள் | | 0.00 | 0.49 | 0.49 |
| | மொத்த கடன்கள் பகுதி | | ***0.00*** | ***5.40*** | **5.40** |
| | **நிகர மொத்தம்** | | **269472.81** | **1185792.09** | **1455264.90** |
| | கூட்டுக – திருப்பி வசூலிப்பவை (வருவாய் இனத்தின் கீழ்) | | | | 17.31 |
| | **மான்யக் கோரிக்கை எண்.43ன் நிகர மொத்தம்** | | | | **1455282.21** |



## 2012–2013ம் ஆண்டிற்கான பகுதி II திட்டங்கள்

| வ. எண் | திட்டப்பணிகளின் விபரம் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **தலைமைச் செயலகம் – பள்ளிக்கல்வித் துறை** | | |
| 1. | தலைமைச் செயலக பள்ளிக்கல்வித் துறையை கணினிமயமாக்கல். | 24.00 |
| **பள்ளிக்கல்வி** | | |
| 2 | 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உபகரணங்கள் வழங்குதல். | 100.00 |
| 3 | 100 உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 மேல்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியை மேம்படுத்துதல். | 40.00 |
| 4 | 250 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ஆங்கில மொழி ஆய்வகம் அமைத்தல். | 25.00 |
| 5 | பள்ளிக் கல்வி இயக்குநரகத்தை கணினி மயமாக்கல். | 33.50 |
| 6 | 15 முதன்மைக் கல்வி அலுவலகங்–களுக்கு புதிய வாகனங்கள் வழங்குதல். | 90.00 |
| 7 | பள்ளிக்கல்வி இயக்கத்திற்கு ஜெனரேட்டர் (Generator) வாங்குதல். | 15.00 |
| 8 | பள்ளிக்கல்வி இயக்கத்திற்கு சுத்தி–கரிக்கப்பட்ட குடிநீர்வசதி அமைத்தல். | 0.60 |
| **தொடக்கக் கல்வி** | | |
| 9 | 4 உதவி தொடக்கக் கல்வி அலுவலகங்களுக்கு கட்டடம் கட்டுதல். | 72.50 |
| 10 | 32 மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகங்கள் மற்றும் திருச்சி, மதுரை (ம) கடலூர் மாவட்டங்களிலுள்ள 3 தணிக்கைப் பிரிவுகளுக்கும் கணினிகள் வழங்குதல். | 17.50 |

| | | |
|---|---|---|
| 11 | கரூர் மற்றும் திருவாரூர் மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலகளிலுள்ள கழிவு செய்யப்படும் பழைய ஊர்திகளுக்கு பதிலாக 2 புதிய ஊர்திகள் வழங்குதல். | 12.00 |
| 12 | தொடக்கக் கல்வி இயக்குநரகம் மற்றும் உதவி தொடக்கக் கல்வி அலுலகங்களை கணினிமயமாக்க கணினி மற்றும் உபகரணங்கள் வழங்குதல். | 6.45 |
| 13 | தொடக்கக் கல்வி இயக்குநரக கருத்தரங்க கூடத்திற்கு மரத் தளவாடங்கள் வாங்குதல். | 38.00 |
| 14 | தொடக்கக் கல்வி இயக்குநரகத்தில் கூடுதலாக ஒரு ஆழ் துளைக் கிணறு மற்றும் மோட்டர் அமைத்தல். | 0.70 |
| 15 | தொடக்கக் கல்வி இயக்குநரகத்திற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர்வசதி ஏற்படுத்துதல். | 0.60 |
| 16 | தொடக்கக் கல்வி இயக்குநரக பணியாளர்களுக்கு மரத்தளவாடங்கள் வழங்குதல். | 15.00 |
| 17 | பழைய அறிவியல் ஆய்வக ஊர்திகளை நீக்கி ஐந்து நடமாடும் அறிவியல் ஆய்வக ஊர்திகள் வழங்குதல். | 50.00 |
| 18 | 413 கல்வி வட்டங்களில் கல்வி உரிமைச் சட்டம் 2009 குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல். | 33.04 |
| 19 | 32 மாவட்டங்களில் கல்வி வட்டங்களில் கல்வி உரிமைச் சட்டம் 2009 குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்துதல். | 8.00 |
| **மெட்ரிக் பள்ளிகள்** | | |
| 20 | மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் ஆய்வாளர் அலுவலகத்திற்கு மரத்தளவாடங்கள் வழங்குதல். | 1.50 |



| | | |
|---|---|---|
| 21 | மெட்ரிக்குலேசன் பள்ளிகளின் இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் அலுவலத்திற்கு 2 மடிக்கணினி வழங்குதல். | 0.90 |
| 22 | 15 மெட்ரிக்குலேசன் பள்ளிகள் ஆய்வாளர் அலுவலகத்திற்கு தொலைநகலி வழங்குதல். | 2.25 |
| 23 | மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்குநரகம் மற்றும் ஆய்வாளர் அலுவலகங்களுக்கு அலமாரிகள் மற்றும் பதிவறை அமைத்தல். | 4.01 |
| **பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி** | | |
| 24 | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இணை இயக்குநருக்கு ஈப்பு வழங்குதல். | 6.00 |
| 25 | இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் கணினி அறைக்கும் 3 குளிர்சாதனம் வழங்குதல். | 1.20 |
| 26 | மிக வேகமான டாட் மேட்ரிக்ஸ் பிரிண்டர் (Dot Matrix High Speed Pinter) வழங்குதல். | 1.50 |
| 27 | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் அறைக்கு அறைகலன் வழங்குதல். | 1.10 |
| 28 | ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலகத்திற்கு கணினி மற்றும் துணைக் கருவிகள் வழங்குதல். | 1.00 |
| 29 | பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு ஒரு மடிக் கணினி வழங்குதல். | 0.45 |
| 30 | காற்று மற்றும் சூரிய சக்தி இணைந்த முறை (Wind Solar Hybrid System) வழங்குதல். | 10.50 |

| அரசுத் தேர்வுகள் | | |
|---|---|---|
| 31 | அரசுத் தேர்வுகள் இயக்குநரகத்தின் அட்டவணை பதிவேடுகளை டிஜிட்டல் முறையில் பராமரித்தல். | 10.00 |
| 32 | வேலூர் அரசுத் தேர்வுகள் மண்டல அலுவலகத்திற்கென அலுவலக கட்டிடம் கிடங்கு வசதியுடன் கட்டுதல். | 60.00 |
| 33 | கழிவு செய்யப்படும் அலுவலக ஊர்திகளுக்குப் பதிலாக 4 புதிய ஊர்திகள் வாங்குதல் | 24.00 |
| 34 | அரசுத் தேர்வுகள் இயக்குநரக அதிகாரிகளின் பயன்பாட்டிற்காக 4 மடிக்கணினி வழங்குதல் | 1.80 |
| 35 | தேர்வுப் பணிக்காக மண்டல அலுவலகங்களுக்கு கணினி மற்றும் துணை பாகங்கள் வாங்குதல், இன்டர்நெட் வசதி அமைத்தல் | 6.00 |
| 36 | அரசுத் தேர்வுகள் இயக்குநரகத்தில் கண்காணிப்பு கேமிரா பொருத்துதல். | 2.50 |
| **ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி** | | |
| 37 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்கத்தை வலுப்படுத்துதல். | 10.50 |
| 38 | மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனங்களை வலுவூட்டுதல். | 16.50 |
| 39 | ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி, பயிற்சி இயக்ககத்தை மாநில கல்வி ஆராய்ச்சி, பயிற்சி குழுமமாக தரம் உயர்த்துதல். | 6.40 |
| **பொது நூலகங்கள்** | | |
| 40 | கோயம்புத்தூர் மாவட்ட நூலகத்தில் புதிதாக குழந்தைகளுக்கான தனிப்பிரிவு ஏற்படுத்துதல். | 50.00 |
| | ***மொத்தம்*** | **800.00** |



## III. தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011.

இந்திய அரசு 6 முதல் 14 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு இலவசக் கட்டாயக் கல்வி வழங்க ‘குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009’ ஐ இயற்றியது. அச்சட்டம் ஏப்ரல் 1, 2010 முதல் அமுலுக்கு வந்தது. இச்சட்டத்தை நிறைவேற்ற **தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011ஐ** தமிழக அரசு நவம்பர் 2011ல் வெளியிட்டுள்ளது. மேலும், தமிழக அரசு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (State Council for Education, Research and Training) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை அமல்படுத்தும் முகமையாக செயல்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கான கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் சார்பான செயல்பாடுகளைக் கண்காணிக்கும் அலுவலராக (Nodal officer) மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இணை இயக்குநர் (திட்டங்கள்) அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளார். குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்ட அமலாக்கப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தொடர்பு கொள்ள ஏதுவாக தொலைபேசி எண் 044–28278742, 28211391 தரப்பட்டுள்ளன.

## தயாரிக்கப்பட்ட கையேடுகள்

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் நடுவண் அரசின் சட்டம் (RTE Central Act), தமிழக அரசின் குழந்தைகளுக்கான இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிமுறைகள், 2011 (Tamil Nadu RTE Rules, 2011) மற்றும் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள், அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்(Frequently Asked Questions), செய்திக் கையேடு போன்றவற்றை உள்ளடக்கிய பயிற்சிக் கையேட்டைத் தயாரித்துள்ளது. பயிற்சியில் பங்குபெற்ற அனைவருக்கும் இக்கையேடுகள் வழங்கப்பட்டுள்ளன.

## பயிற்சி

இச்சட்டம், விதிகள், அரசாணைகள் ஆகியவற்றை முழுமையாக நடைமுறைப்படுத்த, கல்வித் துறையில் தொடர்புடைய அனைத்து பங்கேற்பாளர்களுக்கும், இது தொடர்பாக பயிற்சி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது. இச்சட்டம், விதிகள் மற்றும் அரசாணைகள் தொடர்பான பயிற்சி முதன்மைக் கல்வி அலுவலர்கள், கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர்கள், மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள், மாவட்ட தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிக் பள்ளி ஆய்வாளர்கள், உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள், வட்டார வளமைய



ஆசிரியர் பயிற்றுநர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ளது.

மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிகளின் விவரங்கள் கீழே வழங்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | மாவட்ட முதன்மைக் கல்விஅலுவலர்கள், மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்டக் கல்வி அலுவலர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் ஆய்வாளர்களுக்கு அறிமுகப் பயிற்சி |
| 2. | தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாவட்டத் ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்கான தலைமைக் கருத்தாளர் பயிற்சி |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான கருத்தாளர் பயிற்சி |
| 4. | தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரிகுலேசன், ஆங்கிலோ–இந்தியன், அரசு உதவிபெறும், தனியார் மற்றும் மத்திய கல்வி வாரிய பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான பயிற்சி |
| 5. | மாவட்ட ஆசிரியர்கல்வி மற்றும் பயிற்சி நிறுவன கல்வியாளர்களுக்கான திறன் வளர்த்தல் பயிற்சி |
| 6. | ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான முதன்மைக் கருத்தாளர் பயிற்சி |
| 7. | சுயநிதிப் பள்ளி முதல்வர்கள், ஆசிரியர் சங்க அலுவலகப் பிரதிநிதிகள், பெற்றோர் ஆசிரியர் கழக உறுப்பினர்களுக்கான பயிற்சி |
| 8. | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் மற்றும் வட்டார வளமைய ஆசிரியர் பயிற்றுநர்களுக்கான மாவட்ட அளவிலான பயிற்சி |

| | |
|---|---|
| 9. | அனைவருக்கும் கல்வி இயக்கம் மூலம் வழங்கப்பட்ட தொடக்க மற்றும் நடுநிலை வகுப்பு ஆசிரியர்களுக்கான பயிற்சி |
| 10. | மெட்ரிக்குலேஷன் பள்ளி முதல்வர்கள் மற்றும் நிர்வாகிகளுக்கு பயிற்சி |

### மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடு

அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு ஒன்றியத்திலிருந்து 30 வட்டார தன்னார்வளர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் விதிகள், இது சார்ந்து வெளியிடப்பட்டுள்ள அரசாணைகள் மற்றும் கையேடுகள் தொடர்பாக பயிற்சி அளிக்கப்பட உள்ளது. ஒவ்வொரு ஒன்றியத்திலும் கலை நிகழ்ச்சிகளை நடத்தி, அனைவருக்கும் கல்வி விதிகள் பற்றிய விழிப்புணர்வை மக்களிடம் கொண்டு செல்லும்.



# IV. கொள்கை மற்றும் திட்டங்கள்

## 1. நலத்திட்டங்கள்

### 1.1 அறிமுகம்

தமிழக அரசு மாணவர்களின் நலனில் முக்கியத்துவம் அளித்து அவர்களின் உயர்விற்கு வழிவகுத்து வருகிறது. மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதை ஊக்கப்படுத்துவது மட்டுமின்றி அவர்தம் வாழ்க்கைத்தரம் உயரவும் வழிவகை செய்து வருகிறது.

ஏற்கனவே ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சத்துணவும், 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சீருடையும், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவச பாடப்புத்தகமும், 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இலவச மிதிவண்டியும், 1 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலவச பேருந்து பயண அட்டையும் அளிக்கப்பட்டு தற்போது நடைமுறையில் இருந்து வருகிறது.

மாணவர்களின் நலனை மேலும் மேம்படுத்தும்பொருட்டு கீழ்க்கண்ட புதிய திட்டங்களை அறிவித்து அரசு செயல்படுத்தி வருகிறது.

### 1.2 மாணவர்களுக்கான நலத் திட்டங்கள்– புதிய திட்டங்கள்.

2011–2012 ஆம் ஆண்டில் அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 8 ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களுக்கு

சீருடையின் எண்ணிக்கை ஒன்றிலிருந்து இரண்டாக உயர்த்தப்பட்டது. இதன் வழி ரூ. 164.72 கோடி செலவில் 46.97 இலட்சம் மாணவர்கள் பயன் அடைந்துள்ளனர்.

மாணவர்களின் தேவையை அறிந்து அரசு 2012–2013 ஆம் ஆண்டிலிருந்து 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு சீருடையின் எண்ணிக்கையை நான்காக உயர்த்தி அறிவித்தது. 6 முதல் 8 வகுப்பு வரையிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டை மற்றும் மேல்சட்டையும், மாணவிகளுக்கு சல்வார் கமீஸ் சீருடையும் வழங்கப்பட உள்ளது. அதற்காக வரும் 2012–2013 ஆம் கல்வியாண்டில் 48.63 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையில் ரூ. 329.89 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### 1.3 இடைநிற்றலைக் குறைப்பதற்கான ஊக்கத் தொகை

கல்வி பயிலும் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்க அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 10, 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.1500–ம், 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு ரூ.2000–ம் அவர்களின் பெயரில் பொதுத் துறை நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு மாணவர்கள் படிப்பை முடிக்கும் போது வட்டியுடன் வழங்கப்பெறும். அதற்காக 2011–12ம் கல்வியாண்டில் ரூ.313.13 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. வரும் கல்வியாண்டில் 21.36 இலட்சம் மாணவர்கள் பயன் பெறும் வகையில் ரூ.366.70 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



### 1.4 பன்னிரெண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்குதல்

கற்றல் திறனை மாணவர்கள் இடையே வளர்க்கும் விதமாக அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு விலையில்லா மடிக்கணினி வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி 2011–2012 ஆம் ஆண்டில் 3118 அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு பயிலும் 5,30,729 மாணாக்கர்களுக்கு மடிக்கணினி வழங்க திட்டமிடப்பட்டது. அவற்றில் இது வரை 5,640 மடிக் கணினிகள் மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய 5,25,089 மாணாக்கர்களுக்கும் 2012–13 கல்வி ஆண்டில் கல்வி பயிலும் 5,50,947 மாணாக்கர்களுக்கும் ஆக மொத்தம் 10,76,036 மாணாக்கர்களுக்கு மடிக்கணினிகள் 2012–13 கல்வி ஆண்டிற்குள் வழங்கப்படும்.

### 1.5 காலணிகள் வழங்குதல்

மாணவர்கள் வெறும் கால்களில் நடப்பது சுகாதாரமல்ல. இதனால் மாணவர்களின் உடல் நலன் பாதிப்படையும். இதனை தவிர்க்க அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விலையில்லா ஒரு ஜோடி காலணிகள் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

இத்திட்டத்திற்காக அரசு 100 கோடி ரூபாய் 2012–2013 ஆம் கல்வி ஆண்டு வரவு – செலவு திட்டத்தில் நிதிஒதுக்கீடு செய்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் 81 இலட்சம் மாணவர்கள் பயனடைவார்கள்.

## 1.6 கல்வி உபகரணங்கள்

2012 – 2013 ஆம் ஆண்டில் மாணவர்களுக்கு கற்பித்தல் முறையை எளிதாக்க சிறப்பு கல்வி உபகரணங்களை வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் கீழ்கண்ட பொருட்கள் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

| பொருள் | வகுப்புகள் | பயனடையும் மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|
| புத்தகப் பை | 1 முதல் 12 வரை | 92.28 |
| வண்ணப் பென்சில்கள் | 1 முதல் 5 வரை | 35.00 |
| கணித உபகரணப் பெட்டி | 6 முதல் 10 வரை | 46.01 |
| உலக வரைபடப் புத்தகம் | 6 முதல் 10 வரை | 46.01 |

மேற்குறிப்பிட்ட அனைத்தும் வரும் 2012–2013ஆம் கல்வியாண்டில் வழங்கப்பட உள்ளன. இதற்கான செலவு ரூ.136.50 கோடி, வரவு – செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.



## 1.7. நோட்டுப்புத்தகங்கள் வழங்குதல்

இதுவரை மாணவர்களுக்கு வழங்கப்பெறாத நோட்டுப் புத்தகங்களையும் 2012–2013 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்க முடிவு செய்து, அதற்காக ரூ.150 கோடி வரவுசெலவு திட்ட அறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்புவரை பயிலும் 81 இலட்சம் மாணவர்கள் பயனயடைவார்கள்.

## 1.8. சதுரங்க விளையாட்டினை பள்ளிகளில் அறிமுகப்படுத்தல்

2012–2013ஆம் கல்வியாண்டில் 7 முதல் 17 வயது வரையுள்ள அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவர்களுக்கும் சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்படவுள்ளது. பள்ளிக் கல்வித் துறையும், மாநில விளையாட்டு ஆணையமும் இணைந்து பள்ளிகளில் சதுரங்கச் சங்கங்களை நிறுவி, மாணவர்களின் திறனை வெளிக்கொணரும் வகையில் பள்ளி, மாவட்டம், மண்டலம், மாநில அளவிலான போட்டிகள் நடத்தப்படும்.

தேசிய மற்றும் உலகளாவிய போட்டிகளில் மாணவர்கள் பங்கு பெறும் வகையில் ஆசிரியர்களுக்குத் தேவையான பயிற்சிகள் அளிக்கப்படும்.

## மாணவர்களுக்கான நலத்திட்ட உதவிகள் – நடைமுறையிலுள்ள திட்டங்கள்

### 1.9 புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்

அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 10ஆம் வகுப்பு பயிலும் 46.97 இலட்சம் மாணவர்களுக்கு இலவச மதிய உணவு வழங்கப்பெற்று பயனடைந்து வருகின்றனர். 2012–13ம் ஆண்டில் இத்திட்டத்தின் மூலம் 48.63 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.

### 1.10. பாடநூல் வழங்குதல்

அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு அனைத்து பாடநூல்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. 2011–2012ஆம் ஆண்டில் 7.6 கோடி பாடபுத்தகங்கள் அச்சிடப்பட்டு 92 இலட்சம் மணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

2012–2013 முதல் முப்பருவக்கல்வி முறையை அறிமுகப்படுத்தி, அதன்படி 8 கோடி பாடப்பத்தகங்கள் அச்சிடப்பட்டு 92 இலட்சம் மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது.

### 1.11. பேருந்து பயண அட்டை

மாணவர்கள் எளிதாகப் பள்ளிக்கு செல்ல 1 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் இலவச



பேருந்து பயண அட்டை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் வழியாக 14.02 இலட்சம் மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

### 1.12. வருவாய் ஈட்டும் தாய் / தந்தை இழந்த மாணவர்களுக்கான துயர்துடைப்பு நிதி உதவி.

இத்திட்டத்தின் மூலம் கல்வி பயிலும் மாணவர்களின் வருவாய் ஈட்டும் தாய் / தந்தையர் விபத்தில் மரணமடைந்தாலோ அல்லது நிரந்த முடக்கம் அடைந்தாலோ மாணவர்களின் கல்வி பாதிக்கப்படாமல் இருக்க ரூ.50,000/– வீதம் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்புநிதியாக செலுத்தப்படும். அரசு / அரசு உதவி பெறும் பள்ளிகளில் 1 முதல் 12ஆம் வகுப்புவரை பயிலும் மாணவர்களில் இத்திட்டத்தின்கீழ் 2011–12 வரை 4,968 மாணவர்கள் பயன்பெற்றுள்ளனர்.

## ஆசிரியர்களுக்கான விருதுகள் / பயன்கள்

### 1.13. டாக்டர் இராதாகிருட்டிணன் விருது

தமிழக அரசு 1960ஆம் ஆண்டு முதல் “நல்லாசிரியர் விருதினை” வழங்கி வருகிறது. இவ்விருதினை 1997 முதல் டாக்டர் இராதாகிருட்டிணன் விருது எனப் பெயர் மாற்றம் பெற்று ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் 5ஆம் தேதி வழங்கப்பட்டு வருகிறது. 2011–2012 ஆம் ஆண்டில் 359 ஆசிரியர்களுக்கு ரூ.5000/– ரொக்கப் பரிசும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டது.

## 1.14. ஆசிரியர்களுக்கு தேசிய விருது

மத்திய அரசு, இந்தியாவிலுள்ள அனைத்துப் பகுதிகளிலும் சிறப்பாகப் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு விருது அளித்து வருகிறது. தமிழகத்திலுள்ள தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் சிறப்பாக பணியாற்றும் 22 ஆசிரியர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு இந்திய குடியரசுத் தலைவரால் ஆசிரியர் தினத்தில் புதுடில்லியில் இவ்விருதுகள் வழங்கப்படுகிறது.

தேசிய விருதுபெறும் ஆசிரியர்களுக்கு ரூ.25,000/– ரொக்கமும், வெள்ளிப் பதக்கமும், பாராட்டுப் பத்திரமும் அளிக்கப் பெறுகிறது.

## 1.15. தேசிய ஆசிரியர் நல நிறுவனம்

தேசிய ஆசிரியர் நல நிறுவனம் 1962ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இந்நிறுவனத்திற்கு மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்கள் தலைவராகவும், பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் செயலராகவும் இருக்கின்றனர். ஆசிரியர் தினக் கொடி விற்பனை நிதியைப் பயன்படுத்தி பல்வேறு ஆசிரியர் நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

## 1.16. ஆசிரியர்களுக்கான மருத்துவ உதவி

இத்திட்டத்தின்கீழ் ஆசிரியரோ அல்லது அவரைச் சார்ந்தோரோ உடல் நலிவுற்று மருத்துவமனையில் சேர்த்து உடல்



நலம் பேணும் செலவிற்கு ரூ.50,000/– அல்லது மருத்துவச் செலவில் 75 சதவீதம் ஆகியவற்றில் எது குறைவோ அத்தொகை வழங்கப்படுகிறது.

## 1.17. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை

ஆசிரியர்களின் குழந்தைகள் தொழிற்கல்வி/ பட்டயப் படிப்பு பயின்றால் அக்குழந்தைகளுக்கு கல்வி உதவி நிதியாக முறையே ஆண்டுக்கு ரூ5,000/– மற்றும் ரூ.2,500/– வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் 2011–12ஆம் ஆண்டு 842 மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகையாக ரூ.41 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

## 2. தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்ப முன்முயற்சிகள்

### 2.1. முன்னுரை

தமிழக அரசு பள்ளிக் கல்வியில் வாசித்தல், எழுதுதல், மற்றும் பிற பாடங்களில் அடிப்படை திறன் பெறுதல் இவற்றோடு சேர்த்து, தகவல்தொடர்பு மற்றும் தொழில்நுட்பமும் பள்ளிக் கல்வியின் முக்கியமான அங்கமாக இடம் பெறும் வகையில் காலவரையறைக்குட்பட்ட செயல்திட்டம் ஒன்றை உருவாக்கி உள்ளது.

தற்போது, அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் கணினி, அச்சு இயந்திரங்கள், பல்லூடக காட்சிச் சாதனங்கள், தடையில்லா மின்சாரம் வழங்கும் மின்கலங்கள் மற்றும் தேவையான தளவாடப் பொருட்களும் வழங்கப்பட்டு உள்ளன. மேற்கண்ட பள்ளிகளுக்கு இணையதள இணைப்பு வசதிகள் வழங்கப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகளில் ஓர் அங்கமாக கல்வி சார்ந்த மென்பொருள்கள், குறுந்தகடுகள் மற்றும் பயன்பாட்டு மென்பொருள்களும் வழங்கப்பட்டுள்ளன. மேற்காண் தகவல் தொடர்பு தொழில் நுட்ப உபகரணங்கள் பள்ளிகளில் மாணவர் கணிணியைப் பயன்படுத்தி அனைத்துப் பாடங்களையும் பகுப்பாய்வு செய்து கற்க ஏற்புடைய சூழலை உருவாக்கவே வழங்கப்பட்டுள்ளன. இணைய தள இணைப்பு வசதி, மாணவர்கள் பல்வேறு ஆதாரங்களிலிருந்து



தகவல்களைப் பெற்று தொகுத்து பாடங்களை முழுமையாகப் புரிந்து தேர்ச்சி பெறுவதற்காக உருவாக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் கணினிக் கருவிகளைப் பற்றி முழுமையாக அறிந்து கொள்ளவும் அவற்றைப் பயன்படுத்தி, பல்வேறு பாடம் சார்ந்த தகவல்களைச் சேகரிக்கவும், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினி மூலம் கல்வியை முறையாகக் கற்று கணினியில் அடிப்படைத் திறன்களை முழுமையாகப் பெறவும் ஆசிரியர்களுக்கு அவை சார்ந்த தீவிர பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேற்கூறிய குறிக்கோள்களை தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்ப முன்முயற்சிகள் மற்றும் அது சார்ந்த பயன்பாடுகளின் மூலம் சிறந்த தரமான கல்வியினை அளிப்பதுடன், அரசினுடைய பின்வரும் முன்முயற்சிகளுக்கும் வழிவகுத்துள்ளது.

### 2.2 கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை

தற்போது பள்ளிக் கல்வித் துறை தகவல் தொடர்பு மற்றும் இணையதள வசதிக்கு தேசிய தகவல் மையம் மற்றும் அதன் இணையதள உதவியோடு இயங்கி வருகிறது. அதிக அளவிலான தொடர்பு மற்றும் புள்ளி விவரங்களை தன்னகத்தே கொண்ட பள்ளிக் கல்வித்துறைக்கு தனக்கென்று தனியான இணையதளம் வைத்துக் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. இதைக் கருத்திற்கொண்டு

கல்விசார் மேலாண்மைத் தகவல் முறை (EMIS) நிறுவ அரசு முடிவு செய்தது.

தற்சமயம் இக்கல்வித் தகவல் மேலாண்மை முறைமையில் பள்ளிகள், ஆசிரியர்கள், மாணவர்கள், அலுவலர்கள் போன்றோரது முழுமையான தகவல்கள் 2012–13 கல்வியாண்டின் இறுதிக்குள் கிடைக்கப் பெறும். இந்த வலைதளம் கல்விப் பாடப்பொருள் வழங்கும் இணையமாகவும், துறைகளுக்கிடையே தொடர்பினை அளிக்கும் விதமாகவும் செயல்படும். 2012–13ம் கல்வியாண்டின் இறுதிக்குள் பள்ளிகள் சார்ந்து அனைத்துத் தகவல்களும் பதிவேற்றம் செய்யப்பட்டு அனைவருக்கும் எளிதில் கிடைக்கும் வண்ணம் வழிவகை செய்யப்படும். இது தகவல் மற்றும் புள்ளிவிவர பரிமாற்றத்தினை மேம்படுத்துவதுடன் தரவு பகுப்பாய்வுக்கும் / செயலாக்கத்திற்கும் உதவிகரமாக அமையும்.

## 2.3. குறுஞ்செய்தி மூலம் வருகைப் பதிவு

ஆசிரியர்களின் செயல்பட்டினை முறையாக கண்காணிப்பதற்கு அவர்களுடைய வருகைப் பதிவினை குறுஞ்செய்தி மூலம் கண்காணிப்பதற்கு கணினி பயன்பாட்டு மென்பொருள் உருவாக்கப்படும் என **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்** அறிவித்துள்ளார்கள். இதற்கான மென்பொருள் வடிவமைக்கப்பட்டு பள்ளிகள் திறக்கும் நாளான 2012, ஜூன் 1ம் நாள் முதல் செயல்பாட்டுக்கு வரும். ஆசிரியர் மற்றும்



ஆசிரியரல்லாதோரின் வருகையை குறுஞ்செய்தி மூலம் தலைமை ஆசிரியர் மையக்கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பி பதிவு செய்வார். அங்கிருந்து வருகைப் பதிவுசார் தகவல் அனைத்து பள்ளிக் கல்வித் துறை உயர் அலுவலர்களுக்கு உடனடியாக மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும். இது பள்ளி ஆசிரியர்களின் வருகையினை உறுதி செய்து ஒழுங்குபடுத்த உதவும்.

## 2.4 ஸ்மார்ட் கார்டு

குழந்தைகள் பள்ளிவிட்டு வேறு பள்ளி இடம் பெயர்தல், பள்ளியிலிருந்து இடைநிறுத்தல் குறித்த விவரம், உடல் நலம் மற்றும் இதர தகவலையும் கண்காணிப்பதற்கு ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்துவமான அடையாள அட்டை அவசியமாகிறது. ஜீன், 1, 2012 முதல் அரசு மற்றும் நிதியுதவி பெறும் பள்ளி மாணவர்களுக்கு ஸ்மார்ட் கார்டு வழங்கப்படும். இந்த அட்டையில் குழந்தை பற்றிய அனைத்து விவரங்களும் இடம்பெறும். மேலும், அத்தகவல்கள் மைய கணினியில் சேமித்து வைக்கப்படும். இந்தத் தகவல் மாணவர்களுக்கான வசதிகளை தேவைக்கேற்ப அரசிடம் கோரிப் பெற்றுத்தர வழிவகுக்கும். இந்த அட்டை பள்ளி கல்வியின் கல்விசார் மேலாண்மை தகவல் முறைமை வலைத்தளத்தோடு ஒருங்கிணைக்கப்படும்.

## 2.5 கல்விசார் பாடப்பொருள் பகிர்ந்தளிக்கும் தளம் (ECS)

மடிக்கணினிகளையும் கணினிகளையும் வழங்கிய பின் மாணவர்கள் நன்றாக கற்கத் தேவையான பாடப்பொருளையும் தரவேண்டியது அவசியமாகும். கல்வி மேலாண்மை தகவல் வலைதளம் பல்வேறு பாடப்பொருள்களை சேமித்து வைத்துள்ள மின்னனு நூலகமாகவும் செயல்படும். கல்வி சார் மற்றும் கல்வி இணைச் செயல்பாடுகளைத் திறம்படச் செய்யத் தேவையான விவரங்களைத் திரட்டவும் இது உதவும். இவ்வலைத்தளத்தின் பாடப் பொருட்களை தொடர்ந்து அவ்வப்போது புதுப்பிக்க வகை செய்வது இதன் சிறப்பம்சமாகும்.

## 2.6. பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில்நுட்பம் (ICT @ School)

இத்திட்டம் பதினொன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் நடுவண் அரசால் ஆதரவளிக்கப்பட்டுள்ள திட்டங்களின் கீழ் 75:25 என்ற விகிதாச்சாரத்தில் நடுவண் அரசும் தமிழக அரசும் இணைந்து பள்ளிகளுக்கு கணினிகள் வழங்கப்பட்டு வருகிறது. 2011–12 ம் கல்வி ஆண்டு முதல் ஐந்தாண்டுகளில் 431 உயர்நிலைப் பள்ளிகளிலும், 1910 மேல்நிலைப்பள்ளிகளிலும் (மொத்தம் 2341 பள்ளிகள்) தகவல் தொடர்பு தொழில்நுட்ப வசதி ‘‘உருவாக்கி, உரிமையாக்கி, இயக்கி மாற்றுதல்’’ (Built, Own, Operate and Transfer – BOOT model) மாதிரியின் அடிப்படையில்



ஏற்படுத்தப்படும். இந்த திட்டத்திற்காக 149.82 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் தவணையாக ரூ.31.21 கோடி ரூபாய் அரசால் 2011–12 ம் கல்வி ஆண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 29,06,184 மாணவர்கள் பயன்பெறுவர்.

## 2.7. அறிவுசார் பள்ளிகள் (SMART SCHOOLS)

அடுத்த நூற்றாண்டில் களமிறங்கும் அறிவுசார் தகவல் தொடர்பு தொழில் நுட்பங்களை, பயன்படுத்துவது மட்டுமின்றி, கணினித் திறன்களையும் விழுமியங்களையும் (Computer skills and values) மாணவர்களுக்கு வழங்குவதே **அறிவுசார் பள்ளிகளாகும்.** இத்தகு பள்ளிகளில் மாணவர்கள் வெகுவாக கல்வித் திறனடைவு பெற்று முன்னேறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

2011–12ல், 5 அறிவுசார் பள்ளிகளுக்கு மாநிலஅரசுத் திட்டத்தின் கீழ் தலா 25 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு மொத்தம் 1.25 கோடி ரூபாய் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்செந்துரை, அயிலாப்பேட்டை, எட்டரை, சோமரசம்பேட்டை மற்றும் இனாம்குளத்தூர் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் வகுப்புகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

நாமக்கல் மாவட்டத்தில் ஆர்.புதுப்பாளையத்திலும், தேனி மாவட்டத்தில் பெரியகுளத்திலும், விருதுநகர் மாவட்டத்தில் வீரசோழனிலும், திண்டுக்கல் மாவட்டத்தில் பழனியிலும் மற்றும் மதுரை மாவட்டத்தில் மேலூரிலும் அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அறிவுசார் பள்ளிகள் துவக்க தலா 25 லட்சம் ரூபாய் வீதம் 1.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இச்செலவினத்தை 75:25 விகிதத்தில் மைய மாநில அரசுகள் பகிர்ந்து கொள்கின்றன

## 2.8. கல்வித் திட்டம் (PROJECT SHIKSHA)

மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தோடு இணைந்து "ப்ராஜக்ட் சிக்ஷா" எனும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. அரசுப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு கணினிப் பயிற்சி வழங்க அரசுக்கும் மைக்ரோசாஃப்ட் நிறுவனத்துக்குமிடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டுள்ளது. ஏழு மாவட்டங்களில், ஒவ்வொரு வட்டத்தில் 25 ஆசிரியர்கள் கொண்ட குழுவிற்கு பயிற்சி அளிக்க 2012–13 வரை இந்த ஒப்பந்தம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

## 2.9. பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில் நுட்பம் (ICT @ SCHOOL)

உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினி வசதி பள்ளிகளில் தகவல் தொடர்பு தொழில் நுட்பம் திட்டம் மூலம் வழங்கப்பட்டுள்ளது. எனவே தமிழக அரசு இந்த வசதியை



தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைக் கல்வி வகுப்புகளிலும் குழந்தைகளுக்கு இளம் வயதிலிருந்தே கணினி பயன்பாட்டின் பயிற்சி வழங்கும் நோக்கத்துடன் **பள்ளிகளுக்கான தகவல் தொடர்பு தொழில்நுட்ப திட்டத்தினை (ICT @ Schools)** அறிமுகப்படுத்தியுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 20,420 பள்ளிகளில் 2012–13 முதல் 2015–16 வரை படிப்படியாக கணினிகள் வழங்கப்படும். கணினியோடு சேர்த்து பல்லூடக ஒளி எறிவுக் கருவி (Multimedia Projector) அதற்கான திரையும் வழங்கப்படும். இந்த வசதி நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கணினியுடன் இணைய தளத்தையும் இணைத்துப் பயன்படுத்தி மாணவர்கள் தமது பாடங்களை விருப்பத்தோடு கற்க வழிவகை செய்கிறது.

## 2.10 ஆறு முதல் பத்து வகுப்பு வரை படிக்கும் மாணவர்களுக்கு கணினிக் கல்வி

தமிழ் மற்றும் ஆங்கில வழி 6ம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு கணினிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான பாடநூல்கள் அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படும்.

## 2.11 கணினி உதவியுடன் மொழிப்பாடம் கற்றல் (Computer Aided Language Learning Laboratories-CALL Lab)

248 அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது செயல்பட்டு வரும் கணினி ஆய்வுக் கூடங்களுக்கு ரூ.25 இலட்சம் செலவில் மென்பொருள் மற்றும் வன்பொருள்கள் வழங்கப்பட்டதன் மூலம் அவை கணினி உதவியுடன் கூடிய மொழி ஆய்வுக் கூடங்களாக மாற்றப்பட்டுள்ளன.



# 3. தொடக்கக் கல்வி

## 3.1. அறிமுகம்

6 முதல் 14 வயது வரையில் உள்ள அனைத்து பள்ளி வயதுக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதை உறுதி செய்வதே மாநிலத்தின் முக்கிய நோக்கமாகும். இந்த உன்னத நோக்கத்திற்காக தமிழக அரசு, குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைக்கான விதிகளை நவம்பர் – 2011 ல் வெளியிட்டது. தொடக்க மற்றும் நடுநிலைக் கல்விக்குத் தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதுடன் 2012–2013 ம் ஆண்டிற்குள் 6 முதல் 14 வயதுள்ள அனைத்து பள்ளி வயது குழந்தைகளையும் முறையான பள்ளியில் சேர்த்து, 100% சேர்க்கையை உறுதி செய்வதே மாநிலத்தின் நோக்கமாகும்.

தொடக்கக் கல்விக்கென தனி கவனம் செலுத்தி அதன் தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் 1986ல் தொடக்கக் கல்வி இயக்ககத்தினை தமிழக அரசு ஏற்படுத்தியது. கடந்த 25 ஆண்டுகளில் தொடக்கப் பள்ளிகளில் நிகர சேர்க்கை வீதம் (NER) 99.63 சதவீதத்தையும் நடுநிலைப் பள்ளிகளில் 98.88 சதவீதத்தையும் எட்டும் விதத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. 2012–2013 கல்வி ஆண்டு வரவு செலவு திட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 100% பள்ளி வயது குழந்தைகள் சேர்க்கையை அடைந்திட இந்த இயக்ககம் அயராது பாடுபடும்.

தொடக்கக் கல்வி இயக்ககம் ஒரு மூத்த இயக்குநரை தலைமையாகக் கொண்டு இரண்டு இணை இயக்குநர்கள் மற்றும் 4491 ஆசிரியரல்லாத பணியாளர்களின் உறுதுணையுடன் இயங்கி வருகிறது. இவ்வியக்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் 34,871 தொடக்கப் பள்ளிகளும், 9,969 நடுநிலைப் பள்ளிகளும் உள்ளன. தொடக்கப் பள்ளிகளில் 31.79 இலட்சம் மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 21.52 இலட்சம் எனவும், ஆக மொத்தம் 53.31 இலட்சம் குழந்தைகள் பயின்று வருகின்றனர். தரமான கல்வி என்பது தொடக்கக் கல்வியின் மிக முக்கியமான அம்சமாகும். பள்ளிகளின் தரத்தினை வலுவூட்ட போதுமான ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருகிறது. தற்போது மாநிலத்தில் உள்ள மொத்த ஆசிரியர்களில் 25.46 சதவீதம் தொடக்கப் பள்ளிகளிலும், 14.55 சதவீதம் நடுநிலைப் பள்ளிகளிலும் ஆகமுறையே 1.36 இலட்சம் மற்றும் 0.75 இலட்சம் ஆசிரியர்கள் தொடக்கப் பள்ளிகளிலும் மற்றும் நடுநிலைப் பள்ளிகளிலும் பணியாற்றி வருகிறார்கள். மேலும், இதனை வலுவூட்ட 7907 இடைநிலை ஆசிரியர்கள், 3142 பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் 1871 தலைமை ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட உள்ளார்கள். இந்நியமனங்கள் அனைத்தும் 2012–13ம் கல்வியாண்டிற்குள் நிறைவடையும்.

நமது மாநிலத்தில், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் உரிமைச் சட்டம் – 2009ல் நிர்ணயித்த



ஆசிரியர் மாணவர் விகிதம் (PTR), தொடக்கப் பள்ளிகளில் 1:30 நடுநிலைப் பள்ளிகளில் 1:35 என்பதைவிட மேன்மையாகவே உள்ளது. தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதமானது 2002–2003இல் 1:41 என்ற விகிதத்திலிருந்து தற்போது 1:27 என்ற விகிதமாகக் குறைந்தும், நடுநிலைப் பள்ளிகளில் 1:49 என்ற விகிதத்திலிருந்து தற்போது 1:29ஆகக் குறைந்தும் உள்ளது.

| பள்ளியின் வகைகள் | தேவையான ஆசிரியர் மாணவர் விகிதம் | தற்போதைய ஆசிரியர் மாணவர் விகிதம் |
|---|---|---|
| தொடக்கப் பள்ளிகள் | 1:30 | 1:27 |
| நடுநிலைப் பள்ளிகள் | 1:35 | 1:29 |

<u>தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் ஆசிரியர் மாணவர் விகிதம்</u>

***Trend in PTR Primary***



***Trend in PTR Upper primary***




## 3.2. தொலைநோக்கு

6 முதல் 14 வயது வரை உள்ள அனைத்துக் குழந்தைகளை (குறிப்பாக பள்ளி செல்லா குழந்தைகள்) 2012–13ம் ஆண்டிற்குள் பள்ளியில் சேர்த்து 100 சதவீதம் சேர்க்கையை உறுதி செய்தல்.

தரமான கல்வியை உறுதி செய்யும் பொருட்டு குழந்தைகளின் சிந்திக்கும் திறன், நற்பண்புகள், நன்னெறி, படைப்பாற்றல் திறன் போன்றவற்றை வளர்ப்பதன் மூலம் முழுமையான ஆளுமை வளர்ச்சியை குழந்தைகள் பெறச் செய்தல் .

## 3.3.நோக்கங்கள்

100 சதவீதம் குழந்தைகள் சேர்க்கை மற்றும் தரமான கல்வி என்ற தொலைநோக்கினை எட்டிட தொடக்கக் கல்வி இயக்ககம் கீழ்கண்டவைகளை குறிக்கோளாகக் கொண்டு இயங்கி வருகிறது.



- குழந்தைகள் எளிதில் பள்ளிக்குச் செல்ல ஏதுவாக குழந்தைகளின் குடியிருப்பு இடத்திலிருந்து ஒரு கி.மீ தூரத்திற்குள் தொடக்கப் பள்ளியும், மூன்று கி.மீ தூரத்திற்குள் நடுநிலைப் பள்ளியும் உள்ளதை உறுதி செய்தல்.
- குழந்தைகளின் தேவைக்கேற்ப தரமான கல்வி பெறுவதை உறுதி செய்தல்
- மாணவர் சேர்க்கை மற்றும் 100 சதவீதம் தக்க வைத்தலை உறுதி செய்தல்
- குழந்தைகளின் அறிவாற்றலை மேம்படுத்தி உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொண்டுவருதல்.
- குழந்தைகளின்புத்தகச்சுமையை குறைத்து முப்பருவ முறை நடை முறைபடுத்துவதை உறுதி செய்தல்.
- தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டின் வழி குழந்தைகளின் முழுமையான ஆளுமை வளர்ச்சியை உறுதி செய்தல்.
- சமத்துவ அணுகுமுறைமூலம் மாற்றுத் திறனாளிகளும் பயன்பெறும் விதத்தில் அவர்கள் தேவைக்கேற்ப கல்வி அளித்தல்.
- பள்ளிகளில் போதுமான உள்கட்டமைப்பு வசதிகளை உறுதி செய்தல்.
- குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை சட்டம் – 2009 மற்றும் விதிகள் சீரிய முறையில் நடைமுறைபடுத்துவதை உறுதி செய்தல்.
- அரசு நலத் திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைபடுத்துவதுடன் தொடக்கக் கல்வியை அனைத்துக் குழந்தைகளும் வெற்றிகரமாக முடித்திட கல்வி சார்ந்த அத்தியவாசப் பொருட்களை தொடக்கக் கல்வியை முடிக்கும்வரை அளித்தல்.
- அனைத்து தனியார் பள்ளிகளும் குழந்தைகளின் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் – 2009 மற்றும்

விதிகளில் வரையறுக்கப்பட்டபடி இயங்குவதை உறுதி செய்தல்.

- கல்விசார் மற்றும் நிர்வாகம் சார்ந்தவைகளை நுணுக்கமாக கண்காணித்து, அப்பணிகள் சீரிய முறையில் நடப்பதைஉறுதி செய்தல்.
- அவ்வப்போது அரசால் வெளியிடப்படும் அனைத்து வகை சட்டங்கள், விதிகள் மற்றும் ஆணைகள் நடை முறைபடுத்துவதை உறுதி செய்தல்.

## 3.4. புதிய பள்ளிகள்

பள்ளி வயது குழந்தைகள் (100 சதவீதம்) அனைவரும் பள்ளியில் சேர்க்கப் படுவதற்க்கும் தரமான கல்வி பெறுவதற்கும், தரமான கல்வி வழங்குவதற்கும் அரசு ஆண்டுதோறும் தேவைக்கேற்ப புதிய தொடக்கப் பள்ளிகளை தொடங்கியும், தொடக்கக் பள்ளிகளை, நடுநிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தியும் வருகிறது. 300 மக்கள் தொகை உள்ள குடியிருப்பு மற்றும் ஒரு கி.மீ.தூரத்திற்குள் ஒரு தொடக்கப்பள்ளியை தொடங்கியும் 500 மக்கள் தொகை உள்ள குடியிருப்பில் 3 கி.மீ. தூரத்திற்குள் ஒரு தொடக்கப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தியும் வருகிறது.

2011–12 ம் கல்வியாண்டில், 65 தொடக்கப்பள்ளிகள் நடுநிலைப்பள்ளிகளாக உயர்த்தப்பட்டு 195 ஆசிரியர்களுடன், 4709 கிராமப்புறக் குழந்தைகள் பயன்பெறும் விதத்தில் வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.



## 3.5. உள்கட்டமைப்பு

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் உறுதுணையுடன் தேவையான பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர் அறை, வகுப்பறை, கூடுதல் வகுப்பறைகள், குடிநீர்வசதி, சமையல் அறைக்கூடம், கழிப்பிட வசதி, சுற்றுச்சுவர் போன்ற போதுமான உள்கட்டமைப்பு வசதிகளைச் செய்து தருவதுடன் மாற்றுத் திறனாளிகளின் வசதிக்கேற்ப சாய்தளம் (Ramp) மற்றும் மாற்றியமைக்கப்பட்ட கழிப்பிட வசதிகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

2011–2012ம் கல்வியாண்டில் ரூ.441.15 கோடிசெலவிலான பணிகள் கீழ்க்காணும் விதத்தில் குழந்தைகளின் நலனுக்காக நடைபெற்றுவருகின்றன.

| வ. எண் | உள்கட்டமைப்பு வகை | எண்ணி–க்கை |
|---|---|---|
| 1 | தலைமை ஆசிரியர் அறை (தொடக்கப்பள்ளி) | 139 |
| 2 | தலைமை ஆசிரியர் அறை (நடுநிலைப்பள்ளி) | 705 |
| 3 | கூடுதல் வகுப்பறை (கிராமப்புறம்) | 4237 |
| 4 | கூடுதல் வகுப்பறை ( மலைப்பகுதி) | 24 |
| 5 | கழிப்பறை வசதி | 3404 |
| 6 | பெண் குழந்தைகளுக்கான கழிப்பறை வசதி | 7262 |
| 7 | குடிநீர் வசதி (நகர்ப்புறம்) | 3356 |
| 8 | சமையல் கூடம் | 10 |
| 9 | சுற்றுச்சுவர் | 366487 மீட்டர் |
| 10 | சுற்றுச்சுவர் ( மலைப்பகுதி) | 15342 மீட்டர் |

## 3.6. ஆசிரியர் நியமனம்

“தகுதிவாய்ந்த மற்றும் தரமான ஆசிரியர்கள் தரமான கல்விக்கு இன்றியமையாதவர்கள்”.எனவே தரமான கல்வி வழங்கும் நோக்கத்துடன் போதுமான எண்ணிக்கையில் தகுதிவாய்ந்த ஆசிரியர்கள், ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலம் வெளிப்படையான தெரிவு முறையில் பணிநியமனம் செய்யப்படுகிறார்கள்.

*ஆசிரியர் பணியிடங்கள் (இடைநிலை ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்கள்*

2011–12 கல்வி ஆண்டில் 1040 தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர்களும் 831 நடுநிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அரசு உறுதியளித்தது போல் 7907 இடைநிலை ஆசிரியர்களும் 3142 பட்டதாரி ஆசிரியர்களும் நியமிக்க தக்க நடவடிக்கைகளை துவங்கி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் –2009ல் கட்டாயமாக்கப்பட்ட ஆசிரியர் தகுதித் தேர்வும் நடத்த அறிவித்துள்ளது. இந்நியமனங்கள் அனைத்தும் ஜுன் 2012 க்குள் முடிக்கப்படும்.

*பகுதி நேர ஆசிரியர்கள்*

கல்வி சார்ந்த இணை செயல்பாடுகளின் முக்கியத்துவத்தினை உணர்ந்து, அரசு ஒரு சிறப்பு திட்டமாக முதன்முறையாக நடுநிலைப்பள்ளிகளில் 16549 பகுதி நேர ஆசிரியர்களை நியமித்துள்ளது. இந்த ஆசிரியர்கள் மாணவர்களிடம்



மறைந்துள்ள பல்வேறு திறமைகளை வெளிக்கொணர உதவுவார்கள். உடற்பயிற்சி, சுகாதார கல்வி, கலை, பாட்டு, தையல் ,தோட்டக் கலை, வாழ்க்கைத் திறன், பேச்சுத் திறன், இயந்திரம் மற்றும் கணினி செயற்பாடு ஆகிய பிரிவுகளில் இந்த ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

*உதவி தொடக்கக் கல்வி அலுவலர்கள்*

ஒரு நல்ல நிர்வாகத்தின் முக்கிய அங்கமான மேற்பார்வை மற்றும் ஆய்வின் முக்கியத்துவம் கருதி 34 உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் 2011–12ஆம் ஆண்டில் நியமிக்கப் பட்டுள்ளனர்.

## 3.7. கல்வி தரத்தினை உயர்த்துதல்

கட்டிடங்கள், வகுப்பறைகள், உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் ஆசிரியர்கள் மட்டுமே தமிழக மாணவர்களை தேசிய மற்றும் உலகளவில் ஊக்குவிக்கப் போதுமானதன்று. இதனை கருத்தில் கொண்டு கல்வியின் தரத்தினை உயர்த்த அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. இதில் முக்கியமானது தொடர் மற்றும் முழுமையான கூட்டு மதிப்பீடு (CCE). இந்த புதுமையான மதிப்பீட்டு முறையில் குழந்தைகள் மனப்பாடம் செய்வதை தவிர்த்து, பகுத்தாய்வு திறனை வளர்த்தெடுக்க வாய்ப்புகள் அதிகம் கொடுக்கப்பட்டு உள்ளன. அப்படிப்பட்ட கற்றல் சூழலில்தான் அவர்களை மதிப்பீடு செய்து உள்ளார்ந்த ஆற்றல் மற்றும் திறமையை வெளிக்கொணர முடியும்.

ஆசிரியரின் கற்பிக்கும் திறனை மேம்படுத்தி எளிமையாக்கப்பட்ட கற்றல் உபகரணங்களை பயன்படுத்தி குழந்தைகள் களிப்புடன் கற்றல் அனுபவத்தை பெற்றிட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

### 3.8. தொடர் மற்றும் முழுமையான கூட்டு மதிப்பீடு (CCE)

ஒவ்வொரு குழந்தையின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிக்கொணர்ந்து முழுமையான ஆளுமை வளர்ச்சிக்கு உறுதுணை புரிவதுடன் அதனை உறுதி செய்யும் விதத்தில் உருவாக்கப்பட்டதே தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறை. 1–8 வகுப்புகளுக்கு இம்முறை 2012–13 ம் கல்வியாண்டு முதல் நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. இந்த புதிய மதிப்பீட்டு முறையில் மாணவர்கள் தொடர் மதிப்பீடு செய்யப்படுகின்றனர். இதனால் மாணவர்களின் உடல் மற்றும் மனஅழுத்தம் ஆகியவை குறைக்கப்பட்டு, மாணவர்கள் தேர்வு பயத்திலிருந்து விடுபடவும் இம்முறை உதவுகிறது. மேலும், இம்முறையில் மாணவர்களின் கல்வி சார்ந்த மற்றும் இணை கல்வி சார்ந்த செயல்பாடுகள் அனைத்தும் மதிப்பீட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படும். தற்போது 1 முதல் 4 ம் வகுப்பு வரை நடைமுறையிலுள்ள செயல்வழி கற்றல் முறையுடன் இணைந்து, இத்தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை குழந்தைகளின் அனைத்து திறன்களையும் வளர்க்கும்.



***ஒவ்வொரு பருவத்திற்கும் வழங்கப்படவுள்ள தரம் மற்றும் தரப்புள்ளிகள் விவரம்***

| மதிப்பெண்கள் | தரம் | தரப் புள்ளி |
|---|---|---|
| 91 – 100 | A1 | 10 |
| 81 – 90 | A2 | 9 |
| 71 – 80 | B1 | 8 |
| 61 – 70 | B2 | 7 |
| 51 – 60 | C1 | 6 |
| 41 – 50 | C2 | 5 |
| 33 – 40 | D | 4 |
| 21 – 32 | E1 | – |
| 20 மற்றும் அதற்குக்கீழ் | E2 | – |

தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு (CCE) முறையை நடைமுறை படுத்துவதை உறுதி செய்யும் விதத்தில் புதிய மதிப்பீடு சார்ந்த பயிற்சிகள் மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மற்றும் அனைவருக்கும் கல்வித்திட்டத்தின் உதவியுடன் இந்த புதுமையான மதிப்பீட்டு முறை குறித்து ஓர் மக்கள் விழிப்புணர்வு இயக்கம் மாநிலம் முழுவதும் நடத்தப்படும்.

### 3.9. ஆசிரியர்களின் கற்பிக்கும் தரத்தை மேம்படுத்துதல்

குழந்தையை மையப்படுத்திய வகுப்பறை சூழலில் மட்டுமே குழந்தைகள் சுமையின்றி களிப்புடன் கற்றிடுவர். இதற்கு ஆசிரியரின் கற்பிக்கும் திறன் மற்றும் அனுகுமுறையை மேம்படுத்தி

சிறந்த ஏதுவாளராகிட அனைவருக்கும் கல்வி திட்டம், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் பணியிடைப்பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

புதியதாக நியமனம் செய்யப்படும் ஆசிரியர்கள் அவர்களுடைய கற்பித்தல் திறனை வளர்க்கும் பொருட்டும் வகுப்பறையில் தற்போதுள்ள எளிய செயல்வழிக்கற்றல் முறைகள் மற்றும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு முறைக்கான பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளது. இப்படிப்பட்ட சிறப்பான பயிற்சி ஆசிரியர்களுக்கு, பெற்றோர்களையும் குழந்தைகளையும் கையாளுவதில் உதவி புரிந்திடும். அதோடுமட்டுமல்லாமல் குழந்தை மனவியல், வாழ்வியல் திறன், சுற்றுச்சூழல் கல்வி, முன்குழந்தைப் பருவக் கல்வி, கணிதம் சார்ந்த பயிற்சி, குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் முதலுதவி போன்றவைகளுக்கான பயிற்சிகள் UNICEF, தமிழ்நாடு அறிவியல் மற்றும் தொழில் நுட்ப மையம் மூலம் கொடுக்கப்பட உள்ளன.

## 3.10 எளிய செயல் வழிக்கற்றல் முறை (Simplified Activity Based Learning - SABL)

1–4 வகுப்பு வரை பயிலும் குழந்தைகள் சுமையின்றி கற்கவும், களிப்புடன் கற்றிடவும், எளிய முறையில் நடைமுறைக்கு ஏற்ற வகையில் கீழ்க்கண்ட சிறப்பு அம்சங்களுடன் செயல் வழிக்கற்றல் முறை எளிமையாக்கப்பட்டுள்ளது.



- தொடர் மற்றும் முழுமையான கூட்டு மதிப்பீட்டு முறையுடன் பாடப்புத்தகங்களை ஒருங்கிணைப்பது
- மேலோங்கிய சிந்தனைகளுடன் கூடிய செயல் பாடுகளை உள்ளடக்கியது.
- செயல்திட்டங்களுடன் இணைந்த செயல்பாடுகள்
- படித்தல், எழுதுதல் மற்றும் கேட்டல் திறன்கள் மேம்பாட்டிற்கு சிறப்பு கவனம் அளிக்கப் பட்டுள்ளது.

செயல்வழிக்கற்றல் அட்டைகள்/படிநிலைகள் கீழ்க்காணும் முறையில் குறைக்கப்பட்டுள்ளன.

| செயல்வழி கற்றல் அட்டைகள் | தமிழ் | ஆங்கி–லம் | கணிதம் | அறி–வியல் | சமூக அறி–வியல் |
|---|---|---|---|---|---|
| முப்பருவ முறைக்கு முன் அட்டைகள் | 874 | 1649 | 914 | 825 | 384 |
| முப்பருவ முறைக்கு பின் அட்டைகள் | 321 | 342 | 404 | 416 | 230 |
| முப்பருவ முறைக்கு முன் படிநிலைகள் | 64 | 48 | 64 | 50 | 31 |
| முப்பருவ முறைக்கு பின் படிநிலைகள் | 39 | 29 | 40 | 47 | 26 |

செயல்வழிக்கற்றலின் வழியாக கல்வி கற்கும் குழந்தைகள் 5–ம் வகுப்பில் எளிமையாக்கப்பட்ட படைப்பாற்றல் கல்வியில் பயின்று வருகிறார்கள். இம்முறை 6–8 வகுப்புகளில் பின்பற்றப்படும் படைப்பாற்றல் கல்விமுறைக்கு குழந்தைகள் சுமுகமாக செல்ல ஒரு பாலமாக அமைந்துள்ளது. இம்முறை வலுப்படுத்தப்படவும் உள்ளது.

## 3.11. படைப்பாற்றல் கல்வி (Active Learning Methodolody)

நடுநிலைவகுப்புகளுக்கு குழந்தைகளின் பகுப்பாய்வு திறனை மேம்படுத்தும் விதத்தில் படைப்பாற்றல் கல்வி முறை பின்பற்றப்பட்டுவருகிறது. இக்கற்றல் முறை தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை உள்ளடக்கி மாற்றி அமைக்கப் படவுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் கல்வி சார்ந்த மற்றும் இணை கல்விசார்ந்த பாடங்களான, அதாவது வாழ்வியல் திறன், வேலை அனுபவம் ஆகியவற்றை கற்றிடவும் மற்றும் சாரண சாரணியர் இயக்கம், தேசிய மாணவர் படை ஆகியவற்றில் பங்கேற்கவும் வழிவகை செய்துள்ளது.

### சுமையின்றி கற்றல்

குழந்தைகளிடையே உள்ள தேர்வு பயத்தினை குறைக்கும் விதத்தில் நாட்டிற்கே முன்னோடியாக புதுமையான முப்பருவ முறை என்ற புதிய முறையினை நடைமுறைபடுத்திட தமிழக அரசு அறிவித்துள்ளது. அதோடு மட்டுமில்லாமல் இப்புதிய முறையின் மூலம் ஒரு கல்வி ஆண்டிற்கான பாடநூல்களை மூன்று பருவங்களுக்கும் தனித்தனியாக ஒரு பாடநூல் என குழந்தைகளுக்கு புத்தகச் சுமை குறைக்கபட உள்ளது. அதோடுமட்டுமல்லாமல் குழந்தைகளுக்கு உடல், உள்ள ரீதியான பளுவும், பயமும் குறைக்கப்படும்.



## 3.12. முப்பருவ முறை(Trimester System)

மாண்புமிகு முதலமைச்சரின் தேர்தல் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளபடி குழந்தைகளின் புத்தகச்சுமையை குறைப்பதற்கு புதுமையானமுப்பருவ முறை **2012–13**ம் கல்வியாண்டு முதல் **1–8** வகுப்புகளுக்கு அறிமுகப் படுத்தப்படவுள்ளது. இதன் மூலம் ஒரு பருவத்திற்கு தேவையான புத்தகங்களை மட்டுமே குழந்தைகள் எடுத்துச் செல்வர். இது மாணவர்களுடைய புத்தக சுமையை வெகுவாக குறைப்பதுடன், இளம் சிறார்களின் மன பயத்தினையும் போக்கும்.

இம்முறையில் ஒரு கல்வியாண்டு மூன்று பருவங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| முதல் பருவம் | ஜூன், ஜூலை, ஆகஸ்டு மற்றும் செப்டம்பர் |
| இரண்டாம் பருவம் | அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் |
| மூன்றாம் பருவம் | ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் |

- ஒரு கல்வியாண்டு மூன்று பருவங்களாக பிரிக்கப் பட்டுள்ளது
- ஒரு கல்வியாண்டின் பாட திட்டம் மூன்றாக பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பருவத்திற்கும் அனைத்து பாடங்களையும் ஒருங்கிணைத்து ஒரு புத்தகமாக வடிவமைக்கப் பட்டுள்ளது
- கல்வி சார்ந்த மற்றும் இணைகல்வி செயல்பாடுகளை (scholastic and Co-Scholastic areas) தொடர் மற்றும்

முழுமையான மதிப்பீடு வழி மதிப்பீடு செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

## 3.13. புத்தக சுமை குறைப்பு

தேசிய மற்றும் சர்வதேச அளவில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்படி மாணவர்களின் புத்தகச் சுமை அவர்களின் எடையில் 10 முதல் 15 சதவீதத்திற்கு மேல் இருக்கக் கூடாது என்பதே ஆகும். இதனை கருத்தில் கொண்டு 2012–13 ம் கல்வியாண்டில் பாடத்திட்டம் மூன்றாக பிரிக்கப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு பருவத்திற்கும் உள்ள புத்தகங்கள் ஒன்றாக குறைக்கப்பட்டதுடன் எடையும் குறைக்கப்பட்டு ஒரு பருவத்திற்கான புத்தகத்தை மட்டும் குழந்தைகள் எடுத்துச் செல்வர். 2012–13 ம் கல்வியாண்டு முதல் 1–5 வகுப்புகளுக்கு ஒரே புத்தகமாகவும் 6–8 வகுப்புகளுக்கு ,மொழிபாடங்களுக்கு என ஒரு புத்தகமும் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) கணிதம், அறிவியல், சமூக அறிவியல் ஆகிய மூன்று பாடங்களுக்கு என ஒரு புத்தகமும், மொத்தம் இரண்டு புத்தகங்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளன. அரசு இதன் மூலமாக மாணவர்களுக்கு புத்தகச் சுமையினால் ஏற்படும் உடல் ரீதியான உபாதைகளான தசை மற்றும் எலும்பு சார்ந்த நோய்களிலிருந்து (Musculoskeletal problems like kyphotic posture coliosis etc.) குழந்தைகளை பாதுகாத்திட உறுதியாக உள்ளது.



முப்பருவ முறைக்கு பின் புத்தகச் சுமை எவ்வாறு குறைக்கப்பட்டுளளது என்பது கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<u>முப்பருவமுறைக்கு முன் மற்றும் பின் உள்ள புத்தகங்களுடன் புத்தகப்பை எடை ஒப்பிடல் (கிலோகிராமில்)</u>

| வகுப்பு | சராசரி மாணவரின் எடை | | தற்போது உள்ள புத்தகப்பை எடை | முப்பருவ முறை புத்தக ப்பை எடை | முப்பருவ முறைக்கு முன் உள்ள பாட நுல்கள் எண்ணிக்கை | முப்பருவ முறையின்படி வடிவமைக்கப்பட்ட பாட நூல்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | | | | |
| 1 | 15 | 12 | 3 | 1.5 | 4 | 1 |
| 2 | 18 | 14 | 3 | 1.5 | 4 | 1 |
| 3 | 19 | 17 | 4 | 2 | 5 | 1 |
| 4 | 19 | 17 | 4 | 2 | 5 | 1 |
| 5 | 27 | 25 | 5 | 2.5 | 5 | 1 |
| 6 | 31 | 29 | 7 | 3.25 | 5 | 2 |
| 7 | 33 | 31 | 7 | 3.35 | 5 | 2 |
| 8 | 37 | 35 | 7 | 3.75 | 5 | 2 |

## சிறப்பு திட்டங்கள்

### 3.14. அறிவியல் கல்வியை மேம்படுத்துதல்

இளம் பருவத்தில் மாணவர்களிடையே அறிவியல் வேட்கையையும் அறிவியல் மனப் பான்மையையும் உருவாக்கும் வகையில் அனைத்து தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் அறிவியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தியும் பள்ளி, ஒன்றியம், மற்றும் மாவட்ட அளவில் அறிவியல் கண்காட்சிகள் அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் தமிழ்நாடு அறிவியல் தொழில் நுட்ப மையத்தின் துணை கொண்டு நடத்தப்படும். அறிவியல் கற்பித்தலை மேம்படுத்தும் பொருட்டும் அறிவியல் கண்காட்சிகளை நடத்தி செயல்வழி அனுபவங்களை பெற்றிடும் வகையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர் (அறிவியல்) மற்றும் அறிவியல் பட்டதாரி ஆசிரியர்களுக்கு அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

மாணவர்கள் அறிவியலை நன்கு புரிந்துகொள்ள ஏதுவாக அறிவியல் ஊர்திகள், அறிவியல் ஆய்வகங்களாக செயல்படும். இதன்மூலம் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளி மாணவர்கள் செயல்முறை வாயிலாக அறிவியல் பாடங்களை நன்கு புரிந்து கொள்ள முடியும். ஆய்வு கூடங்களே இல்லாத தொலைதூரப் பள்ளிகளுக்கும் இவ்வறிவியல் ஊர்தி சென்று அறிவியல் கல்வியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



### 3.15. நடமாடும் நூலகம்

படிக்கும் பழக்கத்தை இளம் வயதிலேயே ஊக்குவிக்க, நடமாடும் ஊர்திகளின் மூலம் நூல்கள் வழங்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது. இந்நடமாடும் நூலக ஊர்திகள் வாயிலாக அறிவியல் மற்றும் பொது அறிவு சார்ந்த புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு அவர்களுடைய பாடநூல்களில் கற்பிக்கப்படும் கருத்துகளுக்கு அப்பாற்பட்டவைகளையும் அறிந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்படுகிறது. இதன் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் மேம்படுத்தப்படுகிறது.

### 3.16. நிர்வாகம் மற்றும் கண்காணித்தல்

உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் அலுவலக அமைச்சுப் பணியாளர்கள் ஆகியோருக்கு அவர்களின் அலுவலக நிர்வாகம் மற்றும் நிதி நிர்வாகம் ஆகியவற்றை மேம்படுத்தும் பொருட்டு அனைவருக்கும் கல்வி திட்டத்தின் உதவியுடன் அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனம், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், உள்ளாட்சி தணிக்கைத் துறை ஆகியவற்றுடன் இணைந்து பருவந்தோறும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

கள அலுவலகங்களில் தொடர் மற்றும் திடீர் ஆய்வுகளும் மேற்கொள்ள மாநில மற்றும் மாவட்ட அளவில் ஆய்வுக் குழு ஏற்படுத்தப்படவுள்ளது.

உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களின் திறனை மேம்படுத்தும் வகையில் கல்வி மற்றும் நிர்வாக தணிக்கை சார்ந்த பயிற்சிகள் அளிக்கப்படவுள்ளன.

### 3.17. சுயநிதிப்பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளை ஒழுங்கு படுத்துதல்

குழந்தைகளின் பாதுகாப்பினை உறுதிசெய்யும் வகையில் சுயநிதிப்பள்ளிகள், மழலையர், தொடக்கப்பள்ளிகளை தொடங்க ஒப்புதல் மற்றும் தொடர் அங்கீகாரம் வழங்குவது தொடர்பான விதிமுறைகள், நிபந்தனைகளை அரசு நிர்ணயம் செய்துள்ளது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றாத பள்ளிகள் மீது உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும்.



# 4. அனைவருக்கும் கல்வி திட்டம்

### 4.1 முன்னுரை

அனைவருக்கும் கல்வி இயக்கம் 2001–02 ஆம் ஆண்டிலிருந்து மத்திய அரசுடன் இணைந்து தமிழகத்திலுள்ள தொடக்கக் கல்வியை முன்னேற்ற பாதையில் நடத்திச் செல்கிறது. இத்திட்டம் தொடக்கக் கல்வி இயக்கத்தோடு ஒன்றிணைந்து 6 வயது முதல் 14 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் தரமான தொடக்கக் கல்வியை அளிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் செயல்படுகிறது.

அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டம், முறையான பள்ளியில் 100% மாணவர் சேர்க்கையை உறுதிபடுத்துவதன் மூலம், தொடக்கக் கல்வியை உயர்த்துவதில் அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் பங்கினை அதிகரித்துள்ளது. பள்ளி செல்லாக் குழந்தைகள், நகர்ப்புறங்களில் நடைபாதையில் வாழும் குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் அனைவரையும் முறையான பள்ளியில் சேர்ப்பதற்கு தனி முக்கியத்துவம் கொடுக்கிறது. சமூக மற்றும் பாலின வேறுபாடுகளைக் களைந்து பெண்கள், சிறுபான்மையினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் அனைவரையும் பள்ளியில் சேர்க்கச் சிறப்புத் திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

அனைவருக்கும் கல்வி இயக்கத் திட்டத்திற்கான செலவினை மத்திய மற்றும் மாநில அரசுகள் 65:35 என்ற விகிதத்தில் பகிர்ந்து ஏற்று, இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. 2011–12 ஆம் கல்வி ஆண்டில் திட்ட ஏற்பளிப்புக் குழுவால் (PAB) ரூ.1891.42 கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் மாநில அரசின் பங்காக ரூ.617.89 கோடி வழங்கப்பட்டுள்ளது. 2012–13ஆம் கல்வி ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ.2000 கோடி பரிந்துரைக்கப் பட்டுள்ளது. இதில், மாநில அரசின் பங்கு ரூ.700 கோடி ஆகும்.

இலவச மற்றும் கட்டாயக் கல்வி சட்டம் 2009ஐ மிகவும் சிறப்பான முறையில் நடத்திட 13வது நிதிக் குழுவால் 2010–11 ஆம் கல்வி ஆண்டில் ரூ.111 கோடியும், 2011–12ஆம் கல்வி ஆண்டில் ரூ.126 கோடியும் அளிக்கப்பட்டது. 2012–13 ஆம் கல்வி ஆண்டில் ரூ.141 கோடி அளிக்கப்படவுள்ளது.

இலவச கட்டாயக் கல்விச் சட்டம், 2009 வரும் நிதியாண்டில் செயல்படுத்துவதை உறுதி செய்ய தமிழ்நாடு இலவசக் கட்டாயக் கல்வி உரிமை விதிகள் 2011 குறிப்பிட்டுள்ளவாறு 6 வயது முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களைப் பள்ளியில் சேர்க்கப்படுவதை உறுதி செய்ய அரசு முக்கிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதன்மூலமாக அனைவருக்கும் சமமான கல்வி அளிக்கவும், அருகிலுள்ள தனியார் பள்ளியில் மாணவர்களைச் சேர்க்க 25% இட ஒதுக்கீடு அளிக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த இட ஒதுக்கீடு *“வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவினர்”* மற்றும் *“நலிந்த பிரிவினருக்காக”* ஏற்படுத்தப்பட்டுள்ளது. 2012–13 ஆம் கல்வி ஆண்டில் 100% சேர்க்கையை அடைந்துள்ளதை உறுதி செய்ய பள்ளிச் செல்ல வாய்ப்பில்லாத அனைத்து குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பதே தமிழக அரசின் முக்கிய நோக்கமாகும்.



2012–13 ஆம் கல்வி ஆண்டில் அனைவருக்கும் கல்வி இயக்கம் இரண்டு முக்கிய நோக்கங்களில் செயல்பட உள்ளது. ஒன்று தரமான கல்வி அளிப்பது மற்றொன்று பள்ளி உள்கட்டமைப்பை மேம்படுத்துவதாகும்.

### 4.2 தொலைநோக்கு

6 வயது முதல் 14 வயது வரையுள்ள அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான வாய்ப்பளித்து அனைவருக்கும் தொடக்கக் கல்வி அளித்து அதன் மூலம் இலவசக் கட்டாயக் கல்வியை பெறச் செய்வது. சமூக மற்றும் இன வேறுபாடின்றி பள்ளி வயது குழந்தைகள் அனைவரையும் பள்ளியில் சேர்வதை (100% சேர்க்கையை) உறுதி செய்தல்.

### 4.3 குறிக்கோள்கள்

2012–13 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு அரசின் குறிக்கோள்களை அடைய கீழ்க்கண்டவற்றிற்கு முக்கியத்துவம் வழங்கப்படும்.

- முழுமையான பள்ளி வரைபடம் (School maping) தயார் செய்வதன் மூலமாக தற்போதுள்ள நிலையில் 1 கிமீ தொலைவிலுள்ள தொடக்கப் பள்ளிகள் 3 கி.மீ தொலைவிலுள்ள நடுநிலைப் பள்ளிகள் பற்றிய தெளிவான விவரத்தை பெறுதல். இதன் மூலம் குழந்தைகளை அவரவர் குடியிருப்புகளுக்கு அருகிலேயே உள்ள பள்ளிகளில் சேர்க்க இயலும்.

- சமுதாய சூழ்நிலைகளை மேம்படுத்துதல்

  - ‘‘வாய்ப்பு மறுக்கப்பட்ட’’ மற்றும் ‘‘நலிவடைந்த’’ பிரிவினைச் சார்ந்த மாணவர்களுக்கு, அரசு உதவி பெறாத தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு அளித்தல்.

  - ஜாதி, இன, வகுப்பு மற்றும் சிறப்பு கவனம் தேவையுள்ள மாணவர்களைத் தனிமைப் படுத்தாமல் இருப்பதை உறுதி செய்தல்.

- தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 100% சேர்க்கை நடைபெற ஏதுவாக பள்ளி செல்லாக் குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்க்க சிறப்பு முயற்சி எடுத்தல்.

  - பள்ளிகளில் உடனடி சேர்க்கையை வலியுறுத்துதல்

  - மற்ற குழந்தைகளுக்கு இணையாக கற்பதற்குச் சிறப்புப் பயிற்சியோடு கூடிய கல்வி அளித்தல்.

  - முறையான பள்ளிகளில் சேர்ந்த குழந்தைகளுக்கு தொடர்ச்சியான ஆதரவு அளித்து சமூகம், உணர்வு மற்றும் கல்வி சார்ந்த ஒருங்கிணைப்பை ஏற்படுத்துதல்



  - பள்ளி செல்லாக் குழந்தைகளை கண்டறிந்து பள்ளியில் சேர்த்தல்

  - நகர்ப்புறங்களில், நடைபாதையில் வாழும் குழந்தைகள் மற்றும் பெரியோர்களின் ஆதரவற்ற குழந்தைகள் ஆகியோரை பள்ளியில் சேர்த்தல்.

  - குறைவான மக்கள் தொகை உள்ள பகுதிகளில் குழந்தைகளுக்கேற்ற உண்டு உறைவிட வசதி அளித்தல்.

  - போக்குவரத்து வசதிகளற்ற, தொலைதூர குடியிருப்புக்களிலிருந்து வரும் குழந்தைகளுக்கு போதுமான போக்குவரத்து மற்றும் பாதுகாப்பாளரோடு பள்ளி வந்து செல்லும் வாய்ப்பளித்தல்.

- பெண் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து அவர்களுக்கு போக்குவரத்து, கல்விக்கான ஆதரவு, ஆலோசனை போன்ற வசதிகளை ஏற்படுத்தி அனைத்து பெண் குழந்தைகளும் பள்ளி செல்ல வாய்ப்பளித்தல். இடைநிற்றலை தடுக்க பெண்களுக்கென்று தனியான உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்துதல்.

- அனைத்து மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கும் முறையான பள்ளிகளில் எவ்வித பாகுபாடற்ற வகையில் தரமான உள்ளடங்கிய கல்வியை வழங்குதல்.

## அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் செயல்பாடுகள்

மேலே குறிப்பிட்ட அனைத்து குறிக்கோள்களையும் அடைய 2012–13 ஆம் ஆண்டில் புதிய திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் கீழ்க்கண்டவாறு பிரிக்கப் பட்டுள்ளது.

1. பள்ளி வசதி அமைவிடம்
2. தக்க வைத்தல்
3. தரத்தை உயர்த்துதல்
4. சமூக மற்றும் இன வேறுபாடுகளைக் களைதல்
5. பள்ளிகளுக்குரிய கட்டமைப்புகள்.
6. பெண் குழந்தைகள் கல்வி.
7. ஆண்டு மானியம்

## 4.4. சேர்த்தலும், தக்க வைத்தலும்

மாநிலத்தில் 44905 தொடக்கப் பள்ளிகள் இருந்த போதிலும், நிகர சேர்க்கை விகிதம் 99.26% மட்டுமே உள்ளது. 2012–13 ஆம் கல்வி ஆண்டில் 100% அடைவதற்கு சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மக்கள் தொகை குறைவாக உள்ள இடங்கள், அடர்ந்த காடுகள், மலை வாழ் பகுதிகள், நகர்ப்புறங்களில் நடைபாதையில் வாழும் குழந்தைகள், பெரியவர்களின் ஆதரவற்ற சாலையோரக் குழந்தைகள் ஆகியோருக்கு உண்டு உறைவிடப் பள்ளிகள் ஏற்படுத்த மாநில அரசு திட்டமிட்டுள்ளது. உண்டு உறைவிட பள்ளிகளை ஏற்படுத்துவதோடு, நெடுந்தொலைவிலுள்ள, தொலைதூர குடியிருப்பில் உள்ள குழந்தைகள் அருகிலுள்ள பள்ளிகளுக்கு செல்ல போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தித் தர அரசு உத்தேசித்துள்ளது. இதனால் தொலைதூரத்திலுள்ள 4857 குழந்தைகள் பயன்பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.



நேரடி சேர்க்கை, தங்கும் மற்றும் தங்கா முகாம் சிறப்பு பயிற்சி மையங்கள் ஆகியவற்றின் சேர்க்கையில் சிறப்புக் கவனம் செலுத்தப்படும். பள்ளி வயதுக் குழந்தைகளைக் கண்டறிந்து முறையான பள்ளியில் சேர்த்து, தங்கும்–தங்கா முகாம்களின் மூலம் சிறப்பு பயிற்சிகள் அளிக்கப்படுகிறது. தங்கும் பயிற்சி மையங்கள் செயல்படுத்துவதற்கு அரசு சாரா நிறுவனங்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் ஆர்வமுடன் பங்கேற்கும்.

பள்ளிகளில் சேர்க்கப்பட்ட மாணவர்களை முறையாக கண்காணித்து வழிநடத்துவதற்காகவும், இடைநின்ற மாணவர்களைத் தக்க வைப்பதற்காகவும் ரூ.43.65 கோடி செலவில் சிறப்புப் பயிற்சிகள் அளிப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

அனைவருக்கும் கல்வித் திட்டத்தில் முதன் முறையாக தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகள் வழங்க ரூ.78.80 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 4.5. தரத்தை மேம்படுத்துதல்

அனைவருக்கும் கல்வி இயக்கம், ஒன்று முதல் நான்கு வகுப்புகளுக்கு, எளிய முறையில் செயல்வழி கற்றல் திட்டத்தைச் செயல்படுத்தி தொடக்கக் கல்வி இயக்குநரகத்திற்குத் துணைபுரிகிறது. இதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.4.50 கோடியுடன், கூடுதலாக ரூ.4.28 கோடி முழுமையான தொடர் மதிப்பீடு முறைக்காக (CCE) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசால்

நடைமுறைப்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் 6419 ஆசிரியப் பயிற்றுநர்கள் தொடக்கப் பள்ளிகளைக் கண்காணிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றனர். மாநில அரசானது ஆசிரியப் பயிற்றுநர்களின் அன்றாடப் பணிகளுக்கிடையில் எளிய செயல் வழிக் கற்றலின் தரமேம்பாட்டினையும், முழுமையான தொடர் மதிப்பீடு முறையையும் நடைமுறைப்படுத்த முயற்சி மேற்கொண்டு வருகிறது. ஆசிரியப் பயிற்றுநர்களின் பணியை மேலும் செம்மைபடுத்துவதற்காக ரூ. 345 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

கல்வி மேம்பாட்டில் ஆசிரியர்களின் திறன்மேம்பாடு என்பது ஒரு முக்கிய உட்கூறாகும். இதற்காக 2011–12 ஆம் ஆண்டிற்காக ரூ.30.92 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 2012–13 ஆம் ஆண்டில் ரூ.42.19 கோடியாக நிதி உயர்த்தப்பட்டுள்ளது. மாநிலத்தின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இது உறுதி செய்யும்.

அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப்பள்ளிகளில் பள்ளி மேலாண்மைக் குழு அமைக்க இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பள்ளிகளைத் தற்போதைய நிலையிலிருந்து தரம் உயர்த்தும் வகையில், பள்ளி முன்னேற்றத்திற்கான திட்டங்களை உருவாக்குவது பள்ளி மேலாண்மைக் குழுவின் பணியாகும். பள்ளி மேலாண்மைக் குழுவிற்கு பயிற்சி தருதல் மிக முக்கியமானதாக உணரப்படுகிறது.



இக்குறிப்பிட்ட சிறப்பு பயிற்சிக்காக ரூ. 27.25 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழுவினரின் திறன் வளர்ச்சிக்காக ரூ. 69.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தரமேம்பாட்டிற்கு மாநிலம் அளிக்கும் முக்கியத்துவத்தைத் தெள்ளத் தெளிவாக உணர முடிகிறது.

## 4.6. சமூக இடைவெளி மற்றும் பாலினம்

பெண்கள், சிறுபான்மையினர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர், மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகள் ஆகியோர் 100% பள்ளிகளில் சேர்வதைக் கருத்தில் கொண்டு மாநில அரசு, சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியுள்ளது. இதில் கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் மற்றும் தொடக்க நிலையில் தேசிய பெண் கல்வித் திட்டம் ஆகியன மாணவிகளை அதிக அளவில் தொடக்கப் பள்ளியில் சேர்ப்பதற்கு வழிவகுக்கின்றது.

தமிழ்நாட்டில் உள்ள 12 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 45 வட்டாரங்கள் உள்ளன. கஸ்தூரிபாய் காந்தி பாலிகா வித்யாலயா திட்டம் மூலம் 61 உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்படுகின்றது. இதில் 4466 மாணவிகள் கல்வி பயில்கின்றனர். 1076 ஆதிதிராவிட மாணவிகள், 968 பழங்குடியினத்தைச் சேர்ந்த மாணவிகள், 2400 பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பின்படுத்தப்பட்ட

மாணவிகள், 22 சிறுபான்மையினத்தைச் சேர்ந்த மாணவிகள் ஆகியோர் அடங்குவர். இத்திட்டத்தின் மூலம் 2230 மாணவிகள் முறையான பள்ளியில் சேர்ந்து இடைநிலைக் கல்வி பெற உதவியதால் இத்திட்டம் மிகப் பெரிய வெற்றியடைந்துள்ளது. இம்மாணவிகளுக்கு முறையான கல்வி மட்டுமின்றி தொழிற்திறனிலும் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதற்காக 2012–13ஆம் கல்வியாண்டில் ரூ. 15.43 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது.

தேசிய பெண் கல்வித் திட்டம் மூலம் 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கிய 37 வட்டாரங்களில் 937 மாதிரி கருத்தாய்வு பள்ளிகள் விரிவுப்படுத்தப்பட்டு, 2,31,399 மாணவிகள் கல்வி பயில்கின்றனர். இம்மாதிரி கருத்தாய்வு மையங்கள் முறையான பள்ளிகளோடு ஒருங்கிணைக்கப்பட்டு நடுநிலைக் கல்வி முடியும் வரை தக்க வைக்கப்பட்டுள்ளனர். கலை மற்றும் கைத்தொழில், திறன்வளர் பயிற்சி ஆகிய செயல்பாடுகளை இம்மாணவிகளுக்கு அளிப்பதற்காக 2012–13–ஆம் ஆண்டில் ரூ.4.86 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மாணவிகள் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகின்றனர். இதன் மூலம் 1,49,411 மாணவிகள் பயன்பெறுகின்றனர். இதற்காக 2012–13 ம் ஆண்டில் ரூ. 4.35 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



## 4.7. மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள்

மாற்றுத்திறன் கொண்ட குழந்தைகளை முறையான பள்ளிகளில் சேர்ப்பதற்கு மாநில அளவில் சிறப்புக் கவனம் செலுத்தப்படுகின்றது. பார்வைக் குறைபாடு, இயக்கக் குறைபாடு, தற்புணை ஆழ்வு (Autism), கற்றலில் குறைபாடு, மனவளர்ச்சி குறைபாடு மற்றும் இதர குறைபாடுகளை உடைய மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகள் உள்ளடங்கிய கல்வித் திட்டத்தின் கீழ் இணைக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு குழந்தைக்கும் ரூ.2500 வீதம் ரூ 36.57 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் 1,46,282 குழந்தைகள் பயனடைவர்.

## 4.8.பள்ளிகளுக்கான உட்கட்டமைப்பு

அனைவருக்கும் கல்வி இயக்கம், தொடக்கக் கல்வி இயக்குநரகத்தின் தேவைகளுக்கேற்ப புதிய பள்ளிகளைக் கட்டுதல், கூடுதல் வகுப்பறைகள், தலைமையாசிரியர் அறைகள், குடிநீர் வசதிகள், சுற்றுச் சுவர், கழிப்பறை வசதிகள் (பொது மற்றும் பெண்களுக்கு), மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளுக்கான வசதிகள், சமையலறை, பெரிய மற்றும் சிறிய அளவிலான பழுதுபார்ப்புகளைச் செய்கிறது. மேலும் அனைவருக்கும் கல்வி இயக்கம் தளவாடப் பொருள்கள் மற்றும் விளையாட்டு உபகரணங்கள் ஆகியவற்றை வழங்குகிறது. மேலும் கட்டுமானப்

பணி வளர்ச்சிக்காக இதுவரை ஒதுக்கீடு செய்யப்பட்டதைவிட அதிக அளவில் ரூ.**464.96** கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.9. ஆண்டு மானியம்

அனைவருக்கும் கல்வி இயக்கம் பின்வரும் மானியங்களை அளிக்கிறது:–

அ) ஆசிரியர் மானியம்
ஆ) பள்ளி மானியம்
இ) பராமரிப்பு மானியம்
ஈ) ஆராய்ச்சி, மதிப்பீடு, கண்காணித்தல் மற்றும் மேற்பார்வையிடுதல்

அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலம் பள்ளியின் தரத்தை மேம்படுத்துவதற்கும், ஆசிரியரின் திறன் வளர்ச்சிக்கும், சிறப்பான பராமரிப்பிற்கும் மானியங்கள் வழங்கப்படுகின்றன. இதற்காக 2012–13ம் ஆண்டில் ரூ.**69.91** கோடி

ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 4.10 முன்பருவ மழலையர் கல்வி

2011–12 ஆம் ஆண்டில் 'ஓடி விளையாடு பாப்பா' என்ற புதுமையான திட்டம், தேசியக் கலைத் திட்ட வரைவு 2005வுடன் இணைந்து குழந்தைகளின் செயல்பாடுகளின் அடிப்படையில் பாடத்திட்டத்தை மேம்படுத்தியுள்ளது. ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் துறை மற்றும் சத்துணவு திட்டத் துறையும் இதனோடு



ஒருங்கிணைக்கப் பட்டுள்ளது. இந்தக் கல்வி முறை மாண்டிசோரி கல்வி முறையின் கொள்கைகள் மற்றும் செயல்வழிக் கற்றலோடு இணைந்து புதிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. 2012–13 ம் ஆண்டில் ரூ **4.06** கோடி செலவில் அங்கன்வாடி பணியாளர்களுக்கு பயிற்சி மற்றும் **2550** அங்கன்வாடி மையங்களுக்குரிய கட்டமைப்பு உபகரணங்களும் வழங்கப்பட உள்ளது. விளையாட்டுப் பொருட்கள், கற்றல்–கற்பித்தல் உபகரணங்கள், செயல்பாட்டுக் குறிப்புகள் அடங்கிய அட்டைகள் மற்றும் படம் நிறைந்த அட்டைகள் ஆகியன **50,000** மையங்களில் உள்ள **5100** முன்னோடி மையங்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 4.11 நிதி ஆதாரம்

**2011–12** ஆம் ஆண்டிற்கு அனைவருக்கும் கல்வி இயக்கம், கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா (KGBV) மற்றும் தேசிய பெண் கல்வி திட்டம் (NPEGEL) ஆகியவைகளுக்கு மத்திய அரசின் திட்ட ஏற்பளிப்பு குழுவால் (PAB) ரூ.**1891.42** கோடி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளளது.

**2012–13** ம் ஆண்டிற்கு ரூ. **2000.00** கோடி திட்ட ஏற்பளிப்பு குழுவால் (PAB) பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இதில் ரூ.**700** கோடி மாநில வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது. **2012–13**ம் ஆண்டிற்கு **13**வது நிதிக்குழுவின் மூலம் ரூ. **141** கோடியை அனைவருக்கும் கல்வி திட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

# 5. இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வி

## 5.1. அறிமுகம்

மாநில அரசின் முக்கிய நோக்கம் அனைவருக்கும் தொடக்கக் கல்வியை அளிப்பது மட்டும் அல்லாது அதற்கு நிகராக உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியை மேம்படுத்துவதும் ஆகும். பள்ளிக் கல்வி இயக்குநரகமானது 1965 –ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் ஆரம்ப மற்றும் உயர்நிலைக் கல்வியை மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது. பின்னர் 1986–ஆம் ஆண்டு தொடக்க கல்வியை இவ்வியக்கத்திலிருந்து பிரிக்கப்பட்டு தனி இயக்ககம் ஆக்கியதன் மூலம் பள்ளிக்கல்வி இயக்கமானது உயர்நிலை மற்றும் மேல்நிலை கல்வியைச் சிறப்பாக செயல்படுத்துவதற்கான தனியான ஒரு இயக்ககமாக உருவெடுத்தது.

பள்ளிக்கல்வி இயக்ககம், தொடங்கப்பட்ட நாளில் இருந்து, வளர்ச்சிப் பாதை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. 2010–2011 வரை உயர் மற்றும் மேல்நிலை பள்ளிகளின் எண்ணிக்கையை 5907 லிருந்து 10117 ஆக உயர்த்தியது. 2011–2012 ஆம் ஆண்டில் 710 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 100 உயர்நிலை பள்ளிகள் மேல்நிலை பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டு தற்பொழுது 10827 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன.



பள்ளிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியதன் மூலம் மாணவர்களின் எண்ணிக்கையும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 1995–1996 ஆம் ஆண்டில் 36.28 இலட்சத்தில் இருந்து 2011–2012 இல் 61.49 இலட்சமாக உயர்ந்துள்ளது.

உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வியினை உயர்த்த அரசு கவனம் செலுத்திய பின்பும், 2011–2012 ஆண்டின்படி மாணவர்களின் மொத்த சேர்க்கை வீதம் உயர்நிலைப் பள்ளிகளில் 65.6%ஆகவும், மேல்நிலை பள்ளிகளில் 40.7% ஆகவும் இருந்தது. இதனைக் கருத்தில் கொண்டு தான் **தமிழ்நாடு தொலைநோக்கு 2023**ல் குறிப்பிடப்பட்ட பத்து இலக்குகளில் தமிழக அரசு அனைவருக்கும் கல்வி கிடைப்பதற்கான இந்தியாவிலேயே சிறந்த உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது ஒன்றாகும். 2012–2013 ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் ரூ.6936.38 கோடி அனைவருக்கும் இடைநிலைக் கல்வியில் சிறப்பு கவனம் செலுத்தவதற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10,11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களின் இடை நிற்றலைக் குறைக்கும் பொருட்டு மாணவர்களுக்குச் சிறப்பு ஊக்கத் தொகையை அரசு அறிவித்தது. நடப்பாண்டில் 10 மற்றும் 11 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா ஒருவருக்கு ரூ. 1500/– , 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு தலா ஒருவருக்கு ரூ. 2000/– என்ற அடிப்படையில் ரூ. 313.13 கோடி மாணவர்களின் பெயரில் முதலீடு

செய்யப்பட்டுள்ளன. இந்த மாணவர் சிறப்பு ஊக்கத் தொகையை வரும் நிதியாண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தவும் மேலும் 21.36 இலட்சம் மாணவர்கள் பயன்பெறும் வகையிலும் ரூபாய் 366.70 கோடி இவ்வாண்டு நிதிநிலையறிக்கையில் ஒதுக்கப்பட்டுள்ளது. இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் இடைநிற்றல் தேசிய அளவில் 48 % என்ற நிலையிலும் தமிழகத்தைப் பொருத்தவரை 23.9 % ஆக மட்டுமே உள்ளது. மேலும் பல நல உதவித் திட்டங்களை அரசு அறிவித்து இடைநிலைக் கல்வியில் மாணவர்களின் இடைநிற்றலைக் குறைக்க முயற்சி எடுத்து வருகிறது.

உயர்நிலைக் கல்வி மற்றும் மேல்நிலைக் கல்வியில் மாணவர்களை ஊக்கமூட்டும் பொருட்டு +2 மாணவர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்குதல், கணித உபகரணபெட்டி, உலக வரைபட புத்தகம், புத்தகப்பை, நான்கு ஜோடி சீருடைகள் ஒரு ஜோடி காலணி ஆகிய சிறப்பு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வியக்கத்தின் குறிக்கோள் பள்ளிகளுக்கு தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி ஆசிரியர்களால் தரமான கல்வியை அளிப்பதன் மூலம் தொடக்கக் கல்வியிலிருந்து மேல்நிலை கல்விக்கு மாணவர்கள் செல்ல உதவியாக உள்ளது.



## 5.2 தொலை நோக்கு

உரிய ஆசிரியர்களுடன் உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளை மாணவர்களுக்கு அருகாமையில் ஏற்படுத்துவதன் மூலம் தரமான கல்வியை உறுதிப்படுத்துதல்.

## 5.3 குறிக்கோள்

- தகுதியுள்ள குடியிருப்புகளுக்கு ஏற்றவாறு உயர்நிலை பள்ளிகளை 5 கி.மீ தொலைவிற்குள்ளும் மற்றும் மேல்நிலை பள்ளிகளை 8 கி.மீ தொலைவிற்குள்ளும் அமைத்தல்.
- மலைப்பகுதி மற்றும் தொலைதூரப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு குறிப்பாக தாழ்த்தப்பட்ட, பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையின மாணவர்களுக்குக் கல்வியில் முன்னுரிமை அளித்தல்.
- தரமான இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வியை மாணவர்களின் வயதிற்கு ஏற்றாற்போல் அளித்து மாணவர்களின் திறன்களை வெளிக்கொணர்ந்து அதனைத் தக்க வைத்தல். உடல் மற்றும் மன ரீதியாக, அவர்கள் சமுதாயத்தில் இணைந்து வாழவும், அறிவுப் பூர்வமாக சிறக்கவும் செய்தல் மூலம் அனைத்து நிலைகளிலும் முழுமையான திறன்களை வெளிக்கொணர்தல்.
- அனைத்து மாணவர்களுக்கும் தரமான கல்வியைச் சமூக, பொருளாதார, பால் இன, பாகுபாடின்றி வழங்குதல்.
- வாழ்க்கையை மேம்படுத்துதல், திறமைகளை வெளிக் கொணர்தல், தன்னம்பிக்கை, சுயமதிப்பு, சுயக்கட்டுப்பாடு

ஆகிய நற்பண்புகளை மாணவர்களுக்குப் பள்ளிகளில் பயிற்றுவித்தல்.

- மாணவர்களிடத்தில் ஜனநாயக மாண்பு, சமூக நல்லிணக்கம், சமூகநீதி, சகோதரத்துவம் போன்ற பண்புகளை வளர்த்தல்.
- உடல்நலம் சார்ந்த விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- மேற்கண்ட அனைத்துத் திட்டங்களும் முழுமை பெறுவதற்குத் தேவையான உட் கட்டமைப்பு வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல்.
- இடைநிற்றலைக் குறைத்து, உயர்நிலை மற்றும் மேனிலை வகுப்பில் நூறு விழுக்காடு சேர்க்கையை அளித்தல்.
- வாழ்க்கைச் சிக்கல்களைத் தீர்க்கும் வகையில், வாழ்வியல் கல்வி மற்றும் தொழிற்கல்வியை அளித்தல்.
- பலதரப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த, முக்கியமாகத் தாழ்த்தப்பட்டவர், பழங்குடியினர் மற்றும் சிறுபான்மையினர் கல்வி அடைவுகளில் எவ்விதக் குறைபாடுகளுமின்றி முன்னேற கல்வியைப் பாலமாக அமைத்தல்.
- மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்குச் சிறப்புக் கல்வியை வழங்குதல்.
- ஆசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தி மாணவர்களுக்குத் தரமான கல்வியை அளித்தல்.
- பொதுத் தேர்வுகளை மாணவர்கள் சிறந்த முறையில் எழுதிச் சாதனை படைக்கத் தனிக்கவனம் செலுத்துதல்.
- இலவசக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–இன் விதிகளைச் செயல்படுத்திக் குழந்தைகளின் உரிமையை உறுதி செய்தல்.



- அரசின் சட்டங்கள், விதிகள் மற்றும் ஆணைகள் உடனுக்குடன் அமல்படுத்தப் படுவதை கண்காணித்தல்.

## 5.4. செயல்படுத்தும் வழிமுறைகள்

பள்ளிக்கல்வித்துறையின் குறிக்கோள், அனைத்துப் பள்ளிகளிலும், உட்கட்டமைப்புகளை ஏற்படுத்துதல், தரமான கல்வியளித்தல், சிறப்பு கவனம் செலுத்தி இடைநிற்றலை கட்டுப்படுத்தி 100 சதவிகித தக்க வைத்தலை உறுதிப்படுத்துதல் ஆகும்.

## 5.5. உள்கட்டமைப்பு

2011–2012ஆம் ஆண்டில் சாதனை படைக்கும் வண்ணம் அதிக எண்ணிக்கையில் 710 நடுநிலை பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலை பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

தரம் உயர்த்தப்பட்ட மற்றும் ஏற்கனவே உள்ள பள்ளிகளில் கூடுதல் பள்ளிக் கட்டடங்கள், இருக்கை வசதிகள், கணினி வழிக்கற்றல், அறிவியல் கூடங்கள், மொழி ஆய்வகங்கள், நூலகங்கள், பொதுக் கழிவறைகள், மாணவிகளுக்கான கழிவறைகள், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச்சுவர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2011–12இல் உட்கட்டமைப்பு வசதிகளுக்கான அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம் மற்றும் நாபார்டு கடன்

உதவி திட்டங்களின் மூலம் ரூ.1047.80 கோடி அனுமதிக்கப் பட்டுள்ளது.

## 5.6. ஆசிரியர் நியமனங்கள்

இவ்வாண்டு தரம் உயர்த்தப்பட்ட 100 மேல்நிலை பள்ளிகளுக்கு ஒவ்வொரு பள்ளிக்கும் 9 முதுநிலை பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தரம் உயர்த்தப்படும் பள்ளிகளுக்கு கடந்த காலங்களில் கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல், முதுகலை அறிவியல் ஆசிரியர்களும் மற்றும் ஓர் ஆங்கில ஆசிரியரும் நியமித்து, தமிழ் மற்றும் கலை ஆசிரியர் பணியிடங்கள் புறக்கணிக்கப்பட்டு வந்தன. தமிழக அரசு இதனைக் கருத்தில் கொண்டு தமிழ், வணிகவியல், வரலாறு, மற்றும் பொருளாதாரம் ஆகிய பாடங்களுக்கென நான்கு பணியிடங்களைக் கிராமப்புற மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு கூடுதலாக உருவாக்கியுள்ளது.

மாணவர்களின் கல்வித் திறனை மேம்படுத்த தமிழக அரசு பள்ளிக்கல்வித் துறையின் வாயிலாகக் கீழ்க்காணும் பணியிடங்களை நிரப்ப அனுமதி அளித்து உள்ளது.

| | |
|---|---|
| முதுகலைப் பட்டதாரி ஆசிரியர்கள் | 4207 |
| பட்டதாரி ஆசிரியர்கள் | 17380 |
| சிறப்பு ஆசிரியர்கள் | 865 |
| வேளாண் ஆசிரியர்கள் | 25 |



## 5.7. ஆசிரியர்திறனை மேம்படுத்துதல்

2012–13 – ஆம் கல்வி ஆண்டில் இடைநிலை மற்றும் மேல்நிலை வகுப்பு அரசு பொதுத் தேர்வில் சிறப்பான தேர்ச்சி பெறவும், கல்வியின் தரத்தை உயர்த்தவும் அரசு உறுதிபூண்டுள்ளது. 2010–2011 ஆம் ஆண்டில் பொதுத்தேர்வு தேர்ச்சி விகிதம் 10 ஆம் வகுப்பில் 85.30% ஆகவும் 12 ஆம் வகுப்பில் 85.90% ஆகவும் உள்ளது. 2011–2012 மற்றும் 2012–2013 ஆம் கல்வியாண்டுகளிலும் மாணவர்களின் தரத்தினை மேலும் மேம்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

மேற்கண்ட குறிக்கோள்களை அடைய அரசு ஆசிரியர்களின் திறனை வளர்த்தல், மாணவர்களைப் பொதுத் தேர்விற்குத் தயார்படுத்துதல், இடைநிலை மற்றும் மேல்நிலை கல்வியில் மாணவர்களின் திறனை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்குச் சிறப்பு பயிற்சி வகுப்புகளை நடத்துதல் போன்ற பல்வகை திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

மாணவர்கள் பாடங்களை எளிதில் புரிந்து கொள்ளவும், அவர்களிடமுள்ள பொதுத்தேர்வு குறித்த பயத்தை நீக்கவும், அவர்களுக்குத் தொடர்ந்து வழிகாட்டவும் ஆசிரியர்களுக்குச் சிறப்பு பயிற்சி அளிக்கப்படவுள்ளது. அதற்காக மாநிலக் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் சிறப்பாகத் தயாரித்துள்ள கட்டகங்கள்,

பட்டதாரி/ முதுகலைப்பட்டதாரி ஆசிரியர்களுக்கு புதிய கற்பித்தல் உத்திகளை அறிமுகப்படுத்தி மாணவர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்க வழிவகை செய்கிறது..

ஆசிரியர்களின் திறனை அதிகரிக்க அனைவருக்கும் கல்வி திட்டம், அனைவருக்கும் இடைநிலைத் கல்வித் திட்டம், மாநில கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்ச்சி நிறுவனத்துடன் இணைந்து பல்வேறு திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது.

## 5.8. வல்லுநர் குழு அமைத்தல்

மாணவர்தம் கல்வித்தரத்தை தேசிய மற்றும் உலகளாவிய அளவில் உயர்த்த மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் தலைமையில் 10 பேர் கொண்ட வல்லுநர்குழு ஒன்றை அமைக்க அரசு ஆணையிட்டுள்ளது. இக்குழு கூடி, கீழ்க்காணும் பொருள் குறித்து மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை குறித்து ஆலோசனை வழங்கும்.

- கல்வித்தரத்தை உயர்த்த 1 முதல் 12ஆம் வகுப்பு வரையான பாடத்திட்டத்தில் மாற்றங்களைப் பரிந்துரை செய்தல்.
- தற்போதுள்ள பாடநூல்களின் குறைகளைக் கண்டறிந்து தேவையான மாற்றங்களைக் கொண்டு வருதல்.



- தரமான கல்வி வழங்கத் தேவையான கட்டட வசதி, இருக்கை வசதி, உபகரணங்கள் ஆகிய வசதிகளைப் பரிந்துரைத்தல்.
- தரம் உயர்த்தப்படும் கல்விக்கேற்ப மதிப்பீட்டு முறையை மாற்றுதல்.
- ஆசிரியர் திறனை மேம்படுத்த ஆலோசனைகள் வழங்குதல்.
- பள்ளிகளை முறையாக ஆய்வு செய்து கண்காணிக்கத் தகுந்த ஆலோசனைகளை வழங்குதல்.
- தேவைப்படும் பிற முக்கியமான கல்விசார் ஆலோசனைகளை வழங்குதல்.

## 5.9. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சிறப்புக் கட்டணம் இரத்து

6 முதல் 12 –ஆம் வகுப்பு வரை அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களிடம் வசூலிக்கப்பட்டு வந்த சிறப்புக் கட்டணத்தை அரசு ஈடுசெய்கின்றது. இந்த வகையில் 2011–12 ஆம் கல்வி ஆண்டில் ரூ.20.50 கோடி அரசால் ஈடுசெய்யப்பட்டுள்ளது.

## 5.10. தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளித்தல்

10 மற்றும் 12ஆம் வகுப்புகளில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு பொதுத்தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

## 5.11. பெண்களுக்கான ஊக்குவிப்புத் திட்டம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவிகள் தங்கள் கல்வியை தொடரவும், 12–ஆம் வகுப்பு வரை நிறைவு செய்ய ஊக்குவிக்கும் வண்ணம் ரூ.3000/– மாணவியின் பெயரில் வைப்புத்தொகையாகச் செலுத்தப்படுகிறது. இத்தொகை 16 வயதுக்குட்பட்ட மாணவியர் ஒன்பதாம் வகுப்பு பயிலும் போது வைப்புத்தொகையாகப் பராமரிக்கப்படுகிறது.

## 5.12. அறிவியல் உபகரணங்கள் வழங்குதல்

2011–2012 ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு உயர்நிலைப்பள்ளிகளுக்கு ரூ. 40 இலட்சம் செலவில் அறிவியல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## 5.13. ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்

2011–2012ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு மேல்நிலைப்பள்ளிகளில் ரூ.100 இலட்சம் செலவில் ஆய்வக உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 2012–13ஆம் கல்வி



ஆண்டிலும் இத்திட்டத்தினை தொடரும் விதமாக ரூ.100 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது மாணவர்களின் ஆய்வக அறிவினை வளர்க்க ஏதுவாக இருக்கும்.

## 5.14. நூலக வசதிகள்

2011–2012–ஆம் கல்வி ஆண்டில் 100 அரசு உயர்நிலைப்பள்ளிகள் மற்றும் 100 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு நூலக புத்தகங்கள் வழங்க அரசு ரூ.40 லட்சத்தினை வழங்கியுள்ளது.

## 5.15. மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி

தொழிற்கல்வி குறித்த உயர்மட்டக்குழு அறிக்கையின் அடிப்படையில் மேல்நிலைப் பள்ளிகளில் தொழிற்கல்வி புதுப்பிக்கப்பட்டு 2010–11ஆம் கல்வியாண்டு முதல் 12 தொழிற்கல்வி பாடங்கள் கற்பிக்கப்பட்டு வருகின்றன. வரும் கல்வி ஆண்டுகளில் புதிய தொழிற்கல்வி பாடங்களை அறிமுகப்படுத்த அரசு திட்டமிட்டுள்ளது.

## 5.16. முதல் இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசுத் தொகை

திறமை மிக்க மாணவர்கள் தங்கள் மேற்படிப்பைத் தொடர ஊக்குவிக்கும் பொருட்டு அரசு இத்திட்டத்தை நடைமுறைபடுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி மாநில அளவில்

தமிழை முதல் மொழிப் பாடமாகப் படித்து மேல்நிலைப் பொதுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பரிசுத் தொகை பின்வருமாறு அளிக்கப்படுகிறது.

| | |
|---|---|
| முதலிடம் | ரூ.50,000/– |
| இரண்டாமிடம் | ரூ.30,000/– |
| மூன்றாமிடம் | ரூ.20,000/– |

அவ்வாறே, மாவட்ட அளவில் மேல்நிலைத் தேர்வில் முதலிடம் பெறும் மூன்று பின்வரும் பள்ளி மாணவர்களுக்கு மேற்கல்விக்கான செலவை அரசே ஏற்கிறது. அவ்வாறு தேர்வு செய்யப்படும் பள்ளிகள் விவரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| அரசு மேல்நிலைப்பள்ளி | 1 |
| அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி | 1 |
| ஆங்கிலோ இந்தியன் / மெட்ரிகுலேஷன் / சுயநிதி மேல்நிலைப்பள்ளி | 1 |

அதேபோன்று மாநில அளவில் தமிழை முதல்மொழிப் பாடமாகப் படித்து முதல் மூன்று இடங்களைப் பெறும் இடைநிலைக் கல்வி பொதுத் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) மாணவர்களுக்குப் பின்வருமாறு பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.



| | |
|---|---|
| முதலிடம் | ரூ.25,000/– |
| இரண்டாமிடம் | ரூ.20,000/– |
| மூன்றாமிடம் | ரூ.15,000/– |

இது தவிர, பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களின் மேற்படிப்பிற்கான முழுச் செலவையும் அரசே ஈடுசெய்கிறது.

மேலும், 10ஆம் வகுப்புத் தேர்வில் தமிழை முதல் மொழிப்பாடமாகப் படித்து மாவட்ட அளவில் முதலிடம் பெறும் மூன்று மாணவர்களுக்கு உயர்கல்விக்கான செலவினமாக ரூ.1500/– வழங்கப்பட்டு வருகிறது. அதன் விபரம் பின்வருமாறு.

| | |
|---|---|
| அரசு மேல்நிலைப்பள்ளி | 1 |
| அரசு நிதி உதவி பெறும் மேல்நிலைப்பள்ளி | 1 |
| ஆங்கிலோ இந்தியன் / மெட்ரிகுலேஷன் / சுயநிதி மேல்நிலைப்பள்ளி | 1 |

பாடவாரியாக இடைநிலை மற்றும் மேல்நிலைப் பொதுத்தேர்வில் மாநிலத்தில் முதலிடம் பெறும் மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு நிர்ணயிக்கும் விகிதத்தில் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

## 5.17. சாதி / இருப்பிட / வருவாய் சான்றிதழ் வழங்குதல்

10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்குப் சாதி, இருப்பிட மற்றும் வருவாய்ச் சான்றிதழ்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களால் சார்ந்த வட்டாட்சியரிடமிருந்து பெற்று வழங்கப்படுகிறது.

## 5.18. வேலை வாய்ப்பு பதிவு

தமிழக அரசின் பெரும்முயற்சியால் பள்ளிக்கல்வி வரலாற்றில் முதன்முறையாக, 2011–2012ஆம் கல்வியாண்டு முதல் 10ஆம் வகுப்பு மற்றும் 12–ஆம் வகுப்பு முடித்துச் செல்லும் மாணவர்களது மதிப்பெண் சான்றிதழ், மாற்றுச் சான்றிதழ் ஆகியவை வேலைவாய்ப்பகத்தில் பதிவு செய்யப்பட்டு அதற்கான பதிவு அட்டை, மதிப்பெண் சான்றிதழ் மற்றும் மாற்றுச் சான்றிதழ்களுடன் அவரவர் பள்ளியிலேயே உடனுக்குடன் அளிக்கப்பெறுகிறது. இப்பதிவுமுறை உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவர்களின் சான்றிதழ்கள் 100% வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்படுவதை உறுதி செய்கிறது.

## 5.19. ஆசிரியர் அல்லாத மற்ற பணியாளர்கள்

அரசின் அறிவிப்பின்படி 344 இளநிலை உதவியாளர்கள், 710 ஆய்வக உதவியாளர்கள், 2001 காவலர்கள், 2999 துப்புரவாளர்கள் ஆகிய பணியாளர்களை நிரப்ப ஆணை வழங்கப்பட்டுள்ளது. 2012–2013 ஆம் கல்வி ஆண்டில் மேற்கண்ட பணியாளர்கள் பணியமர்த்தப்படுவர்.

## 5.20. மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கான உள்ளடங்கிய இடைநிலைக் கல்வித் திட்டம்

அனுபவமுள்ள அரசு சாரா நிறுவனங்களுடன் இணைந்து இத்திட்டம் மாற்றுத் திறனுடைய மாணவர்களுக்கு இடைநிலைக்



கல்வியினை வழங்குகிறது. மத்திய அரசின் முழு நிதி உதவியுடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது..

9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் 14+ முதல் 18+ வயதிற்குட்பட்ட தனி கவனம் தேவைப்படும் குழந்தைகள் அனைவரும் தங்களது இடைநிலைக் கல்வியினை வெற்றிகரமாக முடிக்க இத்திட்டம் உதவிகரமாக உள்ளது. இத்திட்டமானது மத்திய அரசின் 100% நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 17 அரசு சாரா நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, 15,365 மாற்றுத் திறனுடைய மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

## 5.21. யோகா

யோகா என்பது மனம், உடல், ஆன்மாவை ஒருங்கிணைக்கும் உடற்பயிற்சியாகும். எனவே, பள்ளி மாணவர்களுக்கு யோகா கற்றுத்தரப்படுகிறது. உடற்கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 2 பாடவேளைகளில் ஒரு பாட வேளை யோகா கற்றுத்தர ஒதுக்கப்பட்டுள்ளது.

## 5.22. சாரண சாரணியர் இயக்கம்

சாரண சாரணியர் இயக்கம் தமிழ்நாட்டிலுள்ள அனைத்து பள்ளிகளிலும் செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் முக்கிய சமூக பணிகள் சுற்றுப்புறத்தை சுத்தப்படுத்துதல், மரம் வளர்த்தல்,

போக்குவரத்தைக் கட்டுப்படுத்துதல் மற்றும் முதலுதவி செய்தல் ஆகும். இயக்கத்திற்கு தமிழக அரசின் மானியத்தொகையாக ரூ.7.00 இலட்சம் வழங்கப்படுகிறது. இத்தொகையைக் கொண்டு இவ்வியக்கத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மாத ஊதியம் மற்றும் அரசு வழங்கும் சலுகைகள் அனைத்தும் வழங்கப் படுகின்றன.

1998–1999ஆம் ஆண்டு முதல் தலைசிறந்த சாரண சாரணியர்களுக்கு "**இராஜ்யபுரஸ்கார்**" விருது தமிழ்நாடு மேதகு தமிழக ஆளுநரால் வழங்கப்பட்டுவருகிறது. இதற்காக ஆண்டுதோறும் ரூ.5.00 இலட்சம் தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

### 5.23. சுற்றுசூழல் மன்றம்

சுற்றுசூழல் குறித்த சமுதாய விழிப்புணர்ச்சியை மாணவர்களுக்கு ஏற்படுத்த இம்மன்றம் 1200 பள்ளிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பள்ளிகளுக்கு பள்ளி ஒன்றுக்கு தலா ரூ.1,250/– வீதம் சுற்றுசூழல் மற்றும் வனத் துறையின் மூலம் வழங்கப்படுகிறது. 7,500 பள்ளிகளில் மத்திய அரசின் நிதி உதவியுடன் தேசியப் பசுமைப்படைத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளுக்கு சுற்றுச் சுழல் மற்றும் வனத் துறையின் மூலம் மன்ற செயல்பாட்டுக்காக பள்ளி ஒன்றுக்கு ரூ.2500/– நிதி உதவி அளிக்கப்படுகிறது.

இச்சுற்றுச்சூழல் மன்றங்களும், தேசியப்பசுமைப்படை மன்றங்களும் ஒருங்கிணைந்து மரம்நடுதல், தோட்டம் அமைத்தல் மற்றும் இதர சுற்றுச்சூழல் பராமரிப்புப் பணியில் ஈடுபட்டுவருகிறது.



### 5.24. இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம்

தமிழ்நாட்டில் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டுவருகின்றது. மாவட்ட ஆட்சியரே இளைஞர் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஆவார். இவ்வியக்ககத்தில் மாணவர்கள் தன்னார்வத் தொண்டர்களாகவும் ஆசிரியர்கள் ஆலோசகர்களாகவும் உள்ளனர். இச்சங்கம் மாணவர்களின் பல்வேறு திறமைகளை மேம்படுத்துவதற்காகவும், மனிதநேயப் பண்புகளை வளர்த்திடவும் உதவுகிறது.

### 5.25. இளைஞர் திறன் வளர்த்தல் திட்டம்

இத்திட்டத்தின் மூலம் மாணவர்களிடம் மறைந்திருக்கும் திறமைகள் பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, ஓவியம் வரைதல், வினாடிவினா, இசை, கவிதை எழுதுதல், பரத நாட்டியம், கிராமிய நடனம், இசைக் கருவிகள் இசைத்தல், நடிப்பு, தனி நடிப்பு, நாடகம், இசைப்போட்டிகள் ஆகிய போட்டிகள் ஒவ்வொரு ஆண்டும் பள்ளி / கல்வி மாவட்ட / வருவாய் மாவட்ட / மாநில அளவில் போட்டிகள் நடத்தப்படுதல் ஆகியவற்றின் மூலம் வெளிக் கொணரப்படுகின்றன. இதன்படி மாநில அளவில் வெற்றி பெறுகிறவர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படுகின்றன.

### 5.26. தமிழ்நாடு ஊரகப்பகுதி மாணவர் திறன் ஊக்குவித்தல்

ஊரகப் பகுதியில் பயிலும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாக அரசு/ அரசு உதவி பெறும் பள்ளிகளில் 8ஆம் வகுப்பில் 50 விழுக்காடு மதிப்பெண்ணுடன் தேர்ச்சி பெற்று 9 ஆம் வகுப்பு

படித்துக் கொண்டிருக்கும் மாணாக்கர்களே தகுதியானவர்கள் எனக் கருதப்பட்டு, ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதத்தில் அரசுத் தேர்வுத் துறையினரால் தனித் திறன் தேர்வுகள் நடத்தப்பட்டு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 50 மாணவர்கள், மற்றும் 50 மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆண்டிற்கு ரூ.1000/–ம் வீதம் 4ஆண்டுகளுக்கு 9ஆம் வகுப்பிலிருந்து 12ஆம் வகுப்பு வரை தொடர்ந்து பயிலும் மாணாக்கர்களுக்கு வழங்கப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும் ரூ.1,08,32,000 நிதி ஒதுக்கப்பட்டு முதன்மை கல்வி அலுவலர் மூலம் வழங்கப்படுகிறது. இவ்வுதவி பெறும் மாணவரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூபாய் ஒரு லட்சத்திற்கு மேல் இருக்கக் கூடாது.

## 5.27. நாட்டு நலப்பணித் திட்டம்

நாட்டு நலப்பணித்திட்டத்தின் முக்கிய குறிக்கோள், மாணவர்களின் ஆளுமைத் திறனை அவர்களின் சமூகசேவை, மருத்துவ முகாம்கள், இரத்த தான முகாம்கள், போன்ற நலத்திட்டங்களில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த விழிப்புணர்வு முகாம்கள் நடத்துவது மூலம் வளர்ப்பதாகும். பள்ளிக்கல்வித்துறையில் தற்போது, மேல்நிலைப் பள்ளிகளில் 1940 அலகுகளில் 97,000 மாணவத் தொண்டர்களுடன் இத்திட்டம் செயல்பட்டு வருகின்றது. இதற்கென ஓர் அலகிற்குத் தொடர்பணிகளுக்கென மானியமாக ரூ.11,000/– மற்றும் சிறப்பு முகாம் மானியமாக ரூ.11,250/– வீதம் வழங்கப்படுகிறது.



## 5.28. பெற்றோர் ஆசிரியர் கழகம்

பள்ளி வயதில் உள்ள அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்ப்பது, பள்ளியில் சேர்ந்தோர் இடைநிற்காமல் தொடர்ந்து பள்ளியிலேயே படிக்கச் செய்தல் மற்றும் கற்றல் கற்பித்தல் தரத்தை மேம்படுத்துதல் போன்றவை இக்கழகத்தின் முக்கிய நோக்கங்களாகும். 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதும் மாணவர்களுக்குப் பயன்படும் வகையில் வினா வங்கிகள் மற்றும் மாதிரி வினாத்தாள்களை அச்சிட்டு வெளியிடப்பட்டு வருகின்றன. இக்கழகம் மார்ச் / ஏப்ரல் பொதுத்தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி பெற்ற உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்குப் பரிசுத் தொகையும் சான்றிதழும் வழங்கி பெருமைப்படுத்துகிறது.

## 5.29. நபார்டு உதவி திட்டங்கள்

*உள்கட்டமைப்பு வசதிகள்*

பள்ளிக் கல்வித்துறையின் கீழ் இயங்கும் உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளின் கட்டடங்கள், வகுப்பறைகள், குடிநீர் வசதிகள், கழிவறை, ஆய்வுக் கூடங்கள் போன்ற வசதிகள் நபார்டு வங்கி உதவியுடன் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பகுதி I முதல் VII முடிய 1569 பள்ளிகளுக்கு ரூ.708 கோடி செலவிடப்பட்டுள்ளது. பகுதி VIII முதல் X-B முடிய 982 பள்ளிகளுக்கு ரூ.939.53 கோடி ஒதுக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

*இருக்கைகள்*

அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டப்படும் கூடுதல் வகுப்பறைகளில் மாணவர்களுக்கு அமரும் இருக்கைகளும், ஆசிரியர்களுக்கு மேசை இருக்கை போன்றவையும் வழங்கப்பட்டுள்ளன.

| | ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் இலட்சத்தில் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பகுதி 1–VII RIDF XII | 6908.73 | 1530 |
| பகுதி VIII–IX RIDF XIII & XIV | 2720.09 | 420 |
| பகுதி XA RIDF XV | 1038.08 | 267 |

*அறிவியல் உபகரணங்கள்*

நபார்டு திட்டத்தின் கீழ் நபார்டு வங்கி நிதியுதவியுடன் கட்டப்பட்ட அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் ஆய்வக உபகரணங்கள் வழங்குதல்

| | ஒதுக்கப்பட்ட தொகை ரூபாய் இலட்சத்தில் | பள்ளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பகுதி 1–VII RIDF XII | 831.16 | 1112 |
| பகுதி VIII-IX RIDF XIII & XIV | 44.00 | 54 |
| பகுதி X A RIDF XV | 140.36 | 181 |
| பகுதி XA RIDF XV | 154.60 | 215 |



## 5.30.பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கான நிதியொதுக்கீடு

இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியின் முன்னேற்றத்திற்கு 2011–2012 ஆம் ஆண்டிற்கு ரூ.6441.28 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. தரமான அடிப்படை வசதிகளை வழங்குவதன் மூலம் அனைவருக்கும் கல்வி வழங்குதல் எனும் அரசின் தொலைநோக்கின்படி 2012–2013 ஆம் ஆண்டிற்கான ஒதக்கீடு ரூ.6936.38 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது.

அரசின் நிலையான உறுதுணையுடன் பள்ளிக்கல்வித் துறையின் தொடர்ந்த முயற்சிகளாலும், அரசு அனைத்து வகுப்புகளிலும் மாணவர்களின் சேர்க்கையை அதிகரித்து இடைநிற்றலைக் குறைத்து குறிப்பாக பொதுத் தேர்வெழுதும் மாணவர்களின் செயல்திறனை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

# 6. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம்

## 6.1. அறிமுகம்

அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் மைய, மாநில அரசுகளின் பங்களிப்புடன் 9 மற்றும் 10ம் வகுப்பு வயதுப் பிரிவினர் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி அளித்தல் என்ற இலக்கை எட்டுவதற்காகவும் தொடக்கக்கல்வி முடித்தவர்களின் இடைநிற்றலை தவிர்ப்பதற்காகவும் தொடங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தை அமல்படுத்துவதற்காக சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இச்சங்கம் முதன்மையாக நடுநிலைப் பள்ளிகளை தேவையான இடங்களில் உயர்நிலைப்பள்ளிகளாக தரமுயர்த்தவும், தரமான மேம்பட்ட இடைநிலைக் கல்வியை தருவதற்கும், கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், போதுமான ஆசிரியர்களை நியமிப்பதற்கும் ஆசிரியர்களின் திறன் மேம்படுத்துவதற்கும் உருவாக்கப்பட்டுள்ளது. தவிர, கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் மாதிரிப்பள்ளிகளை ஏற்படுத்துதல் மற்றும் மாணவியர் விடுதிகளை ஏற்படுத்துதல் ஆகிய இரு பெரும் திட்டப் பணிகளையும் இச்சங்கம் மேற்கொள்கிறது.

தமிழ் நாடு அரசு உருவாக்கியுள்ள “**தொலைநோக்கு 2023**”–லும் வலியுறுத்தப்பட்டுள்ள அனைவருக்கும் இடைநிலை கல்வித் திட்டம் அனைவருக்கும் முழுமையான இடைநிலைக்



கல்வியை தரவேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. **2011–2012–ல் 710** பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் பள்ளிகளைத் தரம் உயர்த்தவும் **ரூ.1069.51** கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

## 6.2. தொலை நோக்கு

14–18 வயது வரையிலான பள்ளிக் குழந்தைகள் அனைவருக்கும் தரமான இடைநிலைக் கல்வியை வழங்குவது இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## 6.3. நோக்கங்கள்

- பள்ளி வசதியற்ற குடியிருப்புகளுக்கு 5 கி.மீ. தொலைவுக்குள் ஒரு உயர்நிலைப் பள்ளியையும், 7–10 கி.மீ. தொலைவிற்குள் ஒரு மேல்நிலைப்பள்ளியையும் ஏற்படுத்துதல்.
- 2017ம் ஆண்டிற்குள் அனைவருக்கும் இடைநிலைக் கல்வி அளித்து 2020ஆம் ஆண்டிற்குள் நூறு விழுக்காடு சேர்க்கையை உறுதி செய்தலும், தக்க வைத்தலும்.
- பொருளாதாரத்தில் நலிவுற்றோர், கல்வியில் பின் தங்கியோர், கிராமப்புறத்தில் வசிக்கும் மாணவியர் மற்றும் இயலாத் தன்மையுடையோர், ஆதிதிராவிடர், பழங்குடியினர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், கல்வியில் பின்தங்கிய சிறுபான்மையினர் ஆகியோருக்கு அவர்கள்

வசிக்குமிடத்திற்கு அருகில் தரமான இடைநிலைக் கல்வியைத் தருதல்.

- நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்துதல்.
- ஏற்கனவே உள்ள இடைநிலைப் பள்ளிகளை மேம்படுத்தும் வகையில் தேவையான கூடுதல் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல்.

11ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் 75:25 என்ற விகிதத்திலும் 12ஆம் ஐந்தாண்டு திட்ட காலத்தில் 50:50 என்ற விகிதத்திலும் மைய மாநில அரசுகளால் இத்திட்ட செலவுகள் பகிர்ந்து கொள்ளப்படும்.

**6.4. செயல்பாடுகள்**

2011–12ம் ஆண்டில் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்பட்டன:

- 710 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப்பள்ளிகளாக தரமுயர்த்ததப்பட்டுள்ளன.
- ஏற்கெனவே செயல்பட்டு வரும் அரசு உயர் / மேல்நிலைப் பள்ளிகளுக்கு 6752 கூடுதல் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன.
- 544 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 344இளநிலை உதவியாளர் பணியிடங்களும், 544 ஆய்வக உதவியாளர் பணியிடங்களும் தோற்றுவிக்கப்பட்டன.



- 5647 அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு பள்ளி மான்யமாக ரூ. 50,000/– வீதம் பள்ளிகளுக்கு தேவையான அறிவியல் உபகரணங்கள், அறிவியல் கருவிகள் மற்றும் செய்தித்தாள்களை வாங்குவதற்கு ரூ.28.24 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 4092 அரசு உயர்நிலை / மேல்நிலைப்பள்ளிகளுக்கு சிறுமராமத்துப்பணி மான்யமாக ரூ. 25,000/– வீதம், கழிப்பறை வசதிகளுக்காகவும், கதவு மற்றும் தரைகளை சரிசெய்வதற்காகவும், மின்சாதன பொருட்களை பழுதுபார்க்கவும், புதுப்பிக்கவும் ரூ.10.23 கோடி செலவிடப்பட்டுள்ளது.
- 9 மற்றும் 10ம் வகுப்பு பயிற்றுவிக்கும் 40953 ஆசிரியர்களுக்கு பணியிடைப் பயிற்சி நடத்தப்பட்டன. ஆங்கிலம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்களுக்கு “British Council” உதவியுடன் பயிற்சி அளிக்கப்பட்டது.
- தமிழ், அறிவியல், கணிதம் மற்றும் சமூக அறிவியல் ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மற்றும் கல்லூரி வல்லுநர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டன.
- உடற்கல்வி ஆசிரியர்களுக்கு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் தடகள மற்றும் விளையாட்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டன.
- இசை ஆசிரியர்களுக்கு இசைக் கல்லூரிகளின் மூலம் செவ்வியல் மற்றும் நாட்டுப்புற இசை வடிவங்களில் பயிற்சி அளிக்கப்பட்டன.

- அரசு கவின் கலைக் கல்லூரியின் ஒத்துழைப்போடு ஓவிய ஆசிரியர்களுக்கு பாரம்பரிய கலை தவிர நவீன கலை வடிவங்களிலும் பயிற்சி அளிக்கப்பட்டன.
- இந்திய மேலாண்மை நிறுவனம்–பெங்களூரு, இந்திய தொழில்நுட்ப நிறுவனம்–சென்னை, பாரதிதாசன் மேலாண்மை நிறுவனம்–திருச்சி போன்ற மேலாண்மை நிறுவனங்களின் மூலம் 630 உயர் / மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கு நிர்வாகப் பயிற்சி அளிக்கப்பட்டது.
- இந்திய இரயில்வே உணவு மற்றும் சுற்றுலா கழகம் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா கழகம் ஆகிய நிறுவனங்களின் வாயிலாக ரூ.8 கோடி செலவில் திறந்த கல்விப்பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம் 16000 ஆசிரியர்கள் பயன் பெற்றனர்
- 4622 அரசு உயர் / மேல்நிலைப்பள்ளிகளில் 9ம் வகுப்பில் பயிலும் 125394 மாணவர்களுக்கு இணைப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது

### 6.5. மாதிரிப்பள்ளிகள்

கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் கல்வி மேம்பாட்டுக்காக மாதிரிப்பள்ளிகள் ஏற்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தின்கீழ் 44 கல்வியில் பின்தங்கிய ஒன்றியங்களில் 44 மாதிரிப்பள்ளிகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக 4800 கிராமப்புற மாணவர்கள் பயன்பெறும் வகையில் 18 மாதிரிப்பள்ளிகள் தொடங்கப்பட்டன. 126 முதுகலை ஆசிரியர்கள்,



90 பட்டதாரி ஆசிரியர்கள், 54 சிறப்பாசிரியர்கள் மற்றும் 126 ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஒப்பளிக்கப் பட்டுள்ளன. இதற்கான உள்கட்டமைப்பு வசதிகள், தமிழ்நாடு காவலர் வீட்டு வசதி கழகத்தின் மூலம் செயல் படுத்தப்பட்டு வருகின்றன.

### 6.6. மாணவியர்கள் விடுதி

சமுதாய மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள பெண் குழந்தைகளின் கல்வியின் தேவையை கருத்தில் கொண்டு 13 மாவட்டங்களில் உள்ள கல்வியில் பின்தங்கியுள்ள 44 ஒன்றியங்களில் 44 மகளிர் விடுதிகள் ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு விடுதியிலும் 100 மாணவிகள் சேர்க்கப்படுவர். பெண் குழந்தைகளின் இடைநிற்றலை குறைப்பதற்கு இவ்விடுதிகள் வழிவகை செய்யும். இவற்றின் கட்டுமான பணிக்கான திருத்திய திட்ட மதிப்பீடு தயார் செய்து மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. திருத்திய திட்ட மதிப்பீட்டின்படி ஒப்புதல் பெற்றவுடன் 2012–13ம் ஆண்டில் மாணவியர் விடுதிகள் கட்டப்படும்.

இடைநிலைக் கல்வியில் இடைநிற்றலைத் தவிர்ப்பதற்காக அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின்கீழ் 1,37,543 மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் 1254 நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன. இப்பள்ளிகளில் 6814 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களும் 544 சிறப்பாசிரியர் பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

# 7. மெட்ரிகுலேசன் பள்ளிகள்

## 7.1. முன்னுரை

சுயநிதி மெட்ரிகுலேசன் / மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதுடன் அவற்றைக் கண்காணிக்கும் பொறுப்பினையும் மெட்ரிக்குலேசன் பள்ளிகள் இயக்ககம் மேற்கொண்டு வருகிறது. தற்போது இவ்வியக்ககத்தின் கீழ் 3769 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. தற்போது மாநிலப் பொது பள்ளிக் கல்வி வாரியத்தால் தயாரிக்கப்பட்ட பாடத்திட்டத்தினை அனைத்து சுயநிதி மெட்ரிகுலேசன்/மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளிகளும் பின்பற்றி வருகின்றன.

## 7.2. தொலைநோக்கு

ஆங்கில வழியில் தரமான கல்வியினை வழங்குவதை உறுதி செய்தல்.

## 7.3. குறிக்கோள்கள்

- ❖ மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்கும் போது, மாணவர்களுக்கான அனைத்துப் பாதுகாப்பு அம்சங்களும் முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை உறுதி செய்தல்.



- ❖ அங்கீகாரம் வழங்கும் நடைமுறையை எளிமைப்படுத்த ஒளிவு மறைவற்ற வகையில் தேவையான தகவல்களை வழங்குதல்.
- ❖ தரமான கல்வியினை உறுதி செய்யும் வகையில் அரசால் வகுக்கப்பபட்ட கொள்கைகளான தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டம் மற்றும் முப்பருவ முறைப் பாடத்திட்டம் ஆகியவற்றை செயல்படுத்துதல்.
- ❖ தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணங்கள் முறைப் படுத்துதல்) சட்டம் 2009 மற்றும் அதன்கீழ் அமையப்பெற்ற விதிகளை செயல்படுத்துவது.
- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டம் 2009 ஐ நடைமுறைப்படுத்துவதை உறுதிப்படுத்துதல்.
- ❖ பள்ளி நிர்வாகங்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு நிலைகளில் திறன் வளர்க்கும் பயிற்சி அளித்து வலுப்படுத்துதல்.
- ❖ அரசால் அவ்வப்பொழுது வழங்கப்படும் ஆணைகள், இயற்றப்படும் சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் ஆகியவை முறையாக செயலாக்கம் செய்யப்படுவதை உறுதி செய்தல்.

## 7.4. தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டம் மற்றும் முப்பருவ முறைப் பாடத்திட்டம்

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து பள்ளிகளிலும் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டம் மற்றும் முப்பருவ முறைப் பாடத்தினை பின்பற்ற அரசு அறிமுகப்படுத்தியுள்ளது. 2012–13 ஆம் கல்வியாண்டில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திட்டம்

மற்றும் முப்பருவ முறைப் பாடத்தினை அனைத்து தனியார் பள்ளிகளும் பின்பற்றுகிறதா என்பதை உறுதி செய்ய மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகம் அரசுடன் இணைந்து செயலாற்றுகிறது.

**7.5. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009ஐ நடைமுறைப்படுத்துதல்.**

அனைத்துத் தனியார் பள்ளிகளிலும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மற்றும் விதிகளை கடைபிடிக்க வேண்டும். வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவு (ம) நலிவடைந்த பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு தனியார் பள்ளிகளில் 25% இட ஒதுக்கீடு வழங்குவதை மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரகத்தால் கண்காணிக்கப்படுகிறது.

**7.6. தனியார் சுயநிதி பள்ளிகளுக்கான கட்டணத்தை ஒழுங்குபடுத்துதல்**

தனியார் சுயநிதி பள்ளிகளில் உள்கட்டமைப்பு வசதிகள், நிர்வாக செலவினங்கள், பள்ளி அமைவிடம் மற்றும் மாணவர்களின் நலனுக்காக செலவிடப்படும் பிற அனைத்துச் செலவினங்களின் அடிப்படையில் மாணவர்களிடமிருந்து வசூலிக்க வேண்டிய கட்டணத்தை நிர்ணயிப்பதற்கு ஓய்வு பெற்ற உயர்நீதி மன்ற நீதியரசர் அவர்கள் தலைமையில் ஓர் குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு அனைத்து வாரியங்களின் கீழ் வரும் தனியார் பள்ளிகள் கட்டண விகிதங்களை நிர்ணயிக்கும்.



**7.7. அங்கீகாரத்தினை புதுப்பிக்கும் முறையினை எளிமையாக்க தொடங்கப்பட்ட வழிமுறைகள்**

மெட்ரிக்/மெட்ரிக்குலேசன் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகிறது. அங்கீகாரத்தைப் புதுப்பிக்கக் கோரும் கருத்துருக்களை பரிசீலிக்கும் பொழுது எழும் இடர்பாடுகளைக் களையவும், துரிதமாக மற்றும் வெளிப்படையாக பரிசீலிக்கவும் ஏதுவாக அங்கீகாரம் கோரும் ஒவ்வொரு பள்ளிக்கும், ஒரு நிரந்தரப் பதிவேடு (Permanent Registers) தயாரிக்கப்பட்டு பராமரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், ஆவணங்களைப் திறம்பட தொடர்ந்து பரிசீலிக்க ஒவ்வொரு பள்ளிக்கும் தனித்தனியாக அடையாள எண் வழங்கப்படுகிறது. இம்முறையின் மூலம் ஒரே ஆவணங்களைப் பலமுறை பரிசீலிக்கும் நிலை தவிர்க்கப்பட்டு கோப்புகளை பரிசீலித்தல் எளிமையாகப்பட்டுள்ளது.

# 8. மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்

## 8.1. முன்னுரை

ஊலகமயமாதல் மற்றும் தகவல்தொடர்பு மற்றும் தொழில்நுட்பங்கள் என விரைந்து மாறிவரும் காலக்கட்டத்தில் கல்வியின் நோக்கங்கள், இன்றைய தேவைகள், இளைஞர்களின் கனவுகள் மற்றும் சமுதாயத்தின் உயர்ந்த பண்புகளை பிரதிபலிப்பதாக அமைதல் வேண்டும். இன்றைய கல்வித் திட்டம் மனனம் செய்தல், பாடப்புத்தகத்தை மட்டுமே படித்து அறிவு பெறுதல் மற்றும் ஒரே மாதிரியான தேர்வுமுறை என அமைந்துள்ளது. இதுவரை கல்வி மதிப்பீட்டுமுறை என்பது எழுத்துத் தேர்வை மட்டுமே அடிப்படையாகக் கொண்டுள்ளது. மேலும், இத்தகு மதிப்பீடானது, பாடக்கருத்தை ஒப்பிக்கும் திறனையே அளவிடுகிறது. வாழ்க்கையில் உண்மை நிலைகளை எதிர்கொள்வதில், குழந்தைகளின் திறன்களை மதிப்பீடு செய்வதில்லை. ஏதோ சில காரணங்களால் ஆண்டு இறுதித் தேர்வெழுத முடியாமல் போகும் மாணவர்கள் அடுத்த உயர் வகுப்புக்குச் செல்லத் தகுதியற்றவர்களாகக் கருதப்படுகின்றனர்.

இவற்றையெல்லாம் உணர்ந்த நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்துள்ள தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை இத்தகைய நிலையை நீக்கும். மேலும், தமிழகக் கல்வி வரலாற்றில் முத்திரை பதிக்கும் நோக்கோடு நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் முப்பருவமுறையை அறிமுகப்படுத்தி,



மாணவர்தம் உடல், மன அழுத்தங்களைப் போக்கிக் கற்க வழிவகை செய்துள்ளார்.

உயர்ந்த இவ்விரு திட்டங்களை நிறைவேற்றவும் பள்ளிக்கல்வித் துறைக்கு ஊக்கம் அளிக்கவும், தலைமை நிறுவனம் ஒன்று இருப்பது இன்றியமையாதது ஆகும். இதனைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள், 1989ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வந்த ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககத்தை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாகத் தரம் உயர்த்தியுள்ளார்கள். இந்நிறுவனம், பள்ளி முன்பருவக் கல்விமுதல் பன்னிரண்டாம் வகுப்புவரை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்குத் தரமான பயிற்சியும் பணிமுன் பயிற்சி, பணியிடைப் பயிற்சிகளையும் கல்விக்கான தேவைகயையும் தரமாக வழங்க வாய்ப்பளிக்கிறது. இதனால், மாண்புமிகு முதல்வர் அவர்களின் தொலைநோக்குப் பார்வை உலகத் தரத்திற்கு இணையான வியத்தகு தரமாற்றங்களைக் கல்வித் துறைக்குத் தரும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தரமான ஆசிரியர்களை தரமான ஆசிரியர் கல்வியே உருவாக்குகின்றது. 1989ல் இருந்து ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயற்சி நிறுவனம் ஆசிரியர்களுக்கு பயிற்சி அளித்து கற்பிக்கும் தரத்தை உயர்த்தி வந்துள்ளது. 26.3.2012 முதல் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது.

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் மாநிலத்தில் தரமான கல்வியை வழங்குவதற்கு பொறுப்பான உயர்நிலை அமைப்பாகும். இவ்வமைப்பு ஒரு இயக்குநர் தலைமையில், நான்கு இணை இயக்குநர்கள், இருபத்தியோரு உதவி பேராசிரியர்கள் மற்றும் நாற்பத்தியேழு நிர்வாகப் பணியாளர்களுடன் செயல்பட்டு வருகின்றது. இதன் கட்டுப்பாட்டின் கீழ் அதிநவீன தொழில் நுட்ப உபகரணங்களுடன் கூடிய கல்வித் தொலைக்காட்சி படப்பதிவு நிறுவனமும், மாநிலக் கல்வி மேலாண்மை மற்றும் பயிற்சி நிறுவனமும் உள்ளன.

தமிழகத்தில் 30 மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்களும் (District Institute of Education and Training), 9 அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் (Government Teacher Training Institutes), இவற்றில் 722 கல்வியாளர்களும், 508 ஆசிரியர்கள் அல்லாத அலுவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இந்நிறுவனத்தின் கீழ் 43 அரசு உதவிபெறும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும், 680 சுயநிதித் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களும் ஆக ஆசிரியர் கல்விக்கென மொத்தம் 762 ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் ஆண்டு தோறும் 49,000 சேர்க்கை இடங்களை உள்ளடக்கிய ஆசிரியர் தொடக்கக் கல்வி இரண்டாண்டு பட்டயப்படிப்பினை வழங்குகின்றன.



## 8.2. தொலைநோக்குப் பார்வை

பள்ளி முன்பருவம்முதல் பன்னிரண்டாம் வகுப்புவரை அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியைத் தர மாநிலத்திற்கு ஏற்புடைய கலைத் திட்டத்தைத் திட்டமிடல், பாடத்திட்டம் வடிவமைத்தல், பாடநூல் உருவாக்குதல், கற்போர் விரும்பும் மதிப்பீட்டுமுறை, பணிமுன் மற்றும் பணியிடைப் பயிற்சி, கற்றல் கற்பித்தல் ஆராய்ச்சி, கல்விப் புதுமைகளைப் பரவலாக்கல், கல்வியாளர் பரிமாற்றம் முதலியவற்றின்வாயிலாக ஆசிரியர்களின் கற்பித்தல் பணி முன்னேற்றத்திற்கு வழிவகுக்கிறது.

## 8.3. நோக்கங்கள்

- ❖ ஒவ்வொரு மாணவரும் தமது உள்ளார்ந்த திறன்களை மெய்ப்படுத்த ஏதுவாகத் தமிழகமெங்கும் உள்ள ஒவ்வொரு பள்ளியையும் ஒரு கற்கும் நிறுவனமாக மாற்றுதல்.
- ❖ 1 முதல் 12 வகுப்புகளுக்கான கலைத்திட்டம், பாடத்திட்டம் மற்றும் குழந்தைகளுக்கு விருப்பமான பாடநூல்கள், கற்பித்தல் முறைகளை உருவாக்குதல்.
- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை எல்லா இடங்களிலும் நடைமுறைப்படுத்தவதை உறுதிசெய்தல்.
- ❖ அனைத்து நிலைகளிலும் கல்வித்தரத்தை மேம்படுத்துதல்.
- ❖ மாநிலம் முழுவதும் கல்விசார் ஆராய்ச்சிகள் மற்றும் பள்ளிக் கல்வி தொடர்பான பயிற்சிகளுக்கு முழு உதவி அளித்தல்.

❖ மாணவர்களின் முழு வளர்ச்சிக்கு உறுதுணையாக உள்ள தமிழக அரசின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைத்துக் கல்வித்துறை இயக்ககங்களுக்கும் உதவி அளித்தல் மற்றும் ஆலோசனை வழங்குதல்.

❖ பள்ளித் தலைமை ஆசிரியர்கள், ஆசிரியர் கல்வி நிறுவனங்களுக்கு உலகமயமாக்குதலின் நோக்கமான சமத்துவம் மற்றும் சமூக நீதியை தொடக்க மற்றும் இடைநிலைக் கல்வி மூலம் அடைந்திட தேவையான வழிகாட்டுதல்களை வழங்குதல்.

❖ மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், ஆசிரியர் கல்வி நிறுவனங்களின் ஆசிரியர் கல்வித் தரத்தை மேம்படுத்த வழிகாட்டுவதோடு மேற்பார்வை செய்தல்.

❖ ஆசிரியர்களுக்கான வளநூல்களை மேம்படுத்த உயர்கல்வி நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுதல்.

❖ ஆசிரியர் கல்விப் பாடத்திட்டத்தை மீளாய்வு செய்து, வளநூல்களைக் குறித்த கால இடைவெளியில் மாற்றியமைத்தல்.

❖ நம் நாட்டின் உயர்கல்வி நிறுவனங்களான NCERT, RIE, NUEPA மற்றும் நாட்டில் உள்ள சிறந்த நிறுவனங்களுடன் இணைந்து, ஆசிரியர் பணி, ஆசிரியர் பயிற்றுநர்களின் பணிகளை மேம்படுத்துதல்.

❖ பள்ளிக் கல்வித்தரத்தை உயர்த்த உள்ளூர்ப் பாடப்பொருள்களுக்கான பயிற்சி அளித்துக் கல்வித் தரத்தை உறுதி செய்தல்.



❖ ஆய்வுக் கட்டுரைகள், சான்றுடன் கூடிய ஆவணங்கள் முதலியவற்றைக் கொண்டு புதுப்புதுப் பயிற்சிகளைப் பரவலாக்குதல்.

❖ கல்வித்தரம் சார்ந்த சிக்கல்களைத் தீர்க்க தேசிய அளவில் கருத்தரங்குகள், ஆய்வுக்கூட்டங்களை நடத்துதல்.

❖ தலைமைப் பண்பு வளர மாநிலம் முதல் ஒன்றியம் வரையிலான அனைத்துக் கல்வித்துறை அலுவலர்களுக்கு பயிற்சி அளித்தல்.

❖ மாணவர்களின் அனுபவக் கற்றலை உறுதிப்படுத்தும்வகையில், செய்தித்தொடர்பு மற்றும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, முறையாகத் தரவுகளை மேலாய்வு செய்தல், பாடப்பொருள்களைக் கணினிமயமாக்குதல் பல்லூடாகப் பயன்படுத்துதலை விரிவுபடுத்துதல் முதலியவற்றைப் பயன்படுத்த கற்றல் பொருள்களை உருவாக்குதல்.

## 8.4. திறன் மேம்பாடு சார்ந்த பயிற்சிகள்

❖ இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், துணை இயக்குநர்கள், குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு மற்றும் செய்தித்தொடர்புக் கருவிகளை உள்ளடக்கிக் கொள்கைகளை வகுத்துத் திட்டமிட்டு அவற்றை நடைமுறைப்படுத்தலுக்கான உத்திகளைக் கையாளுதல், நிதி மேலாண்மை செய்தல்.

- ❖ மாவட்ட அளவில் உள்ள முதன்மைக் கல்வி அலுவலர்கள், அனைவருக்கும் கல்வி இயக்க மாவட்டத் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள், அனைவருக்கும் இடைநிலைக் கல்விக்கான மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர்கள், மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், மெட்ரிகுலேசன் பள்ளி ஆய்வாளர்கள், மாவட்ட உதவித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர்களுக்கு முறையான திட்டமிடுதலும் குழந்தைகளுக்கான அனைவருக்கும் இலவச மற்றும் கட்டாயக் கல்வி மற்றும் உரிமைச் சட்டம், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடுசார்ந்த பயிற்சியினை நடத்துதலும், மேலாய்வு செய்தலும், நிதி நிருவாகக் கணக்குகளை முறையாகப் பராமரிக்கப் பயிற்சியளித்தல்,
- ❖ வட்டார அளவில் உதவித் தொடக்கக்கல்வி அலுவலர்கள், வட்டார வளமைய மேற்பார்வையாளர்கள் ஆகியோர் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, மேலாய்வு செய்தல். நிதி நிருவாகக் கணக்குகளை முறையாகப் பராமரிக்கப் பயிற்சியளித்தல்.
- ❖ மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனத்தின் முதுநிலை விரிவுரையாளர், விரிவுரையாளர், வட்டார வளமைய ஆசிரியப் பயிற்றுநர்கள் ஆகியோரைப் பாடப்பொருளை மேம்படுத்துதல், உரிய கலைத் திட்டத்தின் வாயிலாகக் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு, கல்விசார் தொழில்நுட்பக் கருவிகளைத்



தேவையான இடத்தில் பயன்படுத்துதல், மாணவர்களுக்கு ஏற்ற மதிப்பீட்டு உத்திகளைச் செயல்படுத்த பயிற்சியளித்தல்.

- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த அனைத்துப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்குப் பள்ளி மேம்பாட்டுக்கான திட்டமிடல், ஆசிரியர்களை மேற்பார்வை செய்தல், நிதி நிருவாகக் கணக்குகளை முறையாக செயல்படுத்த பயிற்சி அளித்தல்.
- ❖ குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினைச் செய்தித் தொடர்புக் கருவிகளைப் பயன்படுத்தி முறையாக ஆசிரியர்களுக்குப் பாடப்பொருள் மேம்படுத்துதல் சார்ந்த பயிற்சிகளைத் தருதல், புதிய பாடநூல்கள் குறித்து புத்தாக்கப் பயிற்சியளித்தல், கல்விசார் இணைச் செயல்களில் பயிற்சியளித்தல் (யோகா, உடல்நலம், பேணுதல் சார்ந்த பயிற்சிகள்).
- ❖ செய்தித் தொடர்புக் கருவிகளைக்கொண்டு அமைச்சுப் பணியாளர்கள் பள்ளி சார்ந்த பதிவேடுகளையும் கோப்புகளையும் பராமரித்திடவும், அலுவலகப் பணிகளை விரைந்து முடித்திட உரிய விதிகளில் பயிற்சி அளித்தல், யோகா குறித்துப் பயிற்சியளித்தல்.

## 8.5. கலைத்திட்டம், பாடத்திட்டம் மாற்றியமைத்தல் மற்றும் பாடநூல்களை மேம்படுத்தல்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் 1 முதல் 10ஆம் வகுப்புவரை பாடத்திட்டத்தினை வடிவமைக்கும் பணியினை மேற்கொண்டுள்ளது. தேசியக் கலைத்திட்டம் 2005இன் அடிப்படையில் குழந்தைகளை மையப்படுத்தி பாடநூல்கள் உருவாக்கப்பட்டன.

தேசியக் கலைத்திட்டம் 2005–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளாகிய, புத்தகத்தை மட்டும் சார்ந்திராமல் பள்ளிக்கு வெளியே உலக வாழ்க்கைக்கு உகந்த பாடநூல்களுக்கு அப்பாற்பட்ட அறிவினை பெறுதல், படிக்கும் முறையை மனப்பாடம் செய்வதிலிருந்து மாற்றம் செய்தல். குழந்தைகளின் ஒட்டுமொத்த வளர்ச்சியினை மேம்படுத்தும்வகையில் கலைத்திட்டத்தினை மேம்படுத்துதல், குழந்தைகளின் திறமையை மேம்படுத்தி, அவர்களின் அறிவினைத் தாங்களே மேம்படுத்தத் தூண்டுதல், தேர்வுமுறைகளை இலகுவாக மாற்றி, வாழ்க்கையோடு இணைப்பதுடன், நாட்டின் ஜனநாயகப் பண்புகளுக்கு உட்பட்டுத் தனித்தன்மையினை வளர்த்தல் ஆகியவை பாடத்திட்டத்திலும், பாடநூல்களிலும் வெளிப்படும்வகையில் உருவாக்குதல். பல்வேறு கல்வியாளர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகியோரின் பங்கேற்புகளும் இம்முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.



## 8.6. குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009–ஐ நடைமுறைப்படுத்துதல்.

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, தமிழ்நாடு குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமை விதிகள், 2011 ஆகியவற்றைக் கல்வித் துறையோடு தொடர்புடைய அனைத்துத் தரப்பினருக்கும் செய்தி வழங்குதல், தொடர்பு கொள்ளுதல் மற்றும் கல்வி ஆகியவற்றின் வாயிலாகக் கொண்டு செல்லும் பணியினை மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் மேற்கொண்டுள்ளது. கல்வித்துறை அலுவலர்கள், அனைத்துவகைப் பள்ளித் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்களுக்கு இச்சட்டம் தொடர்பான கருத்துகளை விளக்கும் பணியினை இந்நிறுவனம் மேற்கொண்டுள்ளது. இது தொடர்பாகப் பல பணிமனைகள், கூட்டங்கள் மற்றும் பயிற்சிகளை இந்நிறுவனம் நடத்தியுள்ளது. மத்திய அரசு வெளியிட்ட சட்டம், மாநில விதிகள் மற்றும் அரசாணைகள் கொண்டு பயிற்சிக் கையேடு, அடிக்கடி கேட்கப்படும் வினாக்கள் கொண்ட புத்தகம், வழிகாட்டு நெறிமுறைகள் இச்சட்டத்தினை நடைமுறைப்படுத்திட, அனைத்துத் தரப்பினரின் பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்டுள்ளன. மேலும், மாநில மற்றும் மாவட்ட அளவிலான ஆசிரியர் சங்க உறுப்பினர்களுக்கு இச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு பிரிவுகள் பற்றி விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனம், அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் அனைத்துக் கல்வித்துறை இயக்ககங்களுடன்

இணைந்து இச்சட்டம் தொடர்பாகப் பல்வேறு பயிற்சிகளை நடத்துவதுடன், இச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப் படுத்தும்போது எழும் பிரச்சினைகள், தடைகளைக் களையும் பணிகளையும் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

### 8.7. முப்பருவமுறை, தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை அறிமுகப்படுத்துதல் (கற்றல் சுமையினைக் குறைத்தல்)

தமிழ்நாட்டில் செயல்படும் பள்ளிகளில் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுமுறை அறிமுகமாக உள்ளது. பேராசிரியர், யஷ்பால் தலைமையிலான குழுவின் பரிந்துரைக்கேற்பச் 'சுமையற்ற கற்றல், தேசியக் கல்விக் கொள்கை (1986), தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு – 2005 மற்றும் கல்வித் தர மேம்பாட்டிற்காக அமைக்கப்பட்ட கல்விக் குழுக்கள் ஆகியவற்றின் வழிகாட்டுதல்கள், பரிந்துரைகள், தமிழ்நாடு அரசு தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை கல்வியை அறிமுகப்படுத்த உதவியுள்ளன. இம்முறை வாயிலாகக் குழந்தையின் ஒட்டுமொத்த வளர்ச்சி ஆண்டு முழுவதும் மதிப்பீடு செய்ய இயலும்.

இந்நிறுவனத்தால் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டினை நடைமுறைப் படுத்த, அனைத்து நிலை ஆசிரியர்களுக்கும் பயனளிக்கும்வகையில் பொது வழிகாட்டு நெறிமுறைகள் மற்றும் பாடவாரியாகக் கையேடுகள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கையேடுகள், பள்ளிகளில் ஆய்வு



செய்யப்பட்டுத் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு வல்லுநர்கள் மற்றும் மத்தியக் கல்வி வாரிய வல்லுநர்களின் ஆலோசனைகளின்படி சீரமைக்கப்பட்டுள்ளது. மாணவர்களின் புத்தகச் சுமையினை மேலும் குறைக்க, முப்பருவ முறையும் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

குழந்தையின் எடையைவிட அதிக எடையுடைய பாடநூல்கள், நோட்டுப் புத்தகங்களை மாணவர்கள் பள்ளிக்குச் சுமந்து செல்வதைத் தவிர்க்குமாறு 'யஷ்பால் குழு' எடுத்துக் கூறியுள்ளது. இக்குழுவின் அறிக்கையில், குழந்தைகளின் கல்விச் சுமையினைக் குறைக்கும் பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், மாணவர்களின் கல்விச் சுமையைக் கருத்தில்கொண்டு, மாணவர்களின் அழுத்தத்தை நீக்கும்வகையில் மூன்று பருவத்திற்கும் தனித்தனிப் பாடநூல்கள் உருவாக்கியுள்ளது.

### 8.8. பள்ளிக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சியில் செய்தித் தொடர்பு மற்றும் தொழில்நுட்பக் கல்வியை ஒருங்கிணைத்தல்

மாநிலத்தின் தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பக் கல்விக் கொள்கையை உருவாக்குவதில் மாநில கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் முனைப்புடன் செயல்படுகிறது. ஆசிரியர் கல்வி தொடர்பாக இந்நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட விவரங்களின்படி மின்னனு களஞ்சியம் ஒன்றை உருவாக்கி மாநிலம் முழுவதிலும் உள்ள ஆசிரியர்கள் பயன்பெறும் வகையில் அதனை

இணையதளத்தில் வெளியிடவும் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும், தகவல் தொடர்பு மற்றும் தொழில் நுட்பக் கல்வியியலில் ஆசிரியர்களுக்குண்டான பயிற்சித் திட்டத்தினை இந்நிறுவனத்தின் தலையாய பணியாகக் கொண்டுள்ளது.

### 8.9. ஆராய்ச்சி

தரமான கல்வி வழங்குவதில் கல்வி ஆய்வுகள் இன்றியமையாத இடம் வகிக்கிறது. வகுப்பறை நிகழ்வுகளை வளப்படுத்தவும், மேம்படுத்தவும் பயன்படும் செயல்திட்டங்கள் கற்றல் நிகழ்வுகளை மேற்கொள்ளும் வகையில் ஆராய்ச்சி தொடர்பாக எழும் பிரச்சினைகள், செயல்திட்டங்கள் முதலியவற்றை வடிவமைப்பதில் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது. மாணவர்களின் கற்றல் அடைவு நிலை சார்பாக அடிப்படை ஆய்வு மேற்கொண்டு பாடம்சார்ந்த கற்றல் நிலையினை அறியவும், மேம்படுத்தவும், மீளாய்வு செய்கிறது. தரமான வகுப்பறை நிகழ்வுகளுக்குப் பயன்படும்வகையில் கருத்தரங்குகள், பணிமனைகள், ஆய்வரங்குகள் முதலிய செயல்திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன.

களஆய்வு, குறைதீர் கற்றல்சார் ஆய்வு செயல்ஆராய்ச்சி போன்றவற்றின் வாயிலாக மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தில் ஆராய்ச்சி முதலிடம் பெறுகிறது. மாணவர்களின் படித்தல் திறனை மேம்படுத்த புதுமையான செயல்திட்டங்கள்



வகுக்கப்பட்டுள்ளன. இச்செயல்திட்டங்கள் வகுப்பறைச் சூழ்நிலையில் செயல்படுத்தக் கூடிய வகையில் பன்முகப் பயன்களைத் தரக் கூடியதாக அமைந்துள்ளது. படித்தல் திறன் சார்ந்த ஆய்வுகள் ஆவணப்படுத்தப்பட்டு, அனைவருக்கும் தெரிவிக்கப்படுகிறது.

### 8.10. ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி

ஆங்கில ஆசிரியர்களின் தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டுத் திறன்களை மேம்படுத்தும் பொருட்டு பிரிட்ஷ் கவுன்சிலுடன் இணைந்து 240 ஆங்கில ஆசிரியர்களுக்கு ஐந்து நாள் பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

### 8.11. வாழ்வியல் திறன் கல்வி

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு வாரியத்தின் நிதியுதவியுடன், மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் 2011–12ஆம் ஆண்டில் அனைத்துவகையான உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளிலும் IX மற்றும் XIஆம் வகுப்புப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் வாழ்வியல் திறன் கல்வி பயிற்சியளிக்கப்பட்டது.

### 8.12. மேம்படுத்தப்பட்ட பள்ளி நலக்கல்வித் திட்டப் பயிற்சி

மாநிலத்தில் 17,000 பள்ளிகளில் 6, 7, 8ஆம் வகுப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு மேம்படுத்தப்பட்ட பள்ளி

நலக்கல்வித் திட்டப் பயிற்சி மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தால் வழங்கப்பட்டது. இப்பயிற்சியானது சர்க்கரை நோய், இருதய நோய்கள், நுரையீரல் பிரச்சினைகளையும், அவற்றைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைப் பற்றி ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இப்பயிற்சியின் வாயிலாக 36,000 ஆசிரியர்கள் பயனடைந்தனர்.

### 8.13. தேசிய மக்கள்தொகைக் கல்வி

தேசிய ஆசிரியர் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் நிதி உதவியுடன் மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் தேசிய மக்கள் தொகைக் கல்வித் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இதன் ஒரு பகுதியாக மாநிலம் முழுவதும் அரசு உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு 'விளம்பர சுவரொட்டி உருவாக்கும்' போட்டி மற்றும், 'பாத்திரமேற்று நடித்தல்' போட்டிகளை நடத்தியது.

இப்போட்டி பள்ளி, வட்டாரம், மாவட்டம், மாநில அளவில் நடத்தப்பட்டது. ஈரோடு மாவட்டம், பவானி அரசு பெண்கள் மேனிலைப் பள்ளி மாணவிகள் மாநில அளவிலும், தென்மண்டல அளவிலும் முதல் இடத்தில் தெரிவு செய்யப்பட்டனர். இம்மாணவியர்கள் தேசிய அளவில் "பெண் கருக்கொலை" என்னும் தலைப்பில் 'பாத்திரமேற்று நடித்தல்' போட்டியில் பங்கேற்று இரண்டாம் இடத்தைப் பெற்றனர்.



### 8.14. கல்வித்தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையம்

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம், முழுமையான தொழில் நுட்பக் கருவிகளுடன் கூடிய கல்வித் தொலைக்காட்சிப் படப்பதிவு நிலையத்தைக் கொண்டுள்ளது. இந்நிறுவனம், கல்வி தொடர்பான ஒலி–ஒளி நாடாக்களையும் குறுந்தகடுகளையும் உருவாக்கி வருகிறது. இவ்வாறு உருவாக்கப்படும் பெரும்பாலான காணொளி மென்பொருள்கள் தற்போது தமிழகப்பள்ளிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் செயல்வழிக்கற்றல், படைப்பாற்றல் கல்வி முதலிய கற்றல்முறைகளின் வகுப்பறை நிகழ்வுகள், புதுமையான உத்திகளை மையப்படுத்தி உள்ளன. இவை அரசுத் தொலைக்காட்சி மூலம் வாரந்தோறும் திங்கள் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் '**காண்போ□ கற்போம்**' என்னும் நிகழ்ச்சியாக ஒளிபரப்பப்பட்டு வருகின்றது.

### 8.15. ஒன்றியத்தில் சிறந்த பள்ளியைத் தேர்ந்தெடுத்தல்

சிறந்த செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தி வரும் பள்ளிகளை மற்றவர்களுக்கு எடுத்துகாட்டாகக் கூறி, ஒவ்வொரு பள்ளியும் சிறப்பாகச் செயல்படுவதற்காக விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. அதற்காக ஒவ்வோர் ஆசிரியர் பயிற்சி நிறுவனமும் மாவட்டத்திலுள்ள ஒரு ஒன்றியத்தைத் தேர்வுசெய்து அவ்வொன்றியத்தில் உள்ள அனைத்துத் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளும் கல்வியாளர்களால் பார்வையிடப் படுகிறது. பார்வையிட்ட பள்ளிகளில் அடிப்படை வசதி, மாணவர் சேர்க்கை,

அடைவுத்திறன், ஆசிரியர்களின் ஈடுபாடு, சமுதாய ஈடுபாடு முதலிய பல்வேறு காரணிகளைக் கொண்டு பள்ளிகள் தேர்வு செய்யப்படுகின்றன. தேர்வு செய்யப்பட்ட சிறந்த பள்ளிகளைப் பற்றித் தமிழ்நாடு பெற்றோர் ஆசிரியர் கழகச் ‘செய்தி’ இதழில் பள்ளிகளின் புகைப்படங்களும், கருத்துகளும் வெளியிடப்பட்டன. இவை மற்றப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சிறந்த பள்ளியாகச் செயல்பட ஊக்கம் அளிக்கிறது.

மேற்கண்ட அனைத்துச் செயல்திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதன் வாயிலாகத் தரமான கல்வி வழங்குவதை நோக்கமாகக்கொண்டு மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

### 8.16. நிதிநிலை அறிக்கை

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கென ஊதியம், பயிற்சிகள், திட்டங்களுக்காக மனிதவள மேம்பாட்டுத் துறையும் தமிழக அரசும் இணைந்து 2011–12 ஆம் ஆண்டிற்கு ரூ.53.72 கோடி ஒதுக்கிக் கொடுத்துள்ளது. தற்போது ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம் மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனமாக உயர்த்தப்பட்டுள்ளது. 2012–2013ஆம் நிதியாண்டுக்கென மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு ரூபாய் 63.46 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.



## 9.பள்ளிசாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்ககம்

### 9.1. முன்னுரை

தமிழ் நாட்டில் 15 வயதிற்கு மேற்பட்ட அனைவரும் எழுத்தறிவு பெறும் நோக்கில், பள்ளிசாரா மற்றும் வயதுவந்தோர் கல்வி இயக்ககம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மாநிலத்தினுடைய எழுத்தறிவு விழுக்காடு 80.33 ஆகவும், தேசிய அளவில் 74.04 ஆகவும் உள்ளது. தமிழ் நாட்டில் ஆண்களின் எழுத்தறிவு விழுக்காடு 86.81 ஆகவும், பெண்களின் எழுத்தறிவு விழுக்காடு 73.86 ஆகவும் உள்ளது. தமிழ்நாட்டின் மொத்த எழுத்தறிவு விழுக்காடு தேசிய எழுத்தறிவு விழுக்காட்டைக் காட்டிலும் அதிகமாக இருப்பினும், பெண்கள் எழுத்தறிவை உயர்த்த அதி முக்கியத்துவம் அளிக்க வேண்டியுள்ளது. தமிழ்நாட்டை முழு எழுத்தறிவு மாநிலமாக திகழச் செய்தலே முக்கிய குறிக்கோளாகும்.

இயக்குநர், ஒரு இணை இயக்குநர் மற்றும் 31 அலுவலகப் பணியாளர்களைக் கொண்டு இவ்வியக்ககம் செயல்படுகிறது. விழுப்புரம் மற்றும் ஈரோடு மாவட்டங்களில் 2 மாவட்ட வயது வந்தோர் கல்வி அலுவலர்களும், 4 அலுவலகப் பணியாளர்களும் பணி செய்கின்றனர்.

### 9.2 நோக்கம்

- தமிழ் நாட்டில் முழு எழுத்தறிவுத் திட்ட இலக்கை அடைதல்.

## 9.3 இலக்கு

- கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்தி, கல்வி அறிவுமிகுந்த சமுதாயத்தை உருவாக்குதல்.
- எழுத்தறிவு விழுக்காட்டில் ஆண் பெண் இடையில் நிலவும் வேற்றுமையை குறைக்கும் நோக்கத்துடன் மகளிர் எழுத்தறிவில் மிகப் பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளித்தல்.

## 9.4 குறிக்கோள்கள்

- கல்லாதோர் அனைவருக்கும் அடிப்படை எழுத்தறிவைப் புகட்டுதல்
- புதியதாகக் கற்றுக் கொண்டவர்களுக்கு கற்றலைத் தொடரும் வகையில் முறையான கல்விக்கு இணையான கல்வி அளித்தல்.
- தொழில் சார்ந்த பயிற்சி அளிப்பதுடன் அவர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு உதவுதல்
- புதியதாகக் கற்றுக் கொண்டோர் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து கல்வி கற்க வாய்ப்பளித்தல்.

## 9.5 இலக்குகளை அடையும் வழிமுறைகள்

*கற்கும் பாரதம் 2012*

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையத்தின் மூலம் **கற்கும் பாரதம் 2012** எனும் வயது வந்தோர்க்கான புதிய எழுத்தறிவு திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இத் திட்டம் தேசிய அளவில் மகளிர் எழுத்தறிவு நிலை 50 விழுக்காட்டிற்குக் குறைவாக உள்ள 365 மாவட்டங்களில் நடைமுறைப் படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில்



இத்திட்டம் விழுப்புரம், சேலம், தருமபுரி, ஈரோடு, பெரம்பலூர், திருவண்ணாமலை மற்றும் அரியலூர் ஆகிய ஏழு மாவட்டங்களில் செயல்படுத்தப் படுகிறது.

இத்திட்டம் மைய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் (75:25) செயல்படுத்தப்படுகிறது. மொத்த நிதி ஒதுக்கீடு 105.79 கோடி. இத்திட்டத்தினால் பயனடைவோர் எண்ணிக்கை 20,50,460.

அடிப்படை எழுத்தறிவு அளிப்பது மட்டுமல்லாமல் கற்போரின் திறனை மேம்படுத்தும் வகையில் தொழில் சார்ந்த பயிற்சிகள் அளிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டம் செயல்படும் 7 மாவட்டங்களில் 2001ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி 17,46,499 பேர்கள் எழுத்தறிவு பெறாதவர்கள் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேலும் 2010ஆம் ஆண்டு வீடுவாரியான கணக்கெடுப்பின்படி எழுத்தறிவு பெறாதவர்கள் 20,50,460 எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வாயிலாக இதுவரை 7,83,144 கல்லாதோர் எழுத்தறிவு பெற்றுள்ளனர். மீதம் உள்ள 12,67,316 கல்லாதோர்களுக்கு அடிப்படை எழுத்தறிவுப் பயிற்சி அளிக்கப்பட்டு 8,42,488 பேர் அடிப்படை எழுத்தறிவுத் தேர்வு எழுதியுள்ளனர்.

*அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வு*

தேசிய எழுத்தறிவு முனைப்பு ஆணையம் மற்றும் தேசிய திறந்தவெளிப் பள்ளியும் இணைந்து, கற்கும் பாரதம் எழுத்தறிவு

மையங்களில் கற்போர்க்கு அடிப்படை எழுத்தறிவு மதிப்பீட்டுத் தேர்வினை நடத்தி, எழுத்தறிவு பெற்றவர்கள் என்ற சான்று வழங்கப்படுகிறது. இதுவரை கற்கும் பாரதம் திட்டத்தினால் 7,83,144 பேர் அடிப்படை எழுத்தறிவு பெற்று அதற்கான சான்றிதழ்கள் பெற்றுள்ளனர்.



# 10. அரசுத் தேர்வுகள்

## 10.1. முன்னுரை

பள்ளிக் கல்வித் துறை சார்ந்த அரசுப் பொதுத் தேர்வுகளையும் மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த இதர அரசுத் தேர்வுகளையும் நடத்துகின்ற அரசின் அதிகார அமைப்பாக, அரசுத் தேர்வுகள் இயக்ககம் செயல்பட்டு வருகிறது.

## 10.2. தொலைநோக்கு

அரசுப் பொதுத் தேர்வுகளை சுதந்திரமாகவும், நியாயமாகவும் நடத்தி, தேர்வர்களின் தரத்தினைத் திறம்பட மதிப்பீடு செய்து, அவர்களுக்கு புகைப்படம் மற்றும் கூடுதல் ரகசியக் குறியீட்டுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்குதல்.

## 10.3 பொறுப்புகள்

பள்ளி இறுதி பொதுத் தேர்வுகளை நடத்துவதும், அத்தேர்வு முடிவுகளை உரிய காலத்தில் வெளியிடுவதும் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தின் தலையாய பணியாகும். இவ்வியக்ககம் 31 வெவ்வேறு வகையான தேர்வுகளை ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இவற்றுள் இடைநிலைக் கல்வி, மேல்நிலைக் கல்வி

பொதுத் தேர்வுகள் மற்றும் தொடக்கக் கல்விப் பட்டயத் தேர்வுகள் ஆகியன முக்கியமான தேர்வுகள் ஆகும்.

சென்னை, வேலூர், கடலூர், திருச்சி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் செயல்படும் ஏழு அரசுத் தேர்வுகள் மண்டலத் துணை இயக்குநர் அலுவலகங்களில் இடைநிலைத் தேர்வுகளுக்கான பள்ளி மற்றும் தனித்தேர்வர்களின் விண்ணப்பங்கள் வழங்கப்படுகின்றன. மேலும் அவ்வலுவலகங்கள் தத்தமது அதிகார வரையறைக்குட்பட்ட தேர்வு மையங்களுக்கு, தேர்வு சம்பந்தமான எழுது பொருட்கள் மற்றும் முன்பணம் வழங்கப்படுவதை கண்காணிப்பு செய்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் மேல்நிலை / இடைநிலைக் கல்விப் பொதுத்தேர்வுகள் மூன்று பருவங்களில் (மார்ச் / ஏப்ரல், ஜூன் / ஜூலை, மற்றும் செப்டம்பர் / அக்டோபர்) நடத்தப்படுகின்றன. ஏனைய தேர்வுகள் ஆண்டுக்கு ஒருமுறை நடத்தப்படுகின்றன.

நடப்புக் கல்வியாண்டில், மார்ச் 2012 மேல்நிலைக் கல்வித் தேர்வினை, 1974 தேர்வு மையங்களில் 8,23,599 மாணவர்கள் எழுதியுள்ளனர். ஏப்ரல் 2012 இடைநிலைக் கல்விச் சான்றிதழ் பொதுத் தேர்வினை 3032 தேர்வு மையங்களில் 11,47,530 மாணவர்களும் எழுதுகின்றனர்.



## 10.4 மார்ச்/ஏப்ரல் 2011–ம் ஆண்டில் நடைபெற்ற தேர்வுகளில் தேர்ச்சி சதவிகிதம்:-

| தேர்வுகள் | தேர்வெழுதிய தேர்வர்கள் எண்ணிக்கை | தேர்ச்சி பெற்றவர்கள் எண்ணிக்கை | தேர்ச்சி சதவிகிதம் |
|---|---|---|---|
| மேல்நிலை (+2). | 7,16,543 | 6,15,593 | 85.50 |
| இடைநிலை(SSLC) | 8,38,165 | 7,14,786 | 85.30 |
| மெட்ரிகுலேஷன் | 1,44,960 | 1,38,972 | 95.90 |
| ஆங்கிலோ இந்தியன் பள்ளி | 4,865 | 4,645 | 95.50 |
| ஓ.எஸ்.எல்.சி | 1,392 | 1,314 | 94.40 |

## 10.5 தேர்வரின் புகைப்படம் மற்றும் கூடுதல் இரகசியக் குறியீட்டுடன் கூடிய மதிப்பெண் சான்றிதழ் வழங்குதல் :

மேல்நிலை மற்றும் இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளை எழுதும் தேர்வர்களுக்குப் புகைப்படம் இருபரிமாணப் பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் இரகசியக் குறியீடுகளுடன் கூடிய சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு தமிழ்நாடு அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

முதன்முறையாக இவ்வாண்டு, தேர்வு சம்பந்தப்பட்ட ஆவணங்களான பெயர்பட்டியல், தேர்வுக்கூட நுழைவுச்சீட்டு மற்றும் வருகைப்பட்டியல் ஆகிய ஆவணங்கள் தேர்வர்களது

புகைப்படத்துடன் தயாரிக்கப்பட்டு தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது. தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் தேர்வரின் பெயர், பதிவெண், தேர்வெழுதும் பாடங்கள் மற்றும் தேர்வெழுத அனுமதிக்கப்பட்ட தேர்வு மையத்தின் பெயர் ஆகிய விவரங்கள் இடம்பெறுகின்றன.

முதன்முறையாக, இவ்வாண்டு மேல்நிலைத் தேர்வுக்கு வழங்கப்படும் அனைத்து வினாத்தாள்களும் இரு மொழிகளில் அச்சிடப்பட்டு வழங்கப்படுகிறது.

இதுவரையில் அதிகபட்சமாக மூன்று பாடங்களில் தோல்வியுற்ற தேர்வர்கள் மட்டுமே சிறப்புத் துணைத் தேர்வுக்கு அனுமதிக்கப்பட்ட நிலையை மாற்றி இனி மார்ச்/ஏப்ரல் பருவத் தேர்வுகளில் தோல்வியுற்ற அனைத்துப் பாடங்களையும் ஜூன்/ஜூலை பருவ சிறப்புத் துணைத் தேர்வில் எழுதுவதற்கு தேர்வர்கள் அனுமதிக்கப்படுவர்.

## 10.6.எட்டாம் வகுப்பு பொதுத் தேர்வினை (தனித்தேர்வர்களுக்கு) மீண்டும் தொடர்ந்து நடத்துதல்

வேலைவாய்ப்பு மற்றும் அடிப்படை நிலையில் பதவி உயர்வுக்காக தேவைப்படும் குறைந்தபட்சக் கல்வித் தகுதியை பெறுவதற்கு ஏதுவாகவும், ஓட்டுநர் உரிமம் பெறுவதற்காகவும் தனித்தேர்வர்களுக்கான எட்டாம் வகுப்பு பொதுத்தேர்வினை மீண்டும் தொடர்ந்திடும் வகையில் ஏப்ரல் 2012 முதல் நடத்தப்பட உள்ளது.



## 10.7 மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதிச் சான்றிதழ் வழங்குதல் :

அரசு பொதுத்தேர்வு மதிப்பெண் சான்றிதழ்களை தவற விட்டவர்களின் வேண்டுகோளுக்கிணங்க நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை பெற்றுக் கொண்டு மதிப்பெண் சான்றிதழ்களின் சான்றிட்ட நகல் மற்றும் மறுபிரதி மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படுகிறது.

## 10.8. புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்குதல்

அரசுத் தேர்வுகள் துறையால் நடத்தப்படும் 10 மற்றும் 12–ம் வகுப்பு தேர்வில் தேர்ச்சியுற்று தங்களது மேற்படிப்பை இம்மாநிலத்தை விட்டு வேறு எங்கேனும் தொடர விரும்பும் தேர்வர்களுக்குப் புலப்பெயர்ச்சிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது.

## 10.9 மதிப்பெண் சான்றிதழ்கள்

மார்ச் 2000 முதல் மேல்நிலை/இடைநிலை கல்வி பொதுத் தேர்வு மதிப்பெண் சான்றிதழ்கள் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய இருமொழி வடிவில் தேர்வர்களுக்கு வழங்கப்படுகிறது.

## 10.10. தேர்வு முடிவுகள்

மேல்நிலை/இடைநிலைக்கல்விப் பொதுத்தேர்வுகளுக்கான முடிவுகள், வெளியிடப்பட்ட நாளன்றே, மதிப்பெண்களுடன் இத்துறையின் இணையதளம் மற்றும் தனியார் இணைய தளங்களிலும் கிடைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

கைபேசியில் குறுஞ்செய்தி வடிவிலும் தேர்வு முடிவுகள் அனுப்பி வைக்கப்படுகின்றன.

### 10.11. மதிப்பெண் மறுகூட்டல் / விடைத்தாளின் அச்சுப்பகர்ப்பு நகல் வழங்குதல்

மேல்நிலை/இடைநிலை மற்றும் தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு ஆகிய தேர்வுகளுக்கான தேர்வு முடிவுகள் அறிவிக்கப் பட்டதும் தேர்வர்களின் விருப்பத்தின் பேரில், விடைத்தாட்கள் மறுகூட்டலுக்கு விண்ணப்பிக்க வாய்ப்பளிக்கப்படுகிறது.

மேல்நிலைக் கல்வி பொதுத் தேர்வுக்கு மட்டும் அத்தேர்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டவுடன் தேர்வர்களுக்கு விடைத் தாட்களின் அச்சுப்பகர்ப்பு நகல் வழங்குவதற்கும், மேலும் அவர்கள் விரும்பினால் அவர்களது விடைத்தாளினை மறுமதிப்பீடு செய்வதற்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

### 10.12. தமிழ்நாடு ஊரக மாணவர் திறனாய்வுத் தேர்வு

ஊரக மாணவர்களை ஊக்குவிக்கவும் மற்றும் அவர்களுக்கு அரசு வழங்கும் பயன்களை அளிப்பதற்காகவும், தமிழ்நாடு ஊரக மாணவர்களுக்கான திறனாய்வுத் தேர்வு ஆண்டுதோறும் நடத்தப்படுகிறது.

கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்புப் படிக்கும் ஊரக மாணவர்கள், அவர்களின் பெற்றோர் ஆண்டு வருமானம் ரூபாய்



ஒரு இலட்சத்திற்கும் மிகாமல் இருக்கும்பட்சத்தில், இத்தேர்வினை எழுத அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொரு மாவட்டத்திலும் 50 மாணவியர் மற்றும் 50 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு, ஆண்டொன்றுக்கு ரூ.1000 வீதம் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

### 10.13. தேசிய அளவிலான திறனறித் தேர்வு

தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் நடத்தப்படும் **தேசிய அளவிலான திறனறித் தேர்வினை** தமிழகத்தில் நடத்தும்பொருட்டு, அரசுத் தேர்வுகள் இயக்ககம் ஒருங்கிணைப்பு அங்கமாக செயல்பட்டு இத்தேர்வின் முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை நடத்துகிறது. ஏழாம் வகுப்புத் தேர்வில் 60% பெற்று மத்திய/மாநிலப் பள்ளிக்குழுமங்கள் சார்ந்த பள்ளிகளில் 8–ம் வகுப்பு பயிலும் மாணவர்கள் இத்தேர்வினை எழுதத் தகுதிபடைத்தவர்கள் ஆவர்.

முதல்நிலைத் தேர்வுக்கான முடிவுகள் தேர்வுத்துறையினால் வெளியிட்டபின்னர் தகுதியுள்ள தேர்வர்களுக்கு தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தால் இரண்டாம் நிலைத் தேர்வுக்கான தேர்வுகள் நடத்தப்பட்டு, தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு நேர்காணல் நடத்தப்படுகின்றது. இந் நேர்காணலில் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு 9–ம் வகுப்பு

முதல் ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு வரை உதவித்தொகை வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்படி, தமிழகத்தில் ஆண்டு தோறும் 285 மாணவர்கள் பலன் பெறுகின்றனர்.

## 10.14. தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகைத் திட்டம்

அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால், தேசிய வருவாய் வழி மற்றும் தகுதிப் படிப்பு உதவித் தொகை பெறுவதற்கான தேர்வு ஒன்று நடத்தப்படுகிறது. மதிப்பெண்கள் அடிப்படையிலும், இட ஒதுக்கீட்டின் அடிப்படையிலும் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

மத்திய / மாநில அரசுப் பள்ளிகள் / அரசு உதவி பெறும் பள்ளிகளில் ஏழாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று எட்டாம் வகுப்பில் பயிலும் (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பைச் சார்ந்த மாணவர்கள் 50% ஏனையோர் 55% மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்) மாணவர்களது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் ரூ.1,50,000/–க்கு மிகாமல் இருக்கும் பட்சத்தில், ஆண்டொன்றுக்கு ரூ.6000/– (மாதந்தோறும் ரூ.500 வீதம்) உதவித்தொகையாக ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை வழங்கப்படும். இத்திட்டத்தின் கீழ் தமிழகத்தில் ஆண்டுதோறும் 6695 மாணவர்களுக்குப் படிப்புதவித் தொகை வழங்கப்படுகிறது.



## 10.15. மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளை நடத்துதல்.

மைய அரசுப் பணியாளர் தேர்வாணையம் மற்றும் பணியாளர் தேர்வாணையக் குழுமத்தினால் நடத்தப்படும் தேர்வுகளுக்கு, சென்னை மையத்திற்கு அரசுத் தேர்வுகள் துறை பொறுப்பேற்று ஆண்டுதோறும் நடத்தி வருகிறது. இதில், இந்திய ஆட்சிப் பணித் தேர்வு மிகவும் பெருமை மிக்கது ஆகும்.

ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்படும் தேர்வுகளுக்கான மந்தணப் பணிகள் இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## 10.16 மதிப்பெண் சான்றிதழில் பயிற்று மொழியினை குறிப்பிடுதல்

மாணவர்களுக்கு வழங்கப்படும் மேல்நிலை/ எஸ்.எஸ்.எல்.சி/தொடக்கக் கல்வி பட்டயத் தேர்வு சான்றிதழ்களில் பயிற்று மொழியினைக் குறிப்பிட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

## 10.17. மதிப்பெண் அட்டவணைப் பதிவேடுகளை மின்னனு முறையில் பராமரித்தல்

மதிப்பெண் அட்டவணைப் பதிவேடுகளை மின்னனு முறையில் பராமரிக்க முதற் கட்டமாக ரூ.20 இலட்சங்கள் பெறப்பட்டு,

பணிகள் நடைபெற்று வருகின்றன. எல்காட் நிறுவனம் மூலம் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 10.18. இணைய வழி மூலமாக மதிப்பெண் சான்றிதழின் உண்மைத் தன்மை சரிபார்த்தல்

மாணவர்கள்/ நியமன அலுவலர்கள் /கல்வி நிறுவனங்கள் மற்றும் பிறரிடமிருந்து பெறப்படும் மதிப்பெண் சான்றிதழ்களின் உண்மைத் தன்மையினை இணையதள வழியாக சரிபார்ப்பதற்கான திட்டப் பணிகள் முன்னேற்ற நிலையில் உள்ளது. எல்காட் மற்றும் தேசியத் தகவல் மையம் ஆகிய நிறுவனங்களின் உதவியுடன் இத்திட்டத்தினை நிறைவேற்றிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

### 10.19. வலைதளம்

இத்துறையால் நடத்தப்படும் பல்வேறு தேர்வுகளுக்கான கால அட்டவணை, சான்றிட்ட மதிப்பெண் நகல் மற்றும் மறுபிரதிச் சான்றிதழ் கோருவதற்கான வின்னப்பப் படிவம் மற்றும் கட்டண விவரம், மாதிரி வினாத்தாட்கள், மேல்நிலை/இடைநிலைக் கல்விப் பொதுத் தேர்வுகளுக்கான முந்தைய ஆண்டுகளின் வினாத்தாட்கள், பத்தாம் வகுப்பு தனித் தேர்வர்களுக்கான அறிவியல் பாட செய்முறை வகுப்புக்கான விண்ணப்பம் மற்றும் அறிவுரைகள் ஆகியவை மாணவர் சமுதாயம் பயன்பெறும் வகையில் www.tn.gov.in/dge என்ற வலைதள முகவரியில் தகவல்கள் அளித்து வருகிறது.



### 10.20. நிதிநிலை

2011–2012–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின்படி, இத்துறைக்கென ரூ.74.55 கோடி ஒதுக்கீடு பெறப்பட்டது. மேலும், பெரும்பணிகளுக்காக கூடுதலாக ரூ.2.18 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2012–2013–ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், இத்துறையின் மேம்பாட்டிற்காக, கடந்த ஆண்டைவிட நிதி ஒதுக்கீடு, 9.95% உயர்ந்து, ரூ.82.79 கோடியும், பெரும் பணிகளுக்காக ரூ.60 இலட்சமும் ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது.

மார்ச்/ஏப்ரல்–ல், அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் நடத்தப்படும் மேல்நிலை மற்றும் இடைநிலைப் பொதுத் தேர்வுகளை நியாயமாகவும், திறமையாகவும் நடத்திடும் பொருட்டு மாவட்ட அளவில் அமைக்கப்பட்ட மாவட்ட ஆட்சியரின் தலைமையிலான குழுவால் தேர்வு மையங்களை கண்காணித்து முறைகேடு நடவாமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், சென்னை அண்ணா பல்கலைக் கழகப் பேராசிரியர்களும் முக்கிய பாடங்களுக்கான தேர்வுகளைக் கண்காணிக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறார்கள். அதேபோல், பள்ளிக் கல்வித் துறையைச் சார்ந்த இணை / துணை இயக்குநர்கள், மாவட்டங்களில் தேர்வு மையங்களை திடீர் ஆய்வு மேற்கொண்டு, தேர்வுகள் செவ்வனே நடைபெறுவதை கண்காணிக்கும் பொருட்டு மாவட்டங்களுக்கு அனுப்பப் படுகிறார்கள். இத்துடன் ஒவ்வொரு மாவட்டத்திலும்,

முதன்மை/மாவட்டக் கல்வி அலுவலர்களின் தலைமையின் கீழ் பறக்கும்படை உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டு, தேர்வு மையங்கள் பார்வையிடப்படுகின்றன. இதனால், தேர்வுகளை எவ்வித புகார்களுக்கும் இடமின்றியும், சுமூகமாகவும், திறம்படவும் அரசுத் தேர்வுத் துறை நடத்தி வருகிறது.



# 11. ஆசிரியர் தேர்வு வாரியம்

## 11.1. முன்னுரை

ஆசிரியர் தேர்வு வாரியம் 1987ல் தரமும் , திறமையும் மிக்க ஆசிரியர்களை அரசு பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு தெரிவு செய்ய உருவாக்கப்பட்டது. இவ்வாரியம் பல்வேறு வகையான நியமனமுறைகள் மூலமும் மற்றும் நியமன அலுவலர்களின் தேவைக்கேற்பவும் அரசின் கொள்கை முடிவின்படி பல்வேறு வகையான ஆசிரியர்களைத் தெரிவு செய்து வருகிறது. அனைத்து நியமனங்களும், விளம்பர வெளியீடு, பாடத் திட்டம், வினாத்தாட்கள் மற்றும் போட்டி எழுத்துத் தேர்வு முதலான நடைமுறைகள் மூலம் தெரிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இதுவரை இவ்வாரியம் மூலம் 1,03,351 ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக அனைவரும் அறியும் வண்ணம் நியமனங்கள் சார்ந்த அனைத்து விவரங்களும் இவ்வாரிய இணையதளமான www.trb.tn.nic.in-ல் வெளியிடப்படுகிறது.

## 11.2. தொலைநோக்கு

சிறந்த மற்றும் தகுதி வாய்ந்த நபர்களை ஈர்க்கும் பொருட்டு ஆசிரியர் தேர்வு வாரியம் உயர்தரமான மற்றும் செம்மையான செயல்முறைகளை பின்பற்றி வருகிறது. இதனை மேற்கொள்ளும் பொருட்டு இவ்வாரியம் கீழ்க்கண்ட முயற்சிகளை துவங்கியுள்ளது.

- நியமனங்கள் சார்ந்த அனைத்து பணிகளும் கணினி மயமாக்குதல்

- இணையதளத்தின் மூலம் விண்ணப்பங்களை பதிவு செய்யும் முறை

- அனைத்து நியமனங்களுக்கும் தேர்வுக் கட்டணங்களை செலுத்துச்சீட்டு மூலம் அரசுடமையாக்கப்பட்ட வங்கிகளில் செலுத்த வழி வகை செய்யப்பட்டுள்ளது.

## 11.3 ஆசிரியர் தகுதி தேர்வு

குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி சட்டம் – 2009ன்படி ஆசிரியர் தகுதி தேர்வு நடத்த ஆசிரியர் தேர்வு வாரியம் முகமையாக நியமிக்கப்பட்டுள்ளது. முதன்முறையாக இவ்வாரியம் ஆசிரியர் தகுதித் தேர்வினை 2012–2013ல் நடத்தவுள்ளது.

## 11.4 செயல் திட்டங்கள்

ஆசிரியர் தேர்வு வாரியம் துவங்கப்பெற்றது முதல் இவ்வாரியத்தால் அரசுப் பள்ளிகள்/அரசு கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்கள் / விரிவுரையாளர்கள் எண்ணிக்கை இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்சமயம் கீழ்க்கண்ட பணியிடத்திற்கான பணியாளர்களை இவ்வாரியம் தெரிவு செய்யவுள்ளது.



| அ. **பள்ளிக் கல்வி இயக்ககம்** | | |
|---|---|---|
| 1. | இடைநிலை ஆசிரியர்கள் | 7194 |
| 2. | சிறப்பு ஆசிரியர்கள்<br>(உடற்கல்வி, ஓவியம், தையல் மற்றும் இசை) | 1555 |
| 3. | பட்டதாரி ஆசிரியர்கள் | 18704 |
| 4. | முதுகலை ஆசிரியர்கள் | 4142 |
| 5. | கணினி ஆசிரியர்கள் | 193 |
| 6. | வேளாண் ஆசிரியர்கள் | 25 |
| 7. | வட்டார வள மைய ஆசிரியர்கள் | 634 |
| 8. | உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் | 34 |
| 9. | மாவட்ட ஆசிரியர் பயிற்சி நிறுவன முதுநிலை விரிவுரையாளர்கள் | 34 |
| | **மொத்தம்** | **32515** |
| | **ஆ. கல்லூரி கல்வி இயக்ககம்** | |
| 1 | தொழில்நுட்பக் கல்லூரி உதவி பேராசிரியர்கள் | 154 |
| 2. | தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்கள் | 139 |
| 3. | கலை மற்றும் அறிவியல் கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் | 1025 |
| | **மொத்தம்** | **1318** |
| | **இ. இதர துறைகள்** | |
| 1. | சட்டக் கல்லூரி விரிவுரையாளர்கள் | 45 |
| 2. | பட்டதாரி ஆசிரியர்கள் (இதர துறைகள்) | 4006 |
| | **மொத்தம்** | **4051** |
| | **நிகர மொத்தம்** | **37884** |

ஆசிரியர் தேர்வு வாரியம், புதிய தேர்வுக் கொள்கையான எழுத்து தேர்வின் மூலம் இடைநிலை, பட்டதாரி மற்றும் முதுநிலை ஆசிரியர்களைதேர்வு செய்யும்.

மேற்கூறிய குறிக்கோள்களின் மூலம், அரசு பள்ளிகள் மற்றும் கல்லூரிகளின் கற்பித்தல் மற்றும் கற்றலின் தரத்தினை உயர்த்த வெளிப்படையான வகையில் திறமையான ஆசிரியர்களை, ஆசிரியர் தேர்வு வாரியம் தேர்வு செய்யும்.



# 12. தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம்

## 12.1. முன்னுரை

கல்வி கற்றலில் இன்றியமையாத கருவி பாடநூல் ஆகும். பாடநூல்களை தனியார் அச்சிட்டு விநியோகிக்கும் நிலை இருந்தபோது, விநியோகித்தலில் கால தாமதம், செயற்கையான பாடநூல் பற்றாக்குறை, அதிக விலை ஆகிய குறைகள் காணப்பட்டன. மேலும், பாடநூல்களில் வேறுபாடுகளும் இருந்தன. இவற்றை நீக்கும் பொருட்டும், நியாயமான விலையில், சரியான நேரத்தில் பாடநூல்கள் மாணவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்யும் பொருட்டும், **1969–**ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் ஏற்படுத்தப்பட்டது. இக்கழகத்தின் மூலம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கு தேவைப்படும் 7.5 கோடி முதல் 8 கோடி வரை பாடநூல்கள் அச்சடிக்கப்படுகின்றன. இதற்காக, ஆண்டிற்கு தோராயமாக ரூ.175 கோடி வரை செலவு ஏற்படுகிறது. இச்செலவினத்தை தமிழ்நாடு அரசு, பாடநூல் கழகத்திற்கு ஈடு செய்கிறது.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், தொழில் நுட்ப அலுவலர்கள் மற்றும் உதவியாளர்களின் உதவியுடன் மேலாண்மை இயக்குநரால் திறம்பட நிர்வகிக்கப்படுகிறது. மேலும், இக்கழகத்தின் 22 மண்டல அலுவலகங்களின் மூலம் பாடநூல்கள் மாநிலம் முழுவதும் வழங்கப்படுவது கண்காணிக்கப்படுகிறது.

## 12.2. தொலைநோக்கு

பள்ளி மாணவர்களின் அதிகரிக்கும் தேவைக்கேற்ப, மேம்பட்டஅச்சுத் திறனுடன் கூடிய, பல வண்ணங்கள் கொண்ட பாடநூல்கள் நிர்ணயிக்கப்பட்ட அளவுகளில் அச்சிட்டு வழங்குதல்.

## 12.3. நோக்கங்கள்

- தரமான பாடநூல்களை மாணவர்களுக்கு இலவசமாகவும், நியாயமான விலையில் வழங்குதல்
- பாடப்புத்தகங்களை மாணவர்களுக்கு தாமதமின்றி சரியான நேரத்தில் கிடைப்பதை உறுதி செய்தல்
- புதிய தொழில் நுட்ப உதவியுடன் மாணவர்களுக்கு தரமான புத்தகங்களை வழங்குதல்

## 12.4. தமிழ் மற்றும் பிறமொழி வெளியீடுகள்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் கீழ்க்காணும் நூல்களை அச்சிட்டு வெளியிடுகிறது

- 1 முதல் 12 வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கான அனைத்துப் பாடநூல்கள்
- 1 முதல் 5 வகுப்புகளுக்கான செயல்வழிக் கற்றல் அட்டைகள்
- 10 முதல் 12 வகுப்பு மாணவர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தினரால் வெளியிடப்படுகின்ற வினா வங்கி, தீர்வுப் புத்தகம், மாதிரி வினாத்தாள் ஆகியவை.



- ஆசிரியர் பட்டயப் படிப்புக்கான வளநூல்கள்
- தொழில் நுட்பக் கல்லூரிகளில் பொறியியல் பட்டயப் படிப்பு பயிலும் மாணவர்களுக்கான 1 மற்றும் 2–ஆம் பருவ பாடநூல்கள்
- ஆதிதிராவிடர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறையின் கீழ் இயங்கும் பள்ளி மாணவர்களுக்கு 10 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான சிறப்பு வழிகாட்டி நூல்கள்
- தேசிய பங்குச் சந்தை நிறுவனத்தால் நடத்தப்படும் 9 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான நிதி சார்ந்த கல்வி அறிவு புத்தகங்கள் வெளியிடுதல்.

பாடநூல்கள் தமிழ், ஆங்கிலம், மற்றும் சிறுபான்மை மொழிகளில் வெளியிடப்படுகின்றன. சிறுபான்மை மொழிகளில் பயிலும் 1 முதல் 10 ஆம் வகுப்பு வரையிலான மாணவர்களுக்கு, தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது ஆகிய நான்கு சிறுபான்மை மொழிகளில் மொழி நூல்களும் பாடநூல்களும் பாடநூல் கழகத்தால் வெளியிடப்படுகின்றன. மேலும் சமஸ்கிருதம் மற்றும் அரபு மொழிகளில் 6 முதல் 10 வகுப்பு வரையிலான மொழிநூல்களும், தெலுங்கு, மலையாளம், கன்னடம் மற்றும் உருது மொழிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கு மொழிநூல்களும் வெளியிடப்படுகின்றன.

## 12.5. மாநிலக் கல்வியியல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம், மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரியம் ஆகியவற்றின் ஒப்புதலோடு அச்சிடுதல்

பாடநூல்கள் அனைத்தும் மாநில கல்வியியல், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் கலைத்திட்டம் மற்றும் பாடநூல் குழுவினரால் ஒவ்வொரு ஆண்டும் மீள்பார்வை செய்யப்பட்டு, திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, மாநில பொதுப் பள்ளிக் கல்வி வாரியத்தின் ஒப்புதலோடு குறுந்தகடுகள் மூலம் அச்சாக்கத்திற்கு அனுப்பப்படுகின்றது.

## 12.6. ஏற்பாடுகள்

மாணவர்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் பாடநூல்கள் வழங்குவதை உறுதி செய்யும் பொருட்டு, பாடநூல் கழகம் முன்கூட்டியே தேவைக்கேற்ப அச்சகத்தாரின் பட்டியலை தயார் செய்து அவர்கள் மூலம் அச்சுப் பணியினை மேற்கொள்கிறது. தற்போது இரண்டு வருட காலத்திற்கு திறந்த ஒப்பந்த புள்ளிகள் மூலமாக 122 அச்சகத்தினர் உறுதி செய்யப்பட்டு இருக்கின்றனர். இந்த அச்சகத்தினர், தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனத்தால் வழங்கப்படும் 80 ஜிஎஸ்எம் தரத்துடனான காகிதத்தில் வெப்– ஆப்செட், ஷீட் பெட் அச்சு முறையில் அச்சிடுகிறார்கள். இக்கழகம் ஆண்டுதோறும் 24000 மெட்ரிக் டன் 80 ஜிஎஸ்எம் காகிதங்களை வாங்குகிறது.

அச்சிடப்பட்ட புத்தகங்கள் பள்ளிக் குழந்தைகளைச் சென்றடையும் பொருட்டு அச்சகத்தினரால் நேரடியாக, மாவட்ட



அளவில் அமைக்கப்பட்டுள்ள மையங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இதற்காக தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் சொந்தமாக உள்ள 5 கிடங்குகளையும், 17 வாடகைக் கிடங்குகளையும் பயன்படுத்துகிறது. பள்ளிக் கல்வி இயக்ககம் மற்றும் தொடக்கக் கல்வி இயக்ககத்தால் தெரிந்தெடுக்கப்பட்ட 64 மையங்களின் மூலம் பாடநூல்கள் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

## 12.7. பிற மாநிலங்களுக்கு தமிழ்ப் பாடநூல்கள் விநியோகம்

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம், பிற மாநில தமிழ் மாணவர்களுக்கு பயன்படும் வகையில் இலவசமாக பாடநூல்களை வழங்குகின்றது. ஆந்திரா, புதுச்சேரி, மும்பை மாநகராட்சி, டெல்லி தமிழ்ச் சங்கம், அகமதாபாத் மாநகராட்சி, அந்தமான் – நிக்கோபர் நிர்வாகம், தமிழ் ஐக்கிய சங்கம், கொச்சி ஆகிய தமிழ் அமைப்புகளுக்கு தமிழ்ப் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன.

## 12.8. முப்பருவ முறையின் கீழ் பாடநூல்கள்

மாணவர்களின் புத்தகச் சுமையைக் குறைப்பதற்காக, 1 முதல் 8 வகுப்புகள் வரை 2012–13–ஆம் கல்வி ஆண்டு முதல், முப்பருவ பாடநூல்கள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த புதிய முறையில், பல வண்ணங்கள் கொண்ட தொகுப்புப் புத்தகங்கள், மூன்று பருவங்களுக்கும் தனித்தனியே அச்சிடப்படுகின்றன.

2012–13– ஆம் கல்வி ஆண்டில் இக்கழகத்தின் மூலம் 8 கோடி பாடநூல்கள் முப்பருவ முறையில் தோராயமாக ரூ.175 கோடி

செலவில் அச்சிட்டு விநியோகிக்கப்பட உள்ளது. இதற்கான மொத்த செலவினையும் தமிழ்நாடு அரசு ஏற்கிறது.

### 12.9. இணையதளத்தில் பாடநூல்கள்

தமிழ்நாடுப் பாடநூல் கழகம் வெளியிடும் பாடப்புத்தகங்கள் www.textbooksonline.tn.nic.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படுகின்றன. இந்த வசதியின் மூலம் மாணவர்களின் வசதிக்கேற்ப புத்தகங்களை பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும்.

தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் பாடநூலின் தரத்தினை மேம்படுத்தவும், அச்சிடப்பட்ட புத்தகங்கள் மாணவர்களுக்கு உரிய நேரத்தில் சென்றடையவும் உறுதி செய்கிறது. மேலும், இக்கழகம் 2013–14 கல்வி ஆண்டில் மாணவர்களுக்கு, தொழில் நுட்பங்களைக் கொண்டு கணினி வாயிலாகக் கற்றலில் துணைபுரிய உள்ளது.



## 13. பொது நூலகங்கள்

### 13.1. முன்னுரை

பொது நூலகங்களின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் 1972–ல் பொது நூலக இயக்ககம் உருவாக்கப்பட்டது. குறைந்த செலவில் அதிக வாசகர்களுக்கு சிறந்த வாசிப்பு வசதிகளை வழங்குதல் என்ற இலக்குடன் ‘‘தமிழ்நாடு பொது நூலகச் சட்டம், 1948’’–ன்படி தமிழ்நாட்டில் பொது நூலகங்கள் நிறுவப்படுகின்றன.

சென்னை நகரத்தின் மையப் பகுதியில் அமைந்திருக்கும் கன்னிமாரா பொது நூலகம் தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பதாகும். கன்னிமாரா பொது நூலகம், மாநில மைய நூலகமாவும் மற்றும் இந்தியாவில் உள்ள நான்கு தேசிய வைப்பு நூலகங்களில் ஒன்றாகவும் உள்ளது. மேலும், தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரஸ்வதி மகால் நூலகம்–தஞ்சாவூர், டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம்–சென்னை, மற்றும் மறைமலையடிகள் நூலகம்–சென்னை, ஆகிய மூன்று பழமை வாய்ந்த புகழ்பெற்ற நூலகங்களும் தமிழ்நாட்டில் உள்ளன.

பொது நூலக இயக்கக நிர்வாக கட்டுப்பாட்டின் கீழ் தமிழகமெங்கும் 4042 நூலகங்கள் செயல்படுகின்றன.

| வ. எண். | நூலகங்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாவட்ட மைய நூலகங்கள் | 32 |
| 2. | கிளை நூலகங்கள் | 1664 |
| 3. | நடமாடும் நூலகங்கள் | 10 |
| 4. | ஊர்ப்புற நூலகங்கள் | 1795 |
| 5. | பகுதி நேர நூலகங்கள் | 539 |
| 6. | கன்னிமாரா (மாநில மைய) பொது நூலகம் | 1 |
| 7. | அண்ணா நூற்றாண்டு நூலகம் | 1 |
| | மொத்தம் | 4042 |

### 13.2 மாவட்ட நூலக ஆணைக்குழு:

தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948–ன்படி பொது நூலகங்களை அமைக்கவும், அவற்றினை நிர்வகிக்கவும், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மாவட்ட நூலக ஆணைக்குழு அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்ட நூலக ஆணைக்குழுவும் மதராஸ் நகர நகராட்சி சட்டம், 1919, மதராஸ் மாவட்ட நகராட்சி சட்டம், 1920 அல்லது மதராஸ் உள்ளாட்சி வாரியச் சட்டம், 1920 ஆகிய சட்டப் பிரிவுகளில் நிர்ணயிக்கப்பட்ட பகுதிகளில் வசூலிக்கப்படும் சொத்துவரி அல்லது வீட்டு வரி விதிப்பில் ரூபாய் ஒன்றுக்கு 3 பைசா வீதம் உபரி வரியாக நூலக வரி வசூல் செய்கிறது. பின்னர் 1972–ம் ஆண்டு முதல் ஒரு ரூபாய்க்கு 3 பைசாவிலிருந்து 5 பைசாவாகவும், அதன் பின்னர் 1992–ம் ஆண்டு முதல் ஒரு ரூபாய்க்கு 5 பைசாவிலிருந்து 10 பைசாவாகவும் நூலக வரி விகிதம் மாற்றப்பட்டது. தற்போது நூலக வரி 10 பைசாவாக வசூலிக்கப்பட்டு வருகிறது. 2011–2012–ஆம் நிதியாண்டில்



வசூலிக்கப்பட்ட நூலக வரித் தொகை ரூ.58.12 கோடி ஆகும். 2012–2013–ஆம் நிதியாண்டில் ரூ.68.12 கோடி நூலக வரியாக வசூலிக்க மதிப்பிடப்பட்டுள்ளது.

நூலக வரியாக வசூலிக்கப்படும் நிதியைக் கொண்டுதான், மாவட்ட நூலக ஆணைக்குழுக்களின் கீழ் உள்ள அனைத்து நூலகங்களும் பராமரிக்கப்படுகின்றன. இத்தொகையினைக் கொண்டு நூல்கள், பருவ இதழ்கள் நாளிதழ்கள் வாங்குதல், புதிய நூலக கட்டடம் கட்டுதல் மற்றும் பராமரித்தல், தளவாடங்கள் வாங்குதல், பணியாளர்களின் ஊதியம் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.155 கோடி செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2012–2013–ஆம் ஆண்டில் செலவினம் ரூ.165 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது.

### 13.3. குறிக்கோள்கள்

- 1000–க்கு மேல் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் நூலக வசதிகள் ஏற்படுத்துதல்.
- நூலகங்களில் சிறந்த அடிப்படை வசதிகளை ஏற்படுத்துதல்.
- நூலகங்களுக்கு தரமான வாசிப்பு பொருட்களான புத்தகங்கள், பருவ இதழ்கள் வழங்குதல்.
- நூலகச் சேவையை மேம்படுத்த நூலகங்களில் நவீனத் தொழில்நுட்பத்தினை நிறுவுதல்.
- உயர்கல்வி பெறும் மாணவர்களுக்கு ஏற்றவாறு மாவட்ட மைய நூலகங்களை மேம்படுத்துதல்.

- பழமையான மற்றும் அரிய வகை நூல்களை மின்னனு முறையில் படியெடுத்து பாதுகாத்தல்.

## 13.4. செயல்பாடுகள்

- அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடையும் வகையில் 1000—க்கு மேல் மக்கள் தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்திலும் பகுதிநேர நூலகம் திறத்தல்.
- நூலகங்களுக்கு புதிய புத்தகங்கள் மற்றும் பருவ இதழ்கள் வாங்குதல்.
- தேசிய அறிவுசார் மற்றும் தகவல் ஆணையத்தின் பரிந்துரைக்கிணங்க பொது நூலகங்களை அறிவுசார் மற்றும் தகவல் மையங்களாக மாற்றியமைத்தல்.
- பொது நூலகங்களில் செயல்படும் குடிமைப்பணி பயிற்சி மையங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்துதல்.
- நூலகங்களை இணைத்தின் மூலம் ஒருங்கிணைத்து வாசகர்களுக்கு நூல்கள் தேடலை எளிமையாக்குதல்.
- பழைமையான மற்றும் அரிய வகை நூல்களை மின்னனு முறையில் படியெடுத்து பாதுகாத்தல்.
- பொது நூலகச் சேவையை விரிவுபடுத்தும் வகையில் புத்தகப் பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கத்தின் துணையுடன் புத்தக கண்காட்சி நடத்துதல்.

## 13.5 கன்னிமாரா (மாநில மைய) பொது நூலகம், சென்னை

மதராஸ் மாகாணத்தின் கவர்னராக இருந்த கன்னிமாரா பிரபுவால் இந்நூலகம் 5.12.1896 அன்று ஆரம்பிக்கப்பட்டு அன்னாரின் பெயரில் கன்னிமாரா பொது நூலகம் என



அழைக்கப்படுகிறது. இந்நூலகம் 1.4.1950 முதல் மாநில மைய (State Central Library) நூலகமாகச் செயல்படுகிறது. நான்கு தேசிய வைப்பு நூலகங்களுள் (National Repository) ஒன்றாக இந்நூலகம் செயல்படுகிறது. நூல்கள் மற்றும் நாளிதழ்கள் விநியோகச் (பொது நூலகங்கள்) சட்டம், 1954 பிரிவுகளின்படி தேசிய கலஞ்சிய நூலகங்கள், இந்தியாவில் வெளியிடப்படும் நூல்கள், நாளிதழ்கள் மற்றும் பருவ இதழ்கள் ஆகியவற்றின் ஒரு நகலினை இலவசமாகப் பெற்று வருகிறது. 1955—ஆம் ஆண்டு இந்நூலகம் ஐக்கிய நாட்டு சபையின் அங்கமான யுனேஸ்கோ (UNESCO) நிறுவன தகவல் மையமாக உள்ளது எனவே, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் அதன் சார்பு நிறுவனங்களின் குறிப்பிட்ட சில பதிப்புகளின் சேமிப்பு மையமாகச் செயல்படுகிறது. மேலும், 1992ஆம் ஆண்டு முதல் ஆசிய வளர்ச்சி வங்கி பதிப்புகளின் சேமிப்பு மையமாகவும் உள்ளது. இந்நூலகம் 7.13 இலட்சம் நூல்களைக் கொண்டு பலதரப்பட்ட மக்களுக்கு சிறந்த நூலகப் பணிகளை ஆற்றி வருகின்றது.

கன்னிமாரா பொது நூலகம் ரூ.20 லட்சம் செலவில் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. மேலும் கன்னிமாரா பொது நூலகத்தைப் பற்றிய விவரங்கள் அனைத்தும் இணையத்தில் www.connemarapubliclibrarychennai.com என்ற வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. கன்னிமாரா பொது நூலகத்துடன் அனைத்து மாவட்ட மைய நூலகங்களும் இணையதளம் மூலம் ஒருங்கிணைக்கப் பட்டுள்ளன.

கன்னிமாரா பொது நூலகம் குறிப்புதவி பிரிவு, பருவ இதழ் பிரிவு, நூற்றொகை பிரிவு போன்ற பல்வேறு தனித்தனி பிரிவுகளுடன் பயனுள்ள சேவையினைச் செய்து வருகிறது. பழமையான மற்றும் அரிய நூல்களை மின்னனு முறையில் படியெடுத்து குறுந்தகட்டில் பதிவு செய்து எதிர்கால பயன்பாட்டிற்கு பாதுகாக்கும் பணி இந்நூலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

2011–2012–ஆம் ஆண்டில் 3.6 இலட்சம் வாசகர்கள் இந்நூலகத்தின் மூலம் பயனடைந்து உள்ளனர். மேலும் 2632 வாசகர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். தற்போது 1.29 லட்சம் வாசகர்கள் இந்நூலகத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். இந்நூலகம் தேசிய கலஞ்சிய நூலகமாக உள்ளதால், 2011–12ஆம் ஆண்டில் மைய அரசு பங்குத் தொகையாக திட்டத் தலைப்பில் ரூ.60 லட்சமும் திட்டமில்லா தலைப்பில் ரூ.35 லட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாநில அரசு பங்குத் தொகையாக திட்டத் தலைப்பில் ரூ.30 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

### 13.6 டாக்டர் உ.வே. சாமிநாத அய்யர் நூலகம், சென்னை

இந்நூலகம் 1942–ஆம் ஆண்டு சென்னையில் தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் 2128 கீழ்திசை ஓலைச் சுவடிகள், 855 கையெழுத்துப்படிகள் மற்றும் 28,465 அச்சிடப்பட்ட நூல்களும் உள்ளன. இந்நூலகத்தில் 19–ஆம் நூற்றாண்டில் பதிப்பிக்கப்பட்ட 1363 பழமையான நூல்கள் உள்ளன. இந்நூலகத்திற்கு மாநில அரசு



ஆண்டுதோறும் ரூ.4.71 இலட்சம் மான்யமாக வழங்கி வருகிறது. 2011–2012–ஆம் ஆண்டில் 1005 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் இந்நூலகத்தைப் பயன்படுத்தியுள்ளனர்.

### 13.7 தஞ்சாவூர் மகாராஜா சரபோஜி சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.

இந்நூலகம் நாயக்கர்கள் ஆண்ட காலத்தில் 1535–ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. 1918–ஆம் ஆண்டு முதல் இந்நூலகம் மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுபாட்டில் உள்ளது. இந்நூலகத்தில் சுமார் 46,000 எண்ணிக்கையில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம் மற்றும் மராத்திய மொழிகளில் கீழ்திசை ஓலைச்சுவடிகள், கையெழுத்துப் படிகள் உள்ளன. இந்நூலகத்தில் 52000 அரிய மற்றும் பழமையான நூல்கள் உள்ளன. இந்நூலகத்திற்கு ஆண்டு தோறும் மாநில அரசு ரூ.40 லட்சத்தை மான்யமாக வழங்கி வருகிறது. 2011–2012–ஆம் ஆண்டில் மொத்தம் 1.44 இலட்சம் பார்வையாளர்கள் இந்நூலகத்திற்கு வருகை புரிந்துள்ளனர்.

### 13.8 மறைமலையடிகள் நூலகம், சென்னை

இந்நூலகம் 1958–ஆம் ஆண்டு தொடங்கப் பட்டது. தற்போது இது கன்னிமாரா பொது நூலக வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. இந்நூலகத்தில் அரிய மற்றும் பழமையான நூல்கள் உள்ளன. இந்நூலகம் மாநில அரசிடமிருந்து ஆண்டுதோறும் ரூபாய் ஒரு இலட்சம் மான்யம் பெற்று வருகிறது. 2011–2012–ஆம் ஆண்டில்

1655 ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் இந்நூலகத்தை பயன்படுத்தியுள்ளனர் மற்றும் 3528 வாசர்கள் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர்.

இந்நூலகத்தில் உள்ள அரிய மற்றும் பழைமையான நூல்களை மின்னனு முறையில் படியெடுத்து பாதுகாக்க தமிழக அரசு 2011–2012–ஆம் ஆண்டு பகுதி II திட்டத்தின் கீழ் ரூ.10 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் 1400 அரிய மற்றும் பழமையான நூல்கள் மின்னனு முறையில் படியெடுத்து பாதுகாக்கப்படுகிறது.

## 13.9 இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை, கொல்கத்தா.

கொல்கத்தாவில் உள்ள இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை மைய அரசின் கலை மற்றும் பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் நிறுவனம் ஆகும். இவ்வறக்கட்டளை இந்திய நூலக வளர்ச்சிக்கு ஆண்டு தோறும் இணை மான்யமும் / இணையில்லா மான்யமும் அளித்து வருகிறது. பொது நூலக இயக்ககம் இவ்வறக்கட்டளையிலிருந்து ஆண்டுதோறும் இணைமான்யம் பெற்று அதன் மூலம் கருத்தரங்குகள் / பயிற்சிகள் நடத்துதல், நூலக கட்டடம் கட்டுதல், சிறுவர் பிரிவு ஏற்படுத்துதல், புதிய நூல்கள் வாங்குதல், கணினி மயமாக்குதல், நூலடுக்குகள் வாங்குதல், நூலக அடிப்படை வசதிகளை மேம்படுத்துல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2010–2011–ஆம் ஆண்டில்



அறக்கட்டளையிலிருந்து ரூ.600 இலட்சம் இணைமானியம் பெற்று செலவிடப்பட்டுள்ளது. மேலும் 50 ஆண்டுகள் நிறைவுபெற்ற நூலகங்கள் பொன்விழா நிகழ்ச்சிகள் கொண்டாட இணையில்லா மான்யம் பெற்று வருகிறது. 2011–2012–ஆம் ஆண்டில் ஐந்து நூலகங்கள் பொன்விழா கொண்டாட ரூ.5 இலட்சம் அனுமதிக்கப்பட்டு செலவிடப்பட்டுள்ளது.

## 13.10 புதிய நூலகம் திறத்தல்.

மக்கள் தொகை 1000க்கு மேற்பட்ட கிராமங்களில் பகுதி நேர நூலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. 2011–12–ஆம் ஆண்டில் 28 பகுதிநேர நூலகங்கள் திறக்கப்பட்டன. அனைவருக்கும் நூலகம் என்ற இலக்கினை அடைய பொதுமக்களின் தேவைக்கேற்ப பகுதிநேர நூலகங்கள் திறக்கப்படுகிறது.

## 13.11 நூல்கள் வாங்குதல்

பொது நூலகங்களுக்கு ஆண்டுதோறும் ரூ.15 கோடி மதிப்பில் ''நூல் தேர்வுக்குழு'' தேர்வு செய்யும் நூல்கள் வாங்கப்பட்டு வருகிறது.2010–2011–ஆம் ஆண்டில் ரூ.15 கோடி மதிப்பில் 3178 தலைப்புகளில் தமிழ் நூல்களும், 775 தலைப்புகளில் ஆங்கில நூல்களும் வாங்கப்பட்டன. 2011–2012–ஆம் ஆண்டில் ரூ.25 கோடி மதிப்பில் நூல்கள் வாங்கப்படும்.

### 13.12 நூலக கட்டடம் மற்றும் பராமரிப்பு

தமிழகமெங்கும் 4042 பொது நூலகங்கள் உள்ளன. இவற்றில் 408 நூலகங்கள் தனியார்களுக்குச் சொந்தமான வாடகைக் கட்டடங்களில் செயல்படுகின்றன. அனைத்து நூலகங்களையும் சொந்த கட்டடங்களில் செயல்படுத்துவதே பொது நூலகத் துறையின் தொலைநோக்குத் திட்டமாகும். இதனடிப்படையில் 2012–2013–ஆம் ஆண்டில் ரூ.25 கோடி மதிப்பீட்டில் புதிய நூலகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் மற்றும் ரூ.10 கோடி மதிப்பீட்டில் நூலகக் கட்டடங்களில் பராமரிப்பு பணி மேற்கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

### 13.13 நூலகர்களுக்கான பயிற்சி மற்றும் கருத்தரங்கு

கொல்கத்தாவில் உள்ள இராஜா ராம்மோகன் ராய் நூலக அறக்கட்டளை, இணைமான்ய நிதியுதவியின்கீழ் 2011–2012–ஆம் ஆண்டில், 320 நூலகர்களுக்கு எட்டு மையங்களில் ரூ. 8 லட்சம் செலவில் இரண்டு நாட்கள் பணியிடைப் பயிற்சி நடத்தப்பட்டது. மேலும், ஒன்பது மையங்களில் 900 நூலகர்களுக்கு ரூ.9/– இலட்சம் செலவில் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இவ்வாறான பயிற்சிகள் மற்றும் கருத்தரங்குகள் 2012–2013–ஆம் ஆண்டிலும் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.



### 13.14 கணினி மயமாக்குதல் மற்றும் ஒருங்கிணைத்தல்

நவீன தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தி பொது மக்களுக்கு நூலகச் சேவைகளை திறம்படவும் விரைவாகவும் செயல்படுத்திட இணையதளம் மற்றும் இ–மெயில் வசதிகளுடன் நூலகங்கள் கணினி மயமாக்கப்பட்டு வருகின்றன. இவ்வசதிகள் கன்னிமாரா மாநில மைய பொது நூலகம் சென்னை மற்றும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களில், இராஜா ராம்மோகன்ராய் நூலக அறக்கட்டளையின் இணை மான்ய நிதியுதவியின்கீழ் அமைக்கப்பட்டுள்ளன.

கன்னிமாரா பொது நூலகத்துடன் மாவட்ட மைய நூலகங்கள் இணையதளம் வாயிலாக இணைக்கப்பட்டு அந்நூலகங்களில் உள்ள நூல்களைப் பொது மக்கள் இணையதளம் மூலம் அறியும் வசதி செய்யப்பட்டுள்ளது. கிளை நூலக அளவில் இவ்வசதியை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 13.15 குடிமைப்பணிக் கல்வி மையங்கள்

சமூகம் மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் இளைய தலைமுறையினர் அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்தும் பல்வேறு போட்டித் தேர்வுகளுக்கு தயாராக உதவும் வகையில்

நூலகங்களில் அத்தேர்வுகளுக்கான நூல்களைக் கொண்ட ‘‘குடிமைப்பணிக் கல்வி மையம்’’ என்ற பிரிவு கன்னிமாரா பொது நூலகம், அனைத்து மாவட்ட மைய நூலகங்கள், வட்டத் தலைநகர் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள 150 நூலகங்கள், சிறிய நகரங்களிலுள்ள 50 நூலகங்கள் ஆக மொத்தம் 233 நூலகங்களில் செயல்பட்டு வருகின்றன. இம்மையங்களில் புதிய நூல்கள், கணினிகள் வழங்குதல் மற்றும் குளிர்சாதன வசதிகள் ஏற்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொண்டு குடிமைப் பணி மையங்கள் சிறப்பாக நடைபெற நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

### 13.16 சிறந்த நூலகர்களுக்கான விருது

ஆண்டுதோறும் தேசிய நூலக வார விழாவின்போது சிறப்பாகப் பணியாற்றும் நூலகர்களுக்கு நல்நூலகர் விருது வழங்கி கவுரப்படுத்தப்படுகிறது. இந்திய நூலக இயக்ககத்தின் தந்தை என போற்றப்படும் டாக்டர். சீ.ரா.ரங்கநாதன் அவர்களை கௌரவிக்கும் வகையில் ‘‘நல்நூலகர் விருது’’ 2012–ஆம் ஆண்டு முதல் ‘‘டாக்டர்.சீ.ரா.ரங்கநாதன் விருது’’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

### 13.17 செய்தி மடல்

பொது நூலக இயக்ககம் சார்பாக, ‘‘பொது நூலகச் செய்திமடல்’’ வெளியிடப்பட்டு வருகிறது. இச்செய்திமடலில் பொது நூலக இயக்ககத்தின் வளர்ச்சிப் பணிகள், நூலக இயக்கம்



தொடர்பான செய்திகள், மாவட்டச் செய்திகள், பொது மக்களுக்கு பயனுள்ள அரசாணைகள் மற்றும் கல்வி சம்பந்தப்பட்ட கட்டுரைகள் இடம் பெறுகின்றன. இம்மடல் கூடுதல் தகவல்கள் அடங்கிய புதிய பொலிவுடன் வெளிக்கொணர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

### 13.18 வாசகர் வட்டம்

நூலகச் செயல்பாடுகளில் பொது மக்கள் பங்கேற்கும் வகையில் ஒவ்வொரு நூலகத்திலும் கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், நூலக உறுப்பினர்கள் மற்றும் உள்ளூர் முக்கிய பிரமுகர்களைக் கொண்டு ‘‘வாசகர் வட்டம்’’ என்ற அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாசகர் வட்டம் வாயிலாக நூலக செயல்பாட்டை மேம்படுத்த புதிய நூல்கள் அறிமுகம், இலக்கியச் சொற்பொழிவு, புத்தகக் கண்காட்சி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி, வினாடி வினா போட்டிகள் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகள் மாவட்ட மைய மற்றும் கிளை நூலகங்கள் அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

### 13.19 நிதிநிலை

இவ்வியக்கத்திற்கு 2011–12ஆம் நிதியாண்டில் ரூ.49.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2012–13ஆம் நிதியாண்டில் ரூ.49.63 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொது நூலக இயக்கம் என்பது மக்கள் இயக்கமாகும். குழந்தைகள் முதல் முதியோர்கள் வரை வாழ்நாள் முழுவதும் சுயமாகக் கற்கும் வகையில் போதுமான மற்றும் பொருத்தமான படிக்கும் சாதனங்கள், நவீன தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் இவ்வியக்கம் மூலம் ஏற்படுத்தப்படுகிறது.

என். ஆர்.சிவபதி
பள்ளிக் கல்வி,விளையாட்டு
மற்றும் இளைஞர் நலன் துறை அமைச்சர்